கூட்டமைப்பின் இலக்குக்கு குந்தகம் விளைவிப்போரும் எம்முடன் உள்ளனர்
பக். 02

விலை ரூபா 20
பக்கங்கள் 28

# உதயன்

35°c - 29°c
தெளிவான வானிலை

சுடர் 31 | கதிர் 144 | வள்ளுவர் ஆண்டு 2047 | சித்திரை 05, திங்கட்கிழமை 18.04.2016

## மைத்திரி - மகிந்த இரகசிய சந்திப்பு

கொழும்பு, ஏப். 18
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கடந்த வாரம் இரகசியமாகச் சந்தித்துப் பேசியிருப்பதாக, கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.
நாடாளுமன்றத்தில் உள்ள பிரதமரின் செயலகத்தில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை, மகிந்த ராஜபக்ச சந்தித்துப் பேச்சு நடத்திய பின்னர், இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.
இந்தச் சந்திப்பின்போது, அரசியல் விவகாரங்களில் அரசின் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதாக, ஜனாதிபதிக்கு, மகிந்த ராஜபக்ச உறுதியளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.
அத்துடன், சீனாவுடனான உறவுகள் மற்றும் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ள சில சட்டங்கள் குறித்தும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.
மேலும், முன்னைய அரசின் பக். 24

# விசுவாசமாகச் செயலாற்றினால் இந்த ஆண்டுக்குள் நிரந்தரத் தீர்வு

### யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 18
நாங்கள் எமது மக்களைக் கைவிடமாட்டோம். விசுவாசமாக எல்லோரும் செயற்பட்டால், இந்த ஆண்டுக்குள் தீர்வு கிடைக்கும் என்பது என்னுடைய கணிப்பு.
இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன்.



கோப்பாய் இராச பாதையிலுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் இல்லத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது, பக். 23

## நள்ளிரவில் வீடு புகுந்து 19 பவுண் நகை திருட்டு

### கொக்குவிலில் சனியன்று துணிகரம்

யாழ்ப்பாணம், ஏப். 18
சமையல் அறையின் பின்பக்க யன்னல் கம்பியை வளைத்து வீடு புகுந்த திருடர்கள், சுமார் 19 பவுண் நகைகள், 15 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளதாகக் கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தத் திருட்டுச் சம்பவம் கொக்குவில், கே.கே.எஸ்.வீதி, 3 ஆம் கட்டைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இடம்பெற்றுள்ளது.
நேற்றுமுன்தினமிரவு 11 மணிக்கும் மறுநாள் அதிகாலை 3.30 மணிக்கும் இடையில் இத்திருட்டு இடம்பெற்றிருக்கலாம் என வீட்டு உரிமையாளர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.
வீட்டிலுள்ளவர்கள் நித்திரைக்குச் சென்ற நேரம் பார்த்து உள்நுழைந்த திருடர்கள், 4பவுண் தாலி உட்பட சுமார் 19 பவுண் நகைகள் வைக்கப்பட்டிருந்த கைப்பையை எடுத்துக் கிணற்றடிக்குக் கொண்டு சென்றுள்ளனர். அங்கு வைத்து நகைகள் மற்றும் பணத்தைத் திருடிவிட்டு பக். 24

## பொருத்து வீடு மக்களுக்கு பொருத்தமானதாக இல்லை

### கூட்டமைப்பின் நிலைப்பாடு இதுவென்கிறார் சம்பந்தன்

யாழ்ப்பாணம், ஏப். 18
பொருத்து வீடு எங்களது மக்களுக்குப் பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கவில்லை. இது தொடர்பில் எங்களது கருத்துக்களை முன்வைத்து நடவடிக்கை எடுப்போம்.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், பக். 25

## சமஷ்டி தமிழரின் கோரிக்கையல்ல

### இப்படிக் கூறுகிறது ஜே.வி.பி.

கொழும்பு, ஏப். 18
சமஷ்டி என்ற எண்ணக்கருவும் - கோரிக்கையும் தமிழ் மக்களின் கோரிக்கையென நாம் நம்பவில்லை. இது தமிழ் அரசியல் கட்சிகளின் கோரிக்கையென்றே பக். 23

## சிறுமி துஷ்பிரயோகம்; இளைஞனைத் தேடும் காவலூர் பொலிஸார்

யாழ்ப்பாணம், ஏப். 18
பாடசாலை செல்லும் பதின்ம வயதுச் சிறுமியைக் கூட்டிச் சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவரைத் தேடி வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட சிறுமியின் பெற்றோர் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். ஊர்காவற்றுறைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.
கோப்பாய் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் ஊர்காவற்றுறைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள உறவினர் ஒருவரின் வீட்டில் தங்கி நின்ற காலங்களில், அதே பகுதியைச் சேர்ந்த பதின்ம வயதுச் சிறுமியுடன் காதல் தொடர்பினைக் கொண்டிருந்தார். பக். 24

## மகிந்த ஆட்சி தொடர்ந்திருந்தால் தமிழ் மக்களின் நிலை படுமோசம்

### எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 18
மகிந்த ஆட்சி தொடர்ந்திருக்குமாக இருந்தால், தற்போதுள்ள நிலைமையை விட நூறு மடங்கு மோசமான நிலையில் தமிழ் மக்கள் இருந்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். அதனை எமது மக்கள் உணர வேண்டும் என்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.
காணி விடுவிப்பு - கைதிகள் விடுவிப்பில் தேசிய பாதுகாப்பைக் காரணம் காட்டி முட்டுக்கட்டை போடப்பட்டு வருகின்றதே என்று எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் கூறுகையில்,
உங்களுடைய கருத்தை நான் முழுமையாக ஏற்றுக்கொள்ள மாட்டேன். ஓரளவு உண்மை இருக்கின்றது. ஒன்றும் நடைபெறவில்லை என்று நீங்கள் கூற முடியாது. பல கருமங்கள் நடைபெற்றிருக்கின்றன. ஆனால் எமது மக்கள் நீண்ட காலமாக கஷ்டப்பட்டிருக்கின்றார்கள். போர் முடிந்து 7 வருடங்களாகின்றது.
போர் முடிந்த பின்னரும் மக்கள் பல இடங்களில் மீள்குடியேறவில்லை. இராணுவத்தினர் பக். 25

# வலி.வடக்கு தவிர 118 இடங்களில் ராணுவத்துக்குக் காணிகள் பறிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.18
யாழ்.குடாநாட்டில் மட்டும், வலி.வடக்கில் உள்ள உயர் பாதுகாப்பு வலயத்துக்கு மேலதிகமாக, 118 இடங்களில் படையினருக்குக் காணி வேண்டும் என முப்படையினராலும் கோரப்பட்டுள்ளதாக நில அளவைத் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
யாழ்.குடாநாட்டில் வலி. வடக்கில் உள்ள உயர் பாதுகாப்பு வலயத்தின் பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலத்துடன் மேலும் 115 இடங்களில் காணி வேண்டும் என முப்படையினராலும் கோரப்பட்டுள்ளன.
மேற்குறித்த காணிகளைப் படையினருக்குக் கையகப்படுத்தும் நோக்கில் அளவீடு செய்வதற்காக நில அளவைத் திணைக்களத்துக்கு விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
குறித்த எண்ணிக்கையின் பிரகாரம் வலி. வடக்கில் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பல ஆயிரம் ஏக்கர் உயர் பாதுகாப்பு வலயம் நீங்கலாக 3 நிலங்கள் கோரப்பட்டுள்ளன.
இதேபோன்று மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் 21 இடங்களும், வேலணை மற்றும் சாவகச்சேரி ஆகிய இரு பிரதேச செயலக எல்லைப் பரப்புகளுக்குள் தலா 16 இடங்களும் , ஊர்காவற்றுறை, சங்கானை, கோப்பாய் ஆகிய மூன்று பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் தலா 8 இடங்களும் கோரப்பட்டுள்ளன.
அத்துடன், சண்டிலிப்பாயில் 9 இடங்களிலும் நெடுந்தீவு, நல்லூர் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் தலா 6 இடங்களிலும், காரைநகரில் 5 இடங்களிலும், பக். 24

## புதிய பொலிஸ்மா அதிபர் இன்று தெரிவு

கொழும்பு, ஏப்.18
புதிய பொலிஸ்மா அதிபர் பதவிக்குப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் மூன்று பேருக்கும் அரசமைப்புச் சபை அழைப்பு விடுத்துள்ளது.
பிரதிப் பொலிஸ்மா அதிபர்களான சி.டி.விக்ரமரத்ன, பூஜித ஜெயசுந்தர மற்றும் எஸ்.எம்.விக்ரமசிங்க ஆகியோரை இன்று நாடாளுமன்றுக்கு சமுகமளிக்குமாறு பக். 24

# எதிர்காலச் சூழ்நிலைகள் அறிந்தே அடுத்த கட்ட அரசியல் செயற்பாடு

### ஈ.பி.டி.பியிலிருந்து விலகிய சந்திரகுமார் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 18
புதிய அரசியல் கட்சி ஆரம்பிக்கும் எண்ணமோ அல்லது வேறு அரசியல் கட்சியில் இணையும் எண்ணமோ எதுவும் இல்லை. தற்போதைய நிலையில் ஈ.பி.டி.பி.யிலிருந்து விலகியிருக்கின்றேன். எதிர்கால அரசியல் சூழ்நிலைகளைப் பொறுத்து நடவடிக்கைகள் அமையும்.



இவ்வாறு நாடாளுமன்றக் குழுக்களின் முன்னாள் பிரதித் தலைவரும், ஈ.பி.டி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான முருகேசு சந்திரகுமார் (அசோக் தோழர்) 'உதயனுக்குத்' தெரிவித்தார்.
தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, ஈ.பி.டி.பியில் இருந்து பக். 24

முச்சந்தி முரளி



காணி பறிப்பு ரகசியமா நடக்குது பாருங்கோ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# கூட்டமைப்பின் இலக்குக் குந்தகம் விளைவிப்போரும் எம்முடன் உள்ளனர்

## செய்தியாளர்கள் சந்திப்பில் சம்பந்தன் சீற்றம்

யாழ்ப்பாணம், ஏப். 18

எமது இலக்கு நோக்கிய பயணத்துக்குப் பலர் முட்டுக்கட்டை போடுகின்றனர். அவ்வாறு முட்டுக்கட்டை போடுபவர்கள் எமது பகுதியிலும் இருக்கின்றனர்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரினால் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ்பிரேமச்சந்திரன், சில தினங்களுக்கு முன்னர் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில், கூட்டமைப்பு தற்போதைய அரசுடன் இணக்க அரசியல் நடத்துகின்றது. இதனால் சாதாரணமாகச் செய்யக் கூடிய விடயத்தையும் செய்யாமல் இருக்கின்றது என்று தெரிவித்திருந்தார்' என்ற கேள்வியை நேற்றைய செய்தியாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் கேட்க முற்பட்டபோது, குறுக்கிட்ட எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன்,

> உங்களுக்கு நன்றாகத் தெரியும். நாங்கள் ஒரு பாதையில் இலக்குடன் போய்க் கொண்டிருக்கின்றோம். நாங்கள் போய்ச் சேரவேண்டும். நாங்கள் எடுக்கும் அந்த முயற்சிகளைப் பலர் தடை செய்கின்றனர்.

எல்லோரும் கேட்டுக் கொண்டிருப்பதற்குப் பதில் சொல்ல முடியாது. தினேஷ் குணவர்த்தன போல் அவரும் கேட்டுக் கொண்டிருக்கின்றார். குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கப் பார்க்கின்றனர். அதை விடுங்கள். உங்களுக்கு நன்றாகத் தெரியும். நாங்கள் ஒரு பாதையில் இலக்குடன் போய்க் கொண்டிருக்கின்றோம்.



நாங்கள் போய்ச் சேரவேண்டும். நாங்கள் எடுக்கும் அந்த முயற்சிகளைப் பலர் தடை செய்கின்றனர். அவ்வாறானவர்கள் எங்கள் பகுதியிலும் இருக்கின்றார்கள் - என்றார். (த-5-101)

## மைத்திரி— ஒபாமா சந்திப்புக்கு ஏற்பாடு

கொழும்பு, ஏப்.18

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்கும் இடையில் சந்திப்பு ஒன்றை ஒழுங்குபடுத்தும் இராஜதந்திர முயற்சிகள், கொழும்பிலும் - வோசிங்டனிலும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜப்பானில் நடக்கவுள்ள, வளர்ச்சியடைந்த நாடுகளின் (ஜி-7) மாநாட்டின் ஒரு பக்க நிகழ்வாகவே இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது. அடுத்த மாதம் 26 ஆம், 27 ஆம் திகதிகளில் ஜப்பானில், ஜி-7 நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாடு நடக்கவுள்ளது.

இந்த மாநாட்டில் அமெரிக்கா, ஜப்பான், பிரான்ஸ், பிரிட்டன், கனடா, இத்தாலி, ஜேர்மனி ஆகிய நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த மாநாட்டுக்கு சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, வியட்நாம் பிரதமர் ஆகியோருக்கு ஜப்பானியப் பிரதமர் அழைப்பு விடுத்துள்ளார்.

ஜி-7 மாநாட்டுக்குச் செல்லும், அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, 71 ஆண்டுகளுக்கு முன்னர், அமெரிக்காவின் அணுகுண்டு வீச்சுக்கு இலக்காகி அழிந்த ஹிரோஷிமா, நாகசாகி நகரங்களுக்கும் செல்லவுள்ளார்.

இரண்டு இலட்சம் மக்கள் கொல்லப்பட்ட இந்த நகரங்களுக்கு அமெரிக்க ஜனாதிபதிகள் எவரும் இதுவரை சென்றதில்லை என்பதுடன், இந்தத் தாக்குதலுக்காக மன்னிப்பும் கோரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதேவேளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஹிரோஷிமா, நாகசாகி நகரங்களுக்கும் செல்லக் கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (த-ஜ-5)

# எங்களை வழிநடத்துவதற்கு தினேஷுக்குத் தகுதியில்லை

## கூறுகிறார் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன்

யாழ்ப்பாணம், ஏப். 18

வடக்கு-கிழக்கும் இந்த நாட்டின் ஒரு பகுதிதான். அந்தப் பகுதியைப் பற்றிப் பேசினால், நாட்டைப் பற்றிப் பேசுகின்றேன் என்றுதான் அர்த்தம். தினேஷ் குணவர்த்தன மாத்திரம் வடக்கு-கிழக்கு தொடர்பிலா பேசுகின்றார் ? எங்களை வழிநடத்துவதற்கு அவருக்கு எதுவிதமான உரித்தும் - தகுதியும் இல்லை என்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

கோப்பாயில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். பொது எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன, இரா. சம்பந்தன் வடக்கு - கிழக்குப் பற்றி மாத்திரமே பேசுகின்றார். அவர் இந்த நாட்டின் எதிர்க்கட்சித் தலைவராகச் செயற்படவில்லை. வடக்கு-கிழக்கு மக்கள் சார்பாக மாத்திரமே செயற்படுகின்றார் என்று குற்றம் சுமத்தியுள்ளார். இந்தக் குற்றச்சாட்டுக்கு உங்களின் பதில் என்ன என்று கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தினேஷ் குணவர்த்தன பொது எதிர்க்கட்சி உறுப்பினர் என்று தன்னை வர்ணித்துக் கொள்கின்றார். அவர் கூறுகின்ற ஒவ்வொரு கருத்துக்கும் நான் பதில் கூற வேண்டிய அவசியம் இல்லை. தேவையுமில்லை. அவர் சொல்லும் ஒவ்வொரு கருத்துக்கும் நான் பதில் சொல்லவும் மாட்டேன்.

வடக்கு - கிழக்கு இந்த நாட்டைச் சேர்ந்த பிரதேசம். இந்த நாட்டின் ஒரு பகுதி. வடக்கு - கிழக்கு சம்பந்தமாக நான் நாடாளுமன்றத்தில் பேசினால் அல்லது வெளியில் பேசினால், இந்த நாட்டினுடைய ஒரு பகுதியைப் பற்றி நான் பேசுகின்றேன். அதிலே அர்த்தம் என்னவென்றால், இந்த நாட்டைப் பற்றி நான் பேசுகின்றேன்.

தினேஷ் குணவர்த்தன வடக்கு - கிழக்குப் பற்றிப் பேசுகின்றாரா ? தினேஷ் குணவர்த்தன பேசுவது தன்னுடைய சொந்தப் பகுதியைப் பற்றி.

நாங்கள் எமது நாட்டைப் பொறுத்த வரை - எமது நாட்டில் வாழ்கின்ற சகல மக்களையும் பொறுத்த வரை நாங்கள் மிகவும் அக்கறையாக இருக்கின்றோம். பேச வேண்டிய நேரங்களில் பேசுகின்றோம். இனிமேலும் பேசுவோம்.

தினேஷ் குணவர்த்தன எங்களை வழி நடத்துவதற்கு அவருக்கு எதுவிதமான உரித்தும் இல்லை. தகுதியும் இல்லை - என்றார்.

### ஜெனிவா விவகாரம்

ஜெனிவாத் தீர்மானத்துக்கு இலங்கை அரசு இணை அனுசரணை வழங்கியிருந்தது. ஆனால் இதுவரையில் அதன் முக்கியமான பரிந்துரையான, பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படவில்லை. இந்த அரசு ஜெனிவாத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் என்று எதிர்பார்க்கின்றீர்களா என்று எழுப்பிய கேள்விக்கு,

ஜெனிவாத் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். உண்மை அறியப்பட வேண்டும். உண்மையின் அடிப்படையில் நீதி வழங்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு பரிகாரம் வழங்கப்பட வேண்டும். நடைபெற்ற சம்பவங்கள் இனிமேலும் நடைபெறக் கூடாது. அதற்கு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். தக்க உத்தரவாதங்கள் வழங்கப்பட வேண்டும். இவை எல்லாம் ஏற்படுவதற்கு முக்கியமான வழி - முக்கியமான முடிவு ஒரு நிரந்தரமான-நியாயமான அரசியல் தீர்வு.

ஜுன் மாதம் 13 ஆம் திகதி தொடக்கம் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 32 ஆவது அமர்வு நடைபெறவுள்ளது. இலங்கை அரசு கடந்த ஒக்ரோபர் மாதம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை எந்தளவுக்கு நடைமுறைப் படுத்தியிருக்கின்றது என்பது தொடர்பில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் வாய்மொழிமூல அறிக்கையை 32 ஆவது அமர்வில் சமர்ப்பிக்கவேண்டும். அடுத்த ஆண்டு எழுத்து மூலமான அறிக்கையை சமர்ப்பிக்கவேண்டும். ஆகவே இந்தக் கருமங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். இதனை நிறைவேற்றுவோம் என்று இலங்கை அரசு சொல்கின்றது - என்றார். (த-5)

# வடக்கு அமைச்சரவை மாற்றம்: அனைவருடனும் பேசியே முடிவு

யாழ்ப்பாணம், ஏப். 18

வடக்கு மாகாண அமைச்சரவையை மாற்றுமாறு விடுக்கப்பட்டுள்ள கோரிக்கை தொடர்பில் முதலமைச்சர் - அமைச்சர்கள் - அவைத் தலைவர் - உறுப்பினர்களுடன் பேசப்பட்டே முடிவெடுக்கப்படும். இந்த விடயம் தொடர்பில் இதற்கு மேல் பேசுவதற்கு எதுவுமில்லை. இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண அமைச்சரவையை மாற்றுமாறு விடுக்கப்பட்டுள்ள கோரிக்கை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அது சம்பந்தமாக முதலமைச்சருடன், அமைச்சரவையுடன், அவைத் தலைவருடன், ஏனைய உறுப்பினர்களுடன் பேசப்படும். அது தேவையா ? இல்லையா ? தேவையென்றால் என்ன விதமாகக் கையாளப்படவேண்டும்என்ற விடயங்கள் பற்றி ஆராயப் படும். இரண்டரை வருடங்கள் முடிந்துள்ளபடியால் மீதி இரண்டரை வருடங்களுக்கு அமைச்சரவையை மாற்றியமைக்கலாம் என்ற கருத்தை முன்வைத்திருக்கின்றார்கள். அதில் 16 பேர்தான் கையெழுத்திட்டிருக்கின்றார்கள். அது அவர்களுடைய ஜனநாயக உரிமை. அது பரிசீலிக்கப்படும். அதுக்கு மேலதிகமாக அந்த விடயம் சம்பந்தமாகக் கூறுவதற்கு எதுவுமில்லை - என்றார். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் தேவைக்கு ஏற்றவாறு சுபநேரத்தை மாற்ற முடியாது

## கூறுகிறார் மகிந்த ராஜபக்ச



கொழும்பு, ஏப். 18

அரசின் தேவைக்கு ஏற்ற வகையில் சுப நேரங்களில் மாற்றம் செய்யப்படுவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித் துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற தலைக்கு எண்ணெய் வைத்தல் நிகழ்வில் பங்கேற்றபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கண்டி தலதா மாளிகைக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்ட மகிந்த, அஸ்கிரி மற்றும் மல்வத்த பீடாதிபதிகளைச் சந்தித்து ஆசி பெற்றுக் கொண்டார். அஸ்கிரி பீடாதிபதி வராகொட ஞானரதன தேரரின் கைகளினால் மகிந்த தலைக்கு எண்ணெய் வைத்துக் கொண்டார்.

இம்முறை புத்தாண்டு சுப நேரங்கள் மற்றும் முறைகள் தொடர்பில் சர்ச்சை ஏற்பட்டுள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். நாட்டைப் பற்றி கருதி நேரங்கள் நிர்ணயிக்கப்படவில்லை. கட்சியைப் பற்றிக் கருதி இந்தத் தடவை சுப நேரங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

தலைக்கு எண்ணெய் வைக்கும் நிகழ்வு நண்பகல் 10.41 இற்கு அல்ல எனவும், பிற்பகல் 12.00 மணியின் பின்னரே செய்யப்பட்டிருக்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

(த-5)

# பனாமா ஆவணங்களில் இருக்கும் இலங்கையர்களின் விவரம் எங்கே?

## அரசிடம் கேட்கிறார் ரஞ்சித் சொய்சா

கொழும்பு, ஏப். 18

பனாமா நிறுவனத்தின் இரகசிய ஆவணங்களில் உள்ள இலங்கையர்கள் தொடர்பிலான தகவல்களை வெளியிட அரசு இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்று கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான ரஞ்சித் சொய்சா தெரிவித்துள்ளார்.

உண்மையான மோசடியாளர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும். ராஜபக்ச குடும்பத்தினரின் சொத்து விவரங்களை வெளியிடப் போவதாகக் கூறி வந்த தற்போதைய அரசுக்கு, பனாமா சம்பவம் எறிந்தவரிடமே திரும்பி வரும் எறிகணை போல் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

பனாமா இரகசிய ஆவணங்களில் இலங்கையர்கள் சிலரின் பெயர்கள் இருப்பதாகத் தகவல்கள் வெளியாகி இருந்தன. இந்த மோசடியை அடிப்படையாகக் கொண்டு எதிர்வரும் காலத்தில் கடுமையாகக் குரல் எழுப்பப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, 2004 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலத்தில் பெருந்தொகையான கறுப்புப் பணம் வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக அமெரிக்க நிறுவனம் ஒன்று அண்மையில் தகவல் வெளியிட்டிருந்தது.

மூன்று ரில்லியன் அமெரிக்க டொலர் பணம் இவ்வாறு இலங்கையில் இருந்து சட்டவிரோதமான முறையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அதில் கூறப்பட்டிருந்தது. இலங்கை கறுப்புப் பணம் இலங்கையில் இருந் து அனுப்பி வைக்கப்பட்ட குறித்த காலப் பகுதியில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசே ஆட்சியில் இருந்தது.

அத்துடன், கடந்த அரசின் காலத்தின் போது நாட்டில் முன்னெடுக்கப்பட்ட பெரிய அபிவிருத்தித் திட்டங்களில் அரச தரப்பினர் பெருமளவில் தரகுப்பணம்பெற்றுள்ளதாகவும் குற்றம் சுமத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(த-5)

# கும்பாபிசேகம்

யாழ்ப்பாணம், ஏப். 18

யாழ்.ஆனைக்கோட்டை ஸ்ரீ வரத விக்ன விநாயகர்(சம்பந்தப் பிள்ளையார்) ஆலய மகா கும்பாபிசேக பெருவிழா நாளை மறுதினம் புதன்கிழமை நடைபெறவுள்ளது.

புதன்கிழமை காலை 7.33 மணி முதல் 9.28 மணிவரை கும்பாபிசேக பூசைகள் நடைபெறவுள்ளன. முன்னதாக நாளை செவ்வாய்க்கிழமை எண்ணைக்காப்புச் சாத்தும் நிகழ்வுகளும் நடைபெறவுள்ளதாக ஆலய நிர்வாக சபையினர் தெரிவித்துள்ளனர். (த-ரி5)

# மின் உற்பத்தி நிலையங்களில் 3,000 கண்காணிப்புக் கமெரா

## பொருத்துவதற்கு நடவடிக்கை மதிப்பீட்டுச் செலவு 25 கோடி ரூபா

கொழும்பு, ஏப்.18

நாடு முழுவதிலுமுள்ள மின் உற்பத்தி நிலை யங்களினதும் உப மாற்று நிலையங்களினதும் நடவடிக்கைகளைக் கண்காணிக்க சி.சி.ரி.வி கமெராக்களைப் பொருத்த இலங்கை மின்சார சபை நடவடிக்கை களை மேற்கொண்டுள்ளது.

அதன் பிரகாரம் நாடு முழுவதிலுமுள்ள 19 பிர தான மின் உற்பத்தி நிலையங்களிலும் 35 உபமாற்று நிலையங்களிலும் இந்தக் கண்காணிப் புக் கமெராக்கள் பொருத்தப்படும் எனவும் இதற்கான மொத்தச் செலவு சுமார் 25 கோடி ரூபாவென மதிப்பீடு செய்யப்பட்டிருப்பதாகவும் இலங்கை மின்சார சபையின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

மொத்தமாக மூவாயிரம் கண்காணிப்புக் கமெராக்கள் பொருத்தப்படவுள்ளதாகவும், அவற்றுள் விக்டோரியா மின் உற்பத்தி நிலையத்தில் 14 கமெராக்களும், உக்குவெல நிலையத்தில் 38 கமெராக்களும் பொருத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கேரளா சட்ட சபைத் தேர்தல்; இலங்கை குழுவுக்கு அழைப்பு

கொழும்பு, ஏப்.18

கேரளா சட்டசபைத் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைக்கு இலங்கைதேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையைச் சேர்ந்த கண்காணிப்பாளர்களை அனுப்பி வைக்குமாறு கடிதமொன்றினூடாகக் கேரளா அரசு அழைப்பு விடுத்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஊடகப் பேச்சாளரும் மேலதிக தேர்தல்கள் ஆணையாளருமான எம்.எம்.மொஹமட் குறிப்பிட்டார்.

எனினும், தமிழகத் தேர்தல் கண்காணிப்புக்கு இதுவரை அழைப்பு கிடைக்கவில்லை எனவும்அவர்தெரிவித்துள்ளார்.

கேரளா அரசிடமிருந்து கிடைத்துள்ள அழைப்புக்கேற்ப தேர்தல்கள் கண்காணிப்பாளர்களை அனுப்புவது தொடர்பில் அடுத்த வாரமளவில் தீர்மானிக்கப்படவுள்ளதாகவும் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.மொஹமட் குறிப்பிட்டுள்ளார்.

(த-5)

# அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், ஏப். 18

கம்பம்புலோ ஆதி வைரவப் பெருமானின் அலங்கார உற்சவம் கடந்த 15 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

உற்சவ காலங்களில் காலை 10.30 மணிக்கும் இரவு 8 மணிக்கும் வசந்த மண்டபப் பூசை நடைபெற்று வைரவப் பெருமான் வீதியுலா வரும் நிகழ்வும் இடம்பெற்று வருகின்றது.

எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை 1008 சங்காபிசேகம் நடைபெறும்.

(த-ரி)

# இந்தியக் கடற்படைத் தளபதி டொக்யார்ட் தளத்தை பார்வை

கொழும்பு, ஏப்.18

இலங்கைக்குப் பயணம் மேற் கொண்டுள்ள இந்தியக் கடற்படையின் தென்பிராந்தியத் தளபதி வைஸ் அட்மிரல் கிரிஷ் லூத்ரா, நேற்று முன்தினம் சனிக்கிழமை திருகோண மலையில் உள்ள கடற்படையின் டொக்யார்ட் தளத்துக்குச் சென்று பார்வையிட்டுள்ளார்.

உலங்கு வானூர்தி மூலம், திருகோணமலைக் கடற்படைத் தளத்தைச் சென்றடைந்த வைஸ் அட்மிரல் கிரிஷ்லூத்ராவுக்கு கிழக்கு கடற்படைத் தலைமையகத்தில் அணி வகுப்பு மரியாதை வழங்கப்பட்டது.

அதையடுத்து கடற்படையின் கிழக்குப் பிராந்தியத் தளபதியும், கடற்படையின் பிரதி தலைமை அதிகாரியுமான ரியர் அட்மிரல் நீல் ரொசாரி யோவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இதையடுத்து, கடற்படையின் பயிற்சி வசதிகளையும் அவர் பார்வையிட்டார்.

குறிப்பாக நீருக்கடியிலான தாக்குதல்களை முறியடிக்கும் பயிற்சிகள் குறித்து அவர் ஆராய்ந்ததுடன், விடுதலைப் புலிகளின் கடற்புலிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள், படகுகள் மற்றும் தளபாடங்களையும் பார்வையிட்டார்.

அதையடுத்து கடற்படையின் நான்காவது அதிவேகத் தாக்குதல் அணியின் பீரங்கிப் படகின் மூலம், திருகோணமலைத் துறைமுகப் பகுதியையும் சுற்றிப் பார்வையிட்டுள்ளார்.

(த-ஐ-5)

# வாகன விபத்தில் இரு சிறுவர்கள் உயிரிழப்பு

கொழும்பு, ஏப். 18

ஹங்குருவன்தோட்டை - மதுராவல பகுதியில் நேற்றுப் பகல் இடம்பெற்ற வாகன விபத்தில் இரண்டு சிறுவர்கள் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முச்சக்கர வண்டியொன்றும் லொறி ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(த-5)



சண்டிலிப்பாய்—சீரணி
அருள்மிகு சீரணி நாகபூசணி
அம்பாள் தேவஸ்தான
வருடாந்த
மஞ்சப் பெருவிழா
19.04.2016

அம்பிகை அடியார்களே!
அம்பாளுக்கு புதிதாக அமைக்கப்பட்ட வண்ண மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட தங்கரதத்திலே உள் வீதி உலா வரும் காட்சி இடம் பெறும்.

இலங்கை இந்திய புகழ் பூத்த தவில் நாதஸ்வர கலைஞர்களின் இன்னிசை கான மழை நிகழ்வு இடம் பெறும்.

மேலும் சிறப்பு நிகழ்வுகளாக
AIRTEL SUPER SINGER

புகழ் இந்தியப் பாடகர்கள் மற்றும் யாழ் மண்ணின் முன்னணி பாடகி
கவிதா தில்லைராஜ் பங்குபற்றும்
மாபெரும் இசை நிகழ்ச்சி

காலம் : 19.04.2016 செவ்வாய்க்கிழமை

15 ஆம் திருவிழா உபயகாரர்
திரு.குமார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

# ஹெரோயினுடன் ஒருவர் கைதானார்

யாழ்ப்பாணம், ஏப். 18

போதைப் பொருளான ஹெரோயினை தன் உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னாரில் வைத்துக் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து பைக்கற்றுக்களாக்கப்பட்ட நிலையில் 60 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டதாகப் பொலிஸார் கூறினர்.

வவுனியா போதைப் பொருள் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின்படி குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் விசாரணை மேற்கொண்ட பின்னர் அவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுச் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவுள்ளார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

(த-4)

# அரச அதிகாரியொருவருக்கு ராணுவப் பாதுகாப்பு எதற்கு?

## அதற்குச் சட்டத்தில் இடமில்லை என்கிறார் விஜித ஹேரத் எம்.பி

கொழும்பு, ஏப்.18

பாதுகாப்புச் செயலாளர் ஒருவருக்கு இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. அரச அதிகாரியொருவருக்கு இராணுவப் பாதுகாப்பு வழங்கச் சட்டத்தில் இடமில்லை என்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது நாட்டில் முன்னாள் ஜனாதிபதியொருவருக்கு இது போன்ற பாதுகாப்பொன்று இதுவரை வழங்கப்பட்டிருக்கவில்லை. மகிந்தவின் பாதுகாப்பைக் குறைக்கவில்லையென அரசு குறிப்பிடுகின்றது. மகிந்த ராஜபக்சவின் காலத்தில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் பாதுகாப்பு மட்டுப்படுத்தப்பட்டது. இதற்காக உயர் நீதிமன்றத்தின் அனுமதியையும் அவர் பெற்றுக் கொண்டார்.

ஊர், ஊராக நாடு நாடாகச் சுற்றித் திரிந்து தனக்குப் பேசுவதற்கு அவருக்குப் பாதுகாப்பு வழங்கப் படத் தேவையில்லையென மகிந்தவால் அதற்கு நியாயம் கூறப்பட்டது.

ஆனால், அன்று சந்திரிகாவுக்கு செய்யப்பட்டதே இன்று மகிந்தவுக்குச் செய்யப்படுகின்றது. சட்டத்துக்கு முரணாக எவருக்கும் பாதுகாப்பு வழங்கப்படத் தேவையில்லை. அவருக்கு வழங்கப் படவேண்டியது பொலிஸ் பாதுகாப்பு எனின், அதனைத்தான் அவருக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும்-என்றார். (த-ஐ-5)

## மு/ மல்லாவி மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை)
## பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம்

காலம் : 01.05.2016 (ஞாயிற்றுக்கிழமை)

நேரம்: பி.ப 3 மணி

இடம்: மயில்வாகனம் மண்டபம்

**பழைய மாணவர் சங்கம்**
**மு/மல்லாவி மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை)**

# திருட்டுப் பேர்வழி பொலிஸிலிருந்து தப்பியோட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.18

திருட்டுக்குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட நபர், பொலிஸாரின் பாதுகாப்பில் இருந்து தப்பியோடியுள்ள சம்பவம் ஒன்று நேற்றுமுன்தினம் யாழ்.பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றுள்ளது.

ஆனைக்கோட்டை, ஆறுகால் மடம் பகுதியில் உள்ள வீடொன்றில் மோட்டார் சைக்கிள் திருடிய குற்றச்சாட்டில் இரு இளைஞர்கள் கிளிநொச்சியில் வைத்து கடந்த வெள்ளிக்கிழமை யாழ். பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அவர்கள் பொலிஸ் தடுப்பில் வைத்து விசாரணை மேற்கொள்ளப்பட்ட நிலையில், நேற்று முன்தினம் நீதிவானிடம் முற்படுத்துவதற்காகப் பொலிஸ் நிலையத்துக்கு வெளியே இருவரும் அழைத்துச் செல்லப்பட்டபோது ஒருவர் தப்பி யோடியுள்ளார். பொலிஸார் அவரைப் பிடித்து வைத்திருந்தபோதும் பொலிஸாரிடமிருந்து அவர் தப்பியோடியுள்ளார்.

மற்றைய சந்தேக நபர் நீதிவானிடம் முற்படுத்தப்பட்ட நிலையில் தப்பியோடியவர் தொடர்பில் விசாரணை மேற்கொண்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஐ-4-106)

## காசி யாத்திரை
## ஆரம்பம் 10.06.2016, யாத்திரீகர்கள்.20, நாள்கள் 10

**தரிசிக்கும் இடங்கள்:**

டெல்லி அட்ஷயதாம் மற்றும் சில இடங்கள் ஆக்ரா, தாஜ்மகால், மதுரா, கிருஷ்ண ஜென்மபூமி, அலகாபாத், கங்கா, ஜமுனா, சரஸ்வதி, திருவேணிசங்கமம், நேருவீடு, சயன ஆஞ்சினேயர், சீத்தாமடி, சீதை தாயாருடன் பூமியுள் புதையுண்ட இடம் பிர்லா மந்திர், காசிவிஸ்வநாதர், காசிவிசாலாட்சி காலைபரவர், அரிச்சந்திரமகாராஜா சுடலை காத்த சுடலை உட்பட காசியில் பல இடங்களில். அத்துடன் இராமேஸ்வரம், இராமர்பாதம், பஞ்சமுக ஆஞ்சினேயர், திருப்புலானி, உத்திரகோசமங்கை உட்பட ஒரு நாள் சென்னையில் சொப்பிங்.

மடப்பள்ளி ஆள்கள் சமைத்த சுத்தமான சைவ உணவு மூன்றுவேளை, காலை மாலை.கோப்பி, ரீ, 2 லீற்றர் குடிநீர், பயணம் முழுவதும் AC வாகன வசதி மற்றும் விமானம், 2பேருக்கு குளியலறை இணைந்த அறைகள் மேலும் மடப்பள்ளி ஆள்கள் சமைப்பதனால் நமது குருக்கள்மார்களும் தயக்கமின்றி சேர்ந்துகொள்ளலாம்.

பயணம்: கொழும்பு, டெல்லி, காசி, டெல்லி, சென்னை, மதுரை, சென்னை, கொழும்பு விமானம் சுற்றிப்பார்க்க AC பஸ், AC வான்.

விருப்பமுடையவர்கள் மேலும் விவரங்களைக் கேட்டறிந்து பதிவு செய்யவும்.

**மேலதிக விவரங்களுக்கு**
**கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன்**
**மகன் - ராஜன்**
**இல.59, 3/6 செட்டியார்தெரு, கொழும்பு - 11**
**077 768 0102, 077 736 2154**

(R29947)(1.17.18)

# வளர்ப்பு நாய்களுக்கு விலங்குவிசர் தடுப்பூசி

யாழ்ப்பாணம்,ஏப்.18

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் அமைந்த நல்லூர் பொதுசுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்குவிசர் நோய்த்தடுப்பூசி வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக யாழ். மாநகரச சபை சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக நாளை செவ்வாய்க் கிழமை காலை 9 மணியிலிருந்து முற்பகல் 11 மணி வரை மூத்தவிநாயகர் சனசமூக நிலையத்திலும், முற்பகல் 11.11 மணியிலிருந்து பி.ப. 1 மணிவரை ஆசீர்வாதப்பர் வீதி, சுகாதார கல்வி மையத்திலும், பிற்பகல் 2 மணியிலிருந்து பிற்பகல் 3.30 மணி வரை நாயன்மார் வீதி சுகாதாரக் கல்வி மையத்திலும் நடைபெறவுள்ளன.

தொடர்ந்து மறுநாள் 20 ஆம் திகதி புதன் கிழமை காலை 9 மணியிலிருந்து முற்பகல் 11 மணிவரை யாக்கோவா பாலர் பாடசாலையிலும், முற்பகல் 11.11 மணியிலிருந்து பிற்பகல் 1 மணிவரை வெயிலுகந்த பிள்ளையார் கோவிலடி செம்மணி வீதியிலும், பிற்பகல் 2 மணியிலிருந்து பிற்பகல் 3.30 மணிவரை கடுக்காய் வீதியிலும் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 9 மணியிலிருந்து முற்பகல்11 மணிவரை நாவலர் வீதி ஆனைப் பந்திச் சந்தியிலும், முற்பகல் 11.11 மணியிலிருந்து பிற்பகல் 1 மணிவரை பருத்தித்துறை வீதி உயர்கலைக்கல்லூரி அருகாமையிலும், பிற்பகல் 2 மணியிலிருந்து பிற்பகல்3.30 மணிவரை ஜனசக்தி ச.ச.நிலையத்திலும் நடைபெறும்.

எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணியிலிருந்து முற்பகல் 11 மணிவரை பழம் வீதி ச.ச. நிலையத்திலும் முற்பகல் 11.11 மணியிலிருந்து பிற்பகல் 1 மணிவரை சிவன் புது வீதியிலும், பிற்பகல் 2 மணியிலிருந்து பிற்பகல் 3.30 மணிவரை மணல்தறை ஒழுங்கையிலும் தடுப்பு மருந்து ஏற்றப்படும்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வளர்ப்பு நாய்களுக்கு உரிமைக் கட்டணமாக 35 ரூபா செலுத்தி தடுப்பு ஊசியை ஏற்றிக்கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(த-ஐ-ரி)

## வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி
## ஆசிரிய மகாநாடு - 2016

ஆசிரிய மகாநாடானது கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் கல்விக் கண்காட்சி, ஆசிரியர்களின் ஆய்வுரைகள் சமர்ப்பணம் மற்றும் கலையரங்கம் ஆகியவற்றினை உள்ளடக்கியதாக இடம் பெறவுள்ளது.

**காலம் :** 19.04.2016
20.04.2016

**நேரம் :** காலை 8.30 தொடக்கம்
மாலை 5.00 மணி வரை

**இடம் :** கிளி நொச்சி மத்தியமகா வித்தியாலயம்
(மத்திய கல்லூரி)

இங்கு இடம் பெறும் கண்காட்சியில் வகுப்பறைகளுக்கான கற்றல் கற்பித்தல் தொடர்பான துறைசார்ந்த ஆசிரியர்களினால் தயாரிக்கப்பட்ட கற்பித்தல் சாதனங்கள் மாதிரி உருக்கள், கருவிகள், உபகரணங்கள் மற்றும் ஆசிரியர்களால் வெளியிடப்பட்ட கையேடுகள், நூல்கள், சஞ்சிகைகள், ஆசிரியர்களின் செயல்நிலை ஆய்வுகள் அறிக்கைகள் ஆகியன காட்சிப்படுத்தப்படவுள்ளன.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**வலயக்கல்வி அலுவலகம்,**
**கிளிநொச்சி.**

# பெண்ணின் உயிர் காத்து தன்னுயிரை கொடுத்தார் விமானப் படைச் சிப்பாய்

நீராடச் சென்ற பெண் ஒருவர் நீரில் அடித்து செல்லப்பட்டபோது அவரைக் காப்பாற்ற முயன்ற விமானப்படைச் சிப்பாய் பெண்ணைக் காப்பாற்றிய நிலையில் உயிரிழந்துள்ளார். கினிகத்தேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 4 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கினிகத்தேனை வழியாக ஓடும் மகாவலி ஆற்றில் நீராடச் சென்ற 36 வயது மதிக்கத்தக்க பெண் நீரில் அடித்துச் செல்லும் நிலையைக் கண்ட விமானப்படைச் சிப்பாய் பெண்ணைக் காப்பாற்றுவதற்காக ஆற்றில் குதித்துள்ளார். பெண்ணைக் காப்பாற்றிய விமானப்படைச் சிப்பாய் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த விமானப் படைச் சிப்பாய் கினிகத்தேனை யட்டிபேரிய பிரதேசத்தை சேர்ந்த 27 வயது மதிக்கத் தக்க எஸ்.டீ.மனுக்க இஷான் சில்வா என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். இதேவேளை, சம்பவத்தில் உயிர் தப்பிய குறித்த பெண் கண்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (த-ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றும் நாளையும் மின் தடை

யாழ்ப்பாணம், ஏப். 18

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக **இன்று திங்கட்கிழமையும்,** நாளை செவ்வாய்க்கிழமையும் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை மின் சாரம் தடைப்படும்.

இன்று திங்கட்கிழமை கிளிநொச்சி பிரதேசத்தில் திருவையாறு, சாந்தபுரம், இரணைமடு விசேட அதிரடிப்படை இராணுவ முகாம் ஆகிய பிரதேசங்களிலும், நாளை செவ்வாய்க்கிழமை வவுனியா பிரதேசத்தில் நேரியகுளத்திலிருந்து செட்டிகுளம் வரை, ஓமந்தையிலிருந்து புளியங்குளம் வரை, கொம்புவைத்தகுளம் இராணுவ முகாம், செட்டிகுளம் வைத்தியசாலை, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், வி.சி.கே. ஆலை ஆகிய பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வடமாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின்பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

(து-ஐ-ரி)

# தொழில்நுட்பப் பரீட்சையின்றி படிப்பைத் தொடர்வதில் சிரமம்

## தேசிய தொழிற்பயிற்சி அதிகாரசபையில்

யாழ்ப்பாணம்,ஏப்.18

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பரீட்சை (ஐ.சி.ரி.)நிலை 4க்கு வைக்கப்படாததால் மேற்படி படிப்பைத் தொடர முடியாத நிலையில் காத்திருப்பதாக, சுன்னாகம் தேசிய தொழிற்பயிற்சி அதிகாரசபை மாணவர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக யாழ். பிராந்திய தேசிய தொழிற்பயிற்சி அதிகார சபையினரிடம் கேட்டபோது, பரீட்சைகள் அனைத்தும் வைக்கப்பட்டுள்ளன. விடுமுறை நாள்களில் நாம் பதில் வழங்க மாட்டோம். மேலதிக தகவல்களுக்குக் கிழமை நாள்களில் தொடர்பு கொள்ளுமாறு தெரிவித்துள்ளனர்.

> “எமது கல்விச் செயற்பாடுகள் நிறைவடைந்தும் எமக் கான பரீட்சைகள் நடத்தப்படாமல் மேற் கொள்ளப்படும் இத் தகைய செயற்பாடு களால் தாம் ஓரங்கட் டப்பட்டுவதுடன்,ஏமாற் றப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரி வித்துள்ளனர்.”

கற்கை நெறிக்கான பணத்தைச் செலுத்தி ஆறுமாதக் கற்கைக் காலத்தையும், ஆறுமாதத் தொழில் பயிற்சியையும் நிறைவு செய்துள்ளோம். தற்போது ஒன்றரை வருடங்கள் கடந்துள்ள நிலையில்,பரீட்சை தொடர்பான அறிவித்தல்கள் விடுக்கப்படவில்லை. ஏன் பரீட்சை வைக்கப்படவில்லை என்று பலமுறை இவர் களைத் தொடர்பு கொண்டபோதும் விரைவில் பரீட்சை வைக்கப்படும் என்று கூறிக் காலம் கடத்தி வருகின்றனர் என மாணவர்கள் தெரிவித்தனர்.

2013 ஆம் ஆண்டின் பிரிவு மாணவர்கள் மற்றும் 2014 ஆம் முதல் பிரிவு மாணவர்கள் ஆகிய மூன்று பிரிவு மாணவர்களுக்கே இன்னமும் ஐ.சி.ரி.நிலை 4 க்குப் பரீட்சை வைக்கப்படாமல் பின்னடிப்பு காட்டப்பட்டுள்ளது. ஆனால் 2014ஆம் ஆண்டு இரண்டாம் பிரிவில் கல்விகற்ற மாணவர்களுக்கான பரீட்சைகள் கடந்த ஜனவரி மாத பிற்பகுதியில் நடத்தப்பட்டுள்ளன.

எமது பிரிவில் ஏனைய பிராந்திய தொழிற்பயிற்சி நிலையங்களில் கல்வி கற்ற மாணவர்களுக்கான பரீட்சைகளும் நடத்தப்பட்டு அவர்களுக்கான தகுதி அட்டைகளும் வழங்கப்பட்டுள்ளன.

ஆனால் எமது கல்விச் செயற்பாடுகள் நிறைவடைந்தும் எமக்கான பரீட்சைகள் நடத்தப்படாமல் மேற்கொள்ளப்படும் இத்தகைய செயற்பாடுகளால், தாம் ஓரங்கட்டப்படுவதுடன் ஏமாற்றப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் எமக்குக் கற்பித்த ஆசிரியர் தற்போது வேறு ஒரு அரச உத்தியோகத்தில் இணைந்துள்ளார். இந்த நிலையில் புதிதாக இணைந்துள்ள ஆசிரியரைத் தொடர்பு கொண்டால் எமக்குப் பரீட்சை தொடர்பான அறிவித்தல் விடுக்கப்படவில்லை. நீங்கள் எதுவாகிலும் பிராந்தியக் காரியாலயத்தைத் தொடர்பு கொள்ளுமாறு தெரிவித்துள்ளார் எனவும் மாணவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

குறித்த பாடநெறிக்கான பரீட்சைகள் நடத்தப்படாததால் துறைசார்ந்து எமது கல்வியை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தொழில் நுட்பக்கல்லூரியில் நிலை 5 க்கான விண்ணப்பப் படிவங்களை நாம் சமர்ப்பித்தபோதும். நிலை நான்குக்கான பரீட்சையில் தோற்றவில்லை என்ற காரணத்தால் தெரிவு செய்யப்படாமல் நிராகரிக்கப்பட்டதாகவும், கடந்த வருட இறுதியில் நடைபெற்ற ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கான நேர்முகத் தேர்வில் குறித்த பாடநெறிக்கான சான்றிதழ்கள் இல்லாத காரணத்தால் இடையூறுகள் ஏற்பட்டதாகவும் தெரிவித்தனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், ஆசிரியர்களும் எமக்கான பரீட்சையை வைப்பதற்கு விரைவாக முன்வரவேண்டும் என்றும் மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக யாழ். தேசிய தொழிற்பயிற்சி அதிகார சபையினரைத் தொடர்பு கொண்டபோது,கல்வி கற்றவர்களுக்கான பரீட்சைகள் அனைத்தும் வைக்கப்பட்டுள்ளன. மேலதிக தகவல்கள் எவையும் தேவைப்படின் நாளை(இன்று) அலுவலகத்துக்கு நேராக வருகை தாருங்கள். விடுமுறை நாள்களில் பதில் வழங்கமுடியாது என்றனர்.

(து-ஐ-ரி5)

# நீண்ட காலமாகச் சேதமுற்றுள்ள எழுதுமட்டுவாழ் - கிளாலி வீதி

கிளிநொச்சி,ஏப்.18

கிளிநொச்சி–யாழ்ப்பாணம் மாவட்டங்களின் எல்லையான கிளாலிப் பகுதி மக்களின் பிரதான வீதியாகவுள்ள எழுதுமட்டுவாழ் - கிளாலி வீதி மிகவும் மோசமாகச் சேதமடைந்து நீண்ட காலமாகத் திருத்தப்படாத நிலையில் காணப்படுகிறது.

இங்கு வாழும் சுமார் 300 குடும்பங்களைச்சேர்ந்த ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் தமது தேவைகளுக்காகச் சுமார் 5 கிலோ மீற்றர் தூரம் நடந்து செல்லவேண்டிய நிலையில் உள்ளனர். ஏற்கனவே குறித்த வீதியை உடனடியாகப் புனரமைத்துத் தருமாறு கோரப்பட்டுள்ளது.

வீதியைப் புனரமைத்துத் தருமாறு நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், அரச அதிபர்கள், பிரதேச செயலர் போன்றோருக்கு பல தடவைகள் முறையிட்டும் பயன் கிடைக்கவில்லை எனவும் மக்கள் தெரிவித்தனர்.

1985ஆம் ஆண்டுக்கு முன்னர் கிளாலியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான இ.போ.ச.பேருந்து சேவைகள் இடம்பெற்று வந்தன. 1990 தொடக்கம் 1996 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கிளாலித் துறைமுகம் படகுகளில் பொருள்கள் ஏற்றியிறக்குவதற்கான பிரதான பாலமாகத் திகழ்ந்ததால்,தினமும், நூற்றுக்கணக்கான வாகனங்கள் இந்த வீதியில் போக்குவரத்தில் ஈடுபட்டன.

2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரை அதியுயர் பாதுகாப்பு வலயமாகக் காணப்பட்டதால்,கனரக வாகனங்களின் போக்குவரத்துக்களால் வீதி மிக மோசமாகச் சேதமடைந்துள்ளது. அத்துடன் 2000 ஆம் ஆண்டு இடம்பெற்ற போரில் எறிகணைகள் வீதியில் வீழ்ந்து வெடித்தபோது ஏற்பட்ட குழிகள் இன்றும் அழியாத காட்சிப் பொருளாகக் காணப்படுகின்றன.

கிளாலிக்கிராமமானது கடல் உணவு , உப உணவுப் பயிர்ச் செய்கை மற்றும் தென்னைப் பயிர்ச் செய்கை போன்றவற்றைப் பிரதான தொழிலாகக் கொண்டுள்ளது. கிளாலித்துறை, முகத்துக்குக்கொண்டுவரப்படும் கடல் உணவுகளைக் கொள்வனவு செய்யத் தினமும் 50 க்குக் குறையாத வாகனங்கள் வந்து செல்கின்றன.

இங்குள்ள மாணவர்களில் சிலர் பளை மற்றும் கொடிகாமம், சாவகச்சேரிப் பாடசாலைகளில் கல்வி கற்று வருகின்றனர். மேலும் அரச பணிகளில் கடமையாற்றுவோரும் இங்கு வசிக்கின்றனர். இவர்களுடன் கடற்றொழிலாளர்கள், விவசாயிகள், பொதுமக்கள் எனத் தினமும் பெருமளவானோர் தமது தேவைகளுக்காகப் பயணங்களை மேற்கொள்கின்றனர்.

இங்குவதியும்குடும்பங்கள், மாணவர்கள், அரச பணியாளர்கள், விவசாயிகள் போன்றோரின் நலன்கருதி இ.போ.ச. பஸ் சேவையை நடத்துமாறு கோரி உரிய அதிகாரிகளுக்கு அறிவித்த போது அங்கே வந்த அதிகாரிகள் வீதி திருத்தம் செய்த பின்னர் பஸ் சேவை நடத்துவதாகக் கூறுகின்றனர்.

கிளாலிப்பிரதேச மக்களுக்காக ஒரேயொரு வீதியாக எழுதுமட்டுவாழ் - கிளாலி வீதி பயன்படுத்தப்பட்டு வருவதால்,இதனைப் புனரமைத்துத் தருமாறு சம்பந்தப்பட்டவர்களை அப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

(து-ஐ-9)

# பசு மாட்டை இறைச்சிக்கு வெட்டியதாக மூவர் கைது

யாழ்ப்பாணம், ஏப். 18

திருடிய பசுமாடுகள் இரண்டை வெட்டிக் கொன்று இறைச்சியாக்கி யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள இறைச்சிக்கடை ஒன்றுக்குக் கொண்டு செல்ல முற்பட்ட குற்றச்சாட்டில் 3 பேரைக் கைது செய்துள்ளதாக ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஊர்காவற்றுறை–சின்னமடுப் பகுதியில் உள்ள தேவாலயத்துக்குப் பின்புறமாக உள்ள பற்றைக்குள் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கைதான மூவரும் வெளியூர்ப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனப் பொலிஸார் கூறினர். இறைச்சியைக் கொண்டு பஸ்ஸில் ஏறும் போதே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து 45 கிலோ கிராம் இறைச்சியும் கைப்பற்றப்பட்டுள்ளது. சம்பவத்துடன் தொடர்புடையவர் என்று கூறப்படும் நான்காவது சந்தேக நபர் தலைமறைவாகியுள்ளார். அவரையும் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(து-ஐ-4-107)




# சனத் நிஷாந்த எம்.பி. வாகன விபத்தில் காயம்

கொழும்பு, ஏப். 18

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்த வாகன விபத்தில் சிக்கியுள்ளார்.

குருநாகல்–யந்தம்பலாவ பிரதேசத்தில் நேற்று இந்த விபத்து நடந்துள்ளது.

சனத் நிஷாந்த பயணித்த கப் வண்டி வீதியை விட்டு விலகிப் பாதையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் ஒன்றுடன் மோதியுள்ளது.

சம்பவத்தில் மேலும் சிலர் காயமடைந்துள்ளனர். காயமடைந்த நாடாளுமன்ற உறுப்பினர் குருநாகல் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சனத் நிஷாந்த, மகிந்த ராஜபக்ச தலைமையிலான கூட்டு எதிரணியில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

(து-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**தாமோதரம்பிள்ளை கந்தவனம்**

**கண்மகிழ**
**05.05.1931**

**மண்நெகிழ**
**03.05.2012**

**திதி: துவாதசி**
**(18.04.2016)**

நான்காண்டுகள் ஆனாலும் ஓயுமோ உங்கள் நினைவு - எம்
ஊனோடும் உணர்வோடும் ஒன்றாய்க் கலந்த உத்தமனே!
வேரூடே நீர் சுரந்து விழுதுகளைத் தாங்கி நின்றீர்
வேண்டுவன வெல்லாம் வேண்டாமலே விருபிட ஈர்ந்தீர்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
பிரார்த்திக் கின்றோம்.

நுணாவில் மத்தி, சாவகச்சேரி. குடும்பத்தினர்.

(13) (17)

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| **தோற்றம்** | **மறைவு** |
|---|---|
| 30 . 08 . 1969 | 03 . 05 . 2012 |

**அமரர் கைலைலிங்கம் முருகதாஸ்**
(முன்னாள் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர்)

**திதி: துவாதசி ( 18.04.2016)**

*ஆத்மசாந்தி வேண்டி நிற்கும்*
**மனைவி, பிள்ளைகள்.**

4/4, இராமகிருஸ்ணா வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 30 . 11 . 1949 | 30 . 04 . 2015 |

அமரர் திரு . **வ. முருகஜோதி**
(Rtd. Asst. District Engineer SriLanka Railways)

அன்பிற்கோர் இலக்கணமாய்
பண்புக்கோர் உதாரணமாய்
பாசத்திற்கோர் ஒளிச்சுடராய்
நற்குணங்களில் சிகரமாய்
எங்கள் குடும்பத்தலைவனாய் வாழ்ந்தீர்களே!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவோ எம்மை விட்டு
அகலாது.
உங்கள் ஆத்மா சாந்திக்காக இறைவனை
பிரார்த்தித்து நிற்கும்

உங்கள் அன்பு மனைவி, மக்கள்
**Tel . 011 2393951**

**B 14,1/2 N.H.S Flats Maradana**
**Colombo - 10**

# வாகனங்களின் அடிச்சட்டத்தை சேதமாக்குகின்றது வீதித் தடை

## சாரதிகள். பொதுமக்கள் விசனம்

சாவகச்சேரி, ஏப். 18

விபத்துக்களைத் தவிர்க்கவென வீதியில்போடப்பட்ட வீதித் தடைசிறியரகவாகனங்களின் அடிச்சட்டத்தை உடைத்துச் சேதமாக்குகின்றது. இதனைச் சீரமைத்துத் தருமாறு உரிய அதிகாரிகளுக்கு அறிவித்தும் பயன் கிடைக்கவில்லையென மக்களும் வாகனச் சாரதிகளும் கவலை தெரிவித்தனர்.



முன்னதாக மக்களும் வாகனச் சாரதிகளும், மிருசுவில் ஏ 9 வீதியிலிருந்து உசன், விடத்தற்பளை, கெற்பேலி, பாலாவி போன்ற பிரதேசங்களுக்குச் செல்லும் மக்கள் பயன்படுத்தும், உசன் வீதியில் தண்டவாளம் மற்றும் ஏ 9 வீதி காணப்படுவதால் வாகனங்களின் வேகத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் வீதித் தடை ஒன்று ஆறு அங்குல உயரத்திற்கு அண்மையில் அமைக்கப்பட்டது.

தண்டவாளம் ஒரு மீற்றர் உயரத்துக்கு உயர்த்தப்பட்டதால் வீதி தாழ்வாகக் காணப்படுகிறது. அத்துடன் வீதித் தடையும் போடப்பட்டுள்ளது. வாகனங்கள் சிறிது வேகத்துடன் பயணித்தால் மட்டும் இந்தச் சாலையினைக் கடக்க முடியும் என்ற நிலையே காணப்படுவதால் வாகனங்களைச் சற்று வேகமாகச் சேலுத்தும் போது வீதித் தடையில் மோதி விபத்துக்கள் ஏற்படுகின்றன.

வழமையாக வீதிகளில் வேகத்தடை அமைக்கும் போது 3 அங்குல உயரத்திற்கே அவை அமைக்கப்படுகின்றன. ஆனால் இந்த வீதியில் வேகத் தடை ஆறு அங்குல உயரத்துக்கு மேடாக அமைக்கப்பட்டுள்ளது.


இதனால் சிறிய ரக வாகனங்கள் செல்லும் வேளையில் வாகன அடிச்சட்டம் வீதித் தடையுடன் மோதிச் சேதமடையும் நிலை காணப்படுகிறது. இது தொடர்பாக உரியவர்களுக்கு அறிவித்தபோது உடனடியாக வந்து உயரத்தைக் குறைப்பதாகத் தெரிவிக்கின்றனரே தவிர இதுவரை வீதித்தடையின் உயரம் சீராக்கப்படவில்லை. இதனால் வாகன உரிமையாளர்கள் வேறு வீதிகளைப் பயன்படுத்த வேண்டியுள்ளதெனவும் தெரிவித்தனர்.

பல கிராமங்களுக்குச் செல்லும் வீதியாக அமைந்துள்ள இந்த வீதி ரயில் வரும் வேளைகளில் பாதுகாப்பற்ற கடவையாகக் காணப்படுவதால் விபத்து ஏற்பட வாய்ப்பு உள்ளதைக் கருத்திற் கொண்டு வீதியில் வேகத் தடை அமைக்கப்பட்டதெனவும், வழமையாக வீதித் தடை மேடுகள் அமைப்பதைவிட உயரமாக அமைக்கப்பட்டுள்ளது எனவும், எனவே சம்பந்தப்பட்டவர்கள் விரைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வீதித்தடையைச் சீரமைத்துத் தரவேண்டுமெனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக வடமாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் தலைவர் சி.சிவராஜலிங்கத்துடன்தொடர்புகொண்டபோது, இந்த வீதி தொடர்பான முறைபாடுகள் கிடைக்கவில்லை. எனினும் விடுமுறைக்காலம் நிறைவடைந்ததும் சீரமைக்கும் பணிகளைமேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (த-ரி5-9)

## நீங்காத நினைவுகளுடன் ஒன்பதாம் ஆண்டு நினைவலைகள்

*அமரர்*
***நாகலிங்கம் தர்மகுலசிங்கம்***
[குணம் - பிரபல வர்த்தகர்]



**உதிப்பு**
**13.06.1959**

**உதிர்வு**
**29.04.2007**

*திதி: துவாதசி* (18.04.2016)

அன்பின் திருவுருவாய்
பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
இவ்வுலகில் எமக்கு நிலையான செல்வம் நீங்கள் அப்பா
கடைதனைக் கண்ணியமாய் நடத்தி
பிரபல வர்த்தகர் என்று புகழ் பெற்று
ஒன்பது ஆண்டுகள் மறைந்தாலும் - உங்கள்
நினைவு எம்மை விட்டு என்றும் அகலாது
நினைவில் எம்முடனும் நிஜத்தில்
இறைவனிடமும் கலந்திட
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்

விநாயகர் வீதி.
மந்துவில் மேற்கு, கொடிகாமம்.

குடும்பத்தினர்.

# சம்பூர் அனல் மின் நிலைய மாற்றுத்திட்டம் குறித்து பேச்சு

கொழும்பு,ஏப்.18

சம்பூரில், அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள, அனல் மின் நிலையங்களுக்குப் பதிலாக, இயற்கை திரவ எரிவாயு மின் நிலையங்களை அமைப்பது தொடர்பாக இந்தியாவுடனும், ஜப்பானுடனும் இலங்கை அரசு பேச்சு நடத்தவுள்ளது. இலங்கையில் மேலதிக அனல் மின் நிலையங்களை அமைக்கக் கூடாது என்று சக்தி மற்றும் சூழலியல் நிபுணர்கள் அரசுக்கு அழுத்தங்களைக் கொடுத்து வரும் நிலையிலும், அனல் மின் திட்டத்துக்குச் சம்பூர் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வரும் நிலையிலுமே, இந்த மாற்றுத் திட்டம் குறித்து அரசு பேச்சுக்களை நடத்தவுள்ளது.

திரவ எரிவாயு மின் திட்டம் மற்றும் ஏனைய சாத்தியமான நிலையான தீர்வுகளை நோக்கி, நகர முடியும் என்று அரசு நம்புவதாக, மின்சக்தி அமைச்சின் செயலர் சுரேன் பதேகொட தெரிவித்துள்ளார்.

ஜப்பானின் அனல் மின் திட்டத்தைத் திரவ எரிவாயு மின்திட்டமாக மாற்ற முடியும் என்றும், ஆனால் உலகளவில் திரவ எரிவாயுவின் கேள்வி அதிகரித்துள்ளதால், அதன் விலை பெருமளவில் உயரக்கூடும் என்றும், அது இலங்கையின் பொருளாதாரத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். எனவே நீண்டகால நோக்கில் 100 வீதம் மீள்சுழற்சி செய்யத்தக்க நிலையான திட்டம் ஒன்றையே பின்பற்ற வேண்டியிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார். (த-ஐ-5)

# 100 பாலை மரக் குற்றிகள் மீட்பு டிராக்டருடன் ஒருவர் சிக்கினார்

யாழ்ப்பாணம், ஏப். 18

சட்டவிரோதமாகக் கடத்திச் செல்லப்பட்ட 100 பாலை மரக் குற்றிகளை மீட்டுள்ளதோடு அவற்றைக் கடத்திச் சென்ற குற்றச்சாட்டில் ஒருவரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். மடு முள்ளிக்குளம் பகுதியில் வைத்துக் குறித்த மரக்குற்றிகள் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. வவுனியா பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரிவுக்கு உட்பட்ட போதை தடுப்புப் பிரிவுப் பொலிஸார் குறித்த மரக்கடத்தலை முறியடித்ததோடு அதனை மீட்டனர்.

100 இற்கும் மேற்பட்ட மரக்குற்றிகள் அவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாகவும், அவற்றின் பெறுமதி சுமார் 2 லட்சம் ரூபாவுக்கும் மேல் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். அவற்றை ஏற்றிச் சென்ற டிராக்டரும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும், அது தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அதனைக் கடத்திச் சென்ற குற்றச்சாட்டில் அதே இடத்தைச் சேர்ந்த ஒருவரைக் கைது செய்துள்ளதாகவும், அவர் நீதிமன்றிடம் முற்படுத்தப்பட்டுச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை–குறித்த மரக்குற்றிகளைக் கடத்திச் சென்றபோது பொலிஸார் பிடித்துச் சென்றநிலையில், தன்னை அரசதரப்பின் முக்கியஸ்தர் என்றுகூறிக் கொண்டு சென்ற சகோதர இனத்தவர் ஒருவர் குறித்த மரக்குற்றிகளையும் கைது செய்தவரையும் விடுவிக்குமாறு கோரியுள்ளார். தான் அரச தரப்பு மந்திரி என்றும், அதனால் மரக்குற்றிகளையும் சந்தேக நபரையும் விடுவிக்குமாறும் அவர் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று அதிகாரத் தோரணையில் கோரியுள் ளார் என்றும்பொலிஸ்தகவல்கள்தெரிவித்தன. அவர்கள் அதற்குச் சம்மதிக்காதமையால் பின்னர் பொலிஸ் உயர் அதிகாரியின் அலுவலகத்துக்கும் சென்று அவ்வாறு கோரியுள்ளார் என்றும், பொலிஸ் உயர் அதிகாரியும் அதற்குச் சம்மதிக்கவில்லையாதலால் அவர் திரும்பிச் சென்றுவிட்டார் என்றும் பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன. (த-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிறக்கும் குழந்தைகளுக்கு தைரொக்சின் பரிசோதனை

## விரைவில் யாழ். வைத்தியசாலைகளில்

யாழ்ப்பாணம்,ஏப்.18
பிறக்கும் சிசுக்களுக்கு மன வளர்ச்சி மற்றும் மூளை வளர்ச்சியின்மைக்கு முக்கிய காரணமாகக் காணப்பட்ட தைரொக்சின் பரிசோதனைகள் யாழ்.மாவட்ட வைத்தியசாலைகளில் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்கான பயிற்சி வகுப்புகள் எதிர்வரும் 27 ஆம் திகதி யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளன.

இந்தப் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள மாவட்டத்தில் உள்ள அனைத்து வைத்தியசாலைகளின் வைத்திய அதிகாரிகள், தாதிய அலுவலர்கள், குழந்தைகள் சிகிச்சை நிபுணர்கள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு சுகாதார அமைச்சின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் பீ.ஜீ.மகிபால அறிவித்துள்ளார்.

பிறந்த சிசுவுக்கு தைரொக்சின் குறைபாடு உள்ளமை தொடர்பான எந்தவொரு பரிசோதனைகளும் யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்படுவதில்லை.

இது தொடர்பான குணங்குறிகளை அடையாளம் காண இரண்டு வருடங்கள் செல்லும். அதன் பின்னரே குழந்தையின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் பெற்றோர் சிகிச்சைக்காக வைத்தியசாலைகளுக்குக் கொண்டு செல்கின்றனர்.

அவ்வேளையில் நோயின் தாக்கம் அதிகரித்து காணப்படுவதால் மேற்கொள்ளப்படும் சிகிச்சைகள் பெருமளவில் பயனளிக்காத நிலை ஏற்படுகிறது. இதிலும் தைரொக்சின் பாதிப்பு பெருமளவு காணப்படும் குழந்தை மூளை வளர்ச்சியற்ற குழந்தைகளாக மாறுகின்றன. ஓரளவு பாதிப்புக்கு உள்ளான குழந்தைகள் மனவளர்ச்சி குன்றியவர்களாகக் காணப்படுகின்றனர்.

> "தைரொக்சின் பாதிப்பு பெருமளவு காணப்படும் குழந்தை மூளை வளர்ச்சியற்ற குழந் தைகளாக மாறுகின்றன. ஓரளவு பாதிப்புக்கு உள்ளான குழந்தைகள் மனவளர்ச்சி குன்றியவர்களாகக் காணப்படுகின்றனர்."

இதனை ஆரம்பத்திலேயே கண்டு பிடிப்பதற்கான ஏற்பாடுகள் சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு தென் பகுதி வைத்தியசாலைகளில் தற்போது செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

அடுத்த கட்டமாக வடபகுதியில் மேற்கொள்வதற்காக அதற்குரிய பயிற்சிகள் வைத்திய அதிகாரிகள் மற்றும் தாதிய உத்தியோகத்தர்கள், குழந்தைகள் சிகிச்சை நிபுணர்களுக்கு வழங்கி அவர்களூடாக பெற்றோருக்கு பிரசவத் தாய்மாருக்கான சிகிச்சை நிலையங்கள் மூலம் வழங்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குழந்தை பிறந்த ஐந்தாம் நாள் பிள்ளையின் காலிலிருந்து குருதி மாதிரிகள் எடுக்கப்பட்டுக் கொழும்பில் உள்ள மருத்துவ ஆராய்ச்சி நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்படும். தைரொக்சின் பாதிப்பு ஏற்பட்டுள்ளமை குறித்து அறிக்கை கிடைத்ததும் அதனை உறுதிப்படுத்தல் பரிசோதனைக்கு அனுப்பி அங்கிருந்து வரும் உறுதிப்படுத்தல் அறிக்கையின் பிரகாரம் சிசுவுக்கு ஆரம்பத்தில் சிகிச்சை வழங்கி தாக்கத்தைக் குறைத்து வாழ்நாள் சிகிச்சை வழங்க முடியும்.

தைரொக்சின் எற்பட்டுள்ளதைக் கண்டறியும் பரிசோதனைக்குரிய வடிதாள் கொழும்பில் உள்ள மருத்துவ ஆராய்ச்சி நிலையம், றுகுணு பல்கலைக்கழக மருத்துவ அலகு ஆகியவற்றில் மட்டும் உள்ளதால் அங்கு சிசுக்களின் குருதி மாதிரிகள் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பரிசோதனைகள் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் பிரசவத் தாய்மார் ஐந்து தினங்களின் பின்னரே வீடு செல்ல அனுமதிக்கப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (த-ஜ-9)

# புல் தரவையில் தீ பிடித்து எங்கும் புகை மண்டலம்

## சாவகச்சேரியில் பரபரப்பு

சாவகச்சேரி,ஏப்.18
சாவகச்சேரி நகரம் கடந்த வெள்ளிக்கிழமை காலை புகை மண்டலமாகக் காணப்பட்டதாக மக்கள் தெரிவித்தனர்.

சாவகச்சேரி நகரின் தெற்குப் பக்கமாக உள்ள வயற்பகுதி மற்றும் நகர சபை விளையாட்டு மைதானப் பகுதியில் காய்ந்த புல் தரைவையில் தீப் பிடித்துக் கொண்டதால் அவை எரிந்து ஏனைய பகுதிகளுக்கு பரவத் தொடங்கியதால் பெரும் புகை எழுந்து நகரம் முழுவதும் பரவியது. இதனால் சந்தைப் பகுதியில் பொதுமக்கள் பெரும் கஷ்டப்பட்டனர். தனங்களப்பு வீதியால் சாவகச்சேரிக்கு வந்து கொண்டிருந்த வாகனங்கள் (லைற்) ஒளி பாய்ச்சியபடி வந்ததைக் காணமுடிந்தது.

இந்த நிலையையடுத்து சாவகச்சேரி நகரசபை நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு எரியும் நெருப்பைக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தது. கனரக வாகனமான பைக்கோவைப் பாவித்து எரியும் பகுதிக்கு மண்ணை வாரிப் போட்டு தீயைக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து முற்றாகத் தீயை அணைத்தனர். இதனால் புகை கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டு இயல்பு நிலை நகரில் ஏற்பட்டது. (த-ஜ-131)

# சட்டவிரோத மணல் அகழ்வு; டிராக்டர் பொலிஸாரால் மீட்பு

யாழ்ப்பாணம்,ஏப்.18
அரியாலை திட்டிப் பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்ட டிராக்டரை மீட்டுப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளதாக யாழ்ப்பாணம் குற்றத் தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் மணல் அகழ்வு இடம்பெறுவதாகக் குற்றத்தடுப்பு இரகசிய பொலிஸாருக்கு தகவல் ஒன்று கிடைக்கப் பெற்றிருந்தது. சிவில் உடையில் சென்ற பொலிஸாரைக் கண்டதும் மணல் அகழ்வில் ஈடுபட்டிருந்தவர்கள் டிராக்டரைக் கைவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

அதனால் குறித்த வாகனம் பொலிஸாரினால் எடுத்துவரப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

உரிமையாளர் தொடர்பில் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் ஊடாகப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-ஜ-4-107)

# கைப்பையில் 90 ஆயிரம் ரூபா அபகரித்த பெண் கைதானார்

யாழ்ப்பாணம்,ஏப்.18
யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் நின்றிருந்த பெண்ணின் கைப்பைக்குள் இருந்து 90 ஆயிரம் ரூபா பணத்தைத் திருடிய குற்றச்சாட்டில் குருநகர்ப் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொருள்கள் வாங்குவதற்காக யாழ்.நகருக்குச் சென்ற குறித்த பெண், பொருள்கள் வாங்கிவிட்டு பஸ் நிலையத்தில் இருந்தபோது இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

தனது பணம் காணாமற் போனமை பற்றி அவதானித்த அந்தப் பெண் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார். அங்கு சிவில் உடையிலும் பொலிஸார் நின்றிருந்ததால் திருட்டு இடம்பெற்ற சிறிது நேரத்தில் பொலிஸார் சந்தேக நபரைக் கைது செய்தனர்.

கைது செய்த நபரிடமிருந்து பணமும் மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.(த-ஜ-4)

# வலி.வடக்கில் விடுதலையான 2 பாடசாலைகள் புனரமைப்பு

## 16 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,ஏப்.18
வலிகாமம் வடக்கு வறுத்தலைவிளான் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மற்றும் வளலாயிலுள்ள ஒரு பாடசாலை என்பன 16 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளதாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

கடந்த வருட முற்பகுதியில் வறுத்தலைவிளான், பளைவீமன்காமம் போன்ற பகுதிகள் உயர் பாதுகாப்பு வலயமாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இருந்த நிலையில் அந்த இடங்கள் பொதுமக்களிடம் உத்தியோகபூர்வமாக விடுவிக்கப்பட்டுள்ளன.

1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற அசாதாரண நிலைகளினால் இந்தப் பகுதிகள் இராணுவத்தினரின் உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் உள்வாங்கப்பட்டிருந்தது. போரினால் குறித்த பாடசாலை முற்றாக சேதமடைந்து காணப்பட்டது.

முதலாம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை காணப்பட்ட இந்தச் சிறிய பாடசாலையில் 150 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் 1990 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கல்வி கற்று வந்திருந்தனர்.

அதன்பின்னர் அந்தப் பாடசாலைப் பகுதிக்குள் செல்ல முடியாத நிலை காணப்பட்டது. தற்போது அந்த இடம் விடுவிக்கப்பட்டுள்ளதனால் மாகாண கல்வியமைச்சின் நிதியுதவியுடன் குறித்த பாடசாலை புனரமைக்கப்படவுள்ளது. அதற்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று செயலாளர் இ.இரவீந்திரன் மேலும் தெரிவித்தார். (த-ஜ-4-107)

# வீதியால் நடந்து சென்ற பெண்ணின் தாலி அறுப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.18
வீதியால் நடந்து சென்று கொண்டிருந்த பெண்ணின் 11 பவுண் தாலிக் கொடி கொள்ளையர்களால் அறுத்துச் செல்லப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தாவடி, பத்திரகாளி அம்மன் கோயில் பகுதியில் அண்மையில் இந்தக் கொள்ளை இடம்பெற்றதாகச் சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

கோயிலுக்குச் சென்றுவிட்டுவீடுதிரும்பிக்கொண்டிருந்த பெண்ணை, மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்து சென்ற கொள்ளையர் அவரது தாலியை அறுத்துச் சென்றுள்ளனர்.

கொள்ளையரிடமிருந்து தாலியைப் பாதுகாக்க முயன்றபோதும் அது பயனளிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. எனினும் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-ஜ-4)

# சகோதரர்களிடையே முரண்பாடு; கல்லால் தாக்கப்பட்ட அண்ணன்

சாவகச்சேரி,ஏப்.18
அண்ணன்-தம்பிக்கு இடையிலான முரண்பாடு காரணமாக அண்ணன் கூரிய கல்லினால் தாக்கப்பட்டு நெஞ்செலும்பு உடைந்து வெளிக்கிளம்பியதோடு தலையிலும் படுகாயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு மந்துவில் கிழக்கில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த இருவருக்கும் இடையே சிறு விடயம் காரணமாக முரண்பாடு ஏற்பட்டுள்ளது. அதன் பின்னர் கைகலப்பாக மாறியதில் ஒருவரையொருவர் தாக்கியதாகக் குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

அதன்போதே அண்ணனின் விலா எலும்பு ஒன்று உடைந்து வெளிக்கிளம்பியதாகவும், தலையில் படுகாயமேற்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். காயமடைந்தவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். (த-ஜ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# நிரந்தர அரசியல் தீர்வு ஏற்படின் அதற்குப் புலிகளும் பங்காளிகள்

## கிளிநொச்சியில் நடந்த மக்கள் சந்திப்பில் தெரிவித்தார் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன்

கிளிநொச்சி,ஏப்.18

இந்த நாட்டில் ஒரு நிரந்தர அரசியல் தீர்வு ஏற்படுகின்ற போது, ஆயுதப் போராட்டத்தை நீண்ட காலமாக நடத்தியிருந்த தமிழீழ விடுதலைப் புலிகளும் அதில் பங்காளிகளாக இருந்துள்ளார்கள் என்பதை நிச்சயமாக அனைவரும் ஏற்றுக் கொண்டு தான் ஆகவேண்டும். ஏனென்றால் ஆயுதப் போராட்டத்துக்குப் பின்னால் ஒரு நியாயம் இருந்தது.

இவ்வாறு நாட்டின் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி அலுவலகமான அறிவகத்தில் வைத்து நேற்று முன்தினம் காலை மக்கள் மத்தியில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு மக்களைச் சந்தித்து அவர்களது குறைநிறைகளைக் கேட்டறிந்தார். அதன்பின்னர் அவர் அங்கு மேலும்கருத்துத்தெரிவிக்கையில், போர் நடைபெற்ற காலப் பகுதிகளிலும் சரி, தற்போதும் சரி ஆயுதப்போராட்டத்துக்குப் பின்னால் ஒரு நியாயம் இருந்தது என்பனை நான் பல தடவைகள் நாடாளுமன்றத்தில் கூறியிருக்கிறேன்.

போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் பல்வேறு காரணங்களின் நிமித்தம் பல்வேறு தவறுகள் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு ஒரு நியாயம் இருந்தது. இன்றைக்கும் எமது தேசியப் பிரச்சினைக்கு, தமிழ் மக்களுடைய பிரச்சனைக்கு ஒரு நியாயமான அரசியல் தீர்வு ஏற்படுத்தப்பட வேண்டுமென்ற கருத்தை இலங்கை அரசும், சர்வதேச சமூகமும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

இதற்கு அந்தப் போராட்டத்தின் பின்னணியில் இருந்த நியாயத்தை அவர்களும் புரிந்து கொள்கின்றார்கள் என்பது தான் அர்த்தம்.

தற்பொழுது போர் முடிவுக்கு வந்துள்ளது. மீண்டும் இந்த நாட்டிலே வன்முறை ஏற்படுவதை நாங்கள் விரும்பவில்லை. வன்முறை ஏற்பட்டால் அதன் மூலமாகக் கூடிய பாதிப்புக்கள் ஏற்படுவது எமது மக்களுக்கே. கடந்த கால வன்முறைகளால் அதிகமான பாதிப்புக்களைஎதிர்நோக்கியவர்கள் எமது மக்கள் தான்.

> “போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் பல்வேறு காரணங் களின் நிமித்தம் பல்வேறு தவறுகள் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு ஒரு நியாயம் இருந்தது.”

நாட்டில் சமாதானமாக, பேச்சு மூலமாக, புரிந்துணர்வின் மூலமாக நல்லிணக்கத்தினூடாகப் பேசி உலகத்திலே பல்வேறு நாடுகளிலே பல்வேறு இனங்களைச் சேர்ந்த மக்கள் சமாதானமாகவும், சமத்துவமாகவும் வாழ்ந்து வருகின்றார்கள்.

அதேபோல மக்களிடையே இறைமை பகிர்ந்தளிக்கப்பட்டு பிராந்தியங்கள், மாகாணங்கள் தங்களுடைய கருமங்களை, தமது மக்களுடைய தேவைகளைத் தாமே பூர்த்தி செய்யக் கூடிய வகையில் அரசியல் தீர்வு காணப்பட்டு உரிய ஒழுங்குகள் செய்யப்பட்டு மிகவும் நாகரிகமான முறையில் ஆட்சி நடைபெற்று வருகின்றன.

அந்த மக்கள் அமைதியாகவும், நிம்மதியாகவும், சுதந்திரமாகவும் வாழ்வதைப்போலவே இந்த நாட்டிலே எமது மக்களும் வாழ வேண்டும் என்ற ஆட்சிமுறையையே நாம் எதிர்பார்க்கிறோம். அதனையே தான் நாம் சர்வதேசத்திடமும் வலியுறுத்திவருகின்றோம். அதற்காக நாம் உழைத்து சர்வதேச சமூகத்தின் ஆதரவையும் பெற்றுள்ளோம்.

எமது மக்களுடைய சுயநிர்ணய உரிமைகள் அங்கீகரிக்கப்பட்டு-ஒருமித்த நாட்டுக்குள் எமது மக்களது இறைமை மதிக்கப்பட்டு-போதிய அதிகாரங்களுடன் சமூக, பொருளாதார, கலாசார ரீதியாக எங்களுடைய உரிமைகளை நாங்கள் அடையக்கூடிய வகையில்-எங்களுடைய அபிலாசைகளை நிறைவேற்றக்கூடிய வகையில் ஒரு அரசியல் தீர்வு ஏற்படவேண்டுமென்ற கருத்தை நாங்கள் வலியுறுத்தி முன்வைத்திருக்கின்றோம்.

அந்த நிலைப்பாட்டைச் சர்வதேசமும் ஏற்றுக்கொண்டு இலங்கை அரசிடம் பகிரங்கமாகக் கூறியிருக்கின்றது. அப்படியான அரசியல் தீர்வு ஏற்படுமாக இருந்தால் இந்த நாட்டு மக்களிடையே புரிந்துணர்வும், நல்லிணக்கமும் ஏற்படுவதற்கு வழிவகுக்கும் எனக் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறிதரன், எம்.ஏ.சுமந்திரன், சாள்ஸ் நிர்மலநாதன், கிழக்கு மாகாண பொருளாதார அமைச்சர் துரைரட்ணசிங்கம், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் குருகுலராசா, வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான பசுபதிப்பிள்ளை, அரியரத்தினம், ஆனோல்ட், சயந்தன் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர். (த-ஐ-4-426)

## மே தினத்துக்கு மறுநாள் விடுமுறையை வழங்குக

### கூட்டுறவாளர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.18

தொழிலாளர் தினமான மே தினம் இந்த முறை ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினத்தில் வருவதால் மறுநாள் திங்கட்கிழமை தமக்குப் பொது விடுமுறையாகப் பிரகடனப்படுத்தவேண்டும்என்று கூட்டுறவாளர்கள்கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடக்கு மாகாண கூட்டுறவாளர்களால்முன்னெடுக்கப்படும் மேதினப் பேரணி மற்றும் பொதுக் கூட்டம் என்பன இந்த முறை கிளிநொச்சியில் எழுச்சி பூர்வமாக நடத்தப்படவுள்ளன. இந்தப் பேரணியில் வடக்கில் உள்ள கூட்டுறவாளர்கள் ஒன்று திரண்டு கலந்து கொள்ளவுள்ளனர். இந்தச் சமயத்தில் இம்முறை தொழிலாளர் தினம் ஞாயிறு விடுமுறை தினத்தில் வருவதால், மறுநாள் திங்கட்கிழமை பொதுவான விடுமுறையை வழங்க வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சு நடவடிக்கையைமேற்கொள்ள வேண்டும் என்று கூட்டுறவாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து வடமாகாண கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத் தலைவர் வ.சிவகுமாருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, கூட்டுறவுப் பணியாளர்களுக்கான இந்த மே தின விடுமுறையை மறுநாள் திங்கட்கிழமை வழங்குவது தொடர்பாக வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சுடன் கலந்துரை யாடி நடவடிக்கை மேற் கொள் ளப்படும் என்றார். (த-ஐ-17)

## வடக்கு மாகாணக் கூட்டுறவாளர்கள் மே தினம் இம்முறை கிளிநொச்சியில்

யாழ்ப்பாணம், ஏப்.18

வடக்கு மாகாணத்தில் உள்ள கூட்டுறவாளர்கள் ஒன்றிணைந்து நடத்தும் மே தினப் பேரணி மற்றும் பொதுக் கூட்டம் என்பன இம்முறை கிளி நொச்சியில் மிகப் பெரியளவில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கான ஏற்பாட்டுக் கூட்டம் கடந்த சனிக்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் மற்றும் கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் போன்றோர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

வடக்கு மாகாணத்தில் ஒவ்வொரு மாவட்டங்களின் கோட்ட மட்ட ரீதியான ஊர்திகள் அமைக்கப்பட்டுப் பேரணியில்பயன்படுத்தப்படும். மொத்தமாக இருபது வரையான அலங்கார ஊர்திகளை அமைக்கவும் கூட்டத்தில்முடிவுசெய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் இருந்து குறைந்தது 10 வாகனங்களையாவது இந்த மேதினப் பேரணியில் ஈடுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட கூட்டுறவுப் பணியாளர்களை யாழ். மாவட்டத்தில் இருந்து அழைத்துச் செல்வதற்கும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களில் இருந்தும் சுமார் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட கூட்டுறவாளர்கள் இந்த மே தினப் பேரணி பொதுக் கூட்டங்களில் கலந்து கொள்வார்கள்.

கரடிப்போக்குச் சந்தியில் இருந்து பேரணி ஆரம்பமாகிக் கிளிநொச்சி கூட்டுறவுச்சபை மண்டபத்தைச்சென்றடையும். அங்கு மாபெரும் மேதினப் பொதுக் கூட்டம் இடம்பெறும். பேரணியில் பங்குபற்றும் சிறந்த ஊர்திகள் தெரிவு செய்யப்பட்டுப் பரிசுகள் வழங்கப்படும்.

கடந்த ஆண்டு யாழ்ப்பாணத்தில் கூட்டுறவாளர்களால் நடத்தப்பட்ட மே தினப் பேரணி மற்றும் பொதுக் கூட்டங்களில் பெரும் எண்ணிக்கையான கூட்டுறவாளர்கள் கலந்து கொண்டனர்.

கடந்த ஆண்டைப் போல் இந்த முறையும்மிகப்பெரியளவில்மேதினப் பேரணியைக் கிளிநொச்சியில் நடத்த முழுமையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேசமயம், இந்த மே தினப் பேரணியில் கலந்து கொள்ளும் கூட்டுறவாளர்களுக்கான இலவச் போக்குவரத்து வசதிகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா போன்ற மாவட்டங்களில் இருந்து கிளிநொச்சிக்கு வருகைதரும் கூட்டுறவாளர்களுக்கு விசேட போக்குவரத்துக்கள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. (த-ஐ-17)

## கலாசாரம், பாரம்பரியம் என்பவையே இறுதிப் போரில் அழியாத சொத்துகள்

### நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஏப்.18

இறுதிப் போரில் எமது அழியாத சொத்துக்களாக இருப்பவை எமது கலாசாரமும் பாரம் பரியமுமே. அதனைக் கட்டிக் காக்க வேண்டியது எமது ஒவ்வொருவரின் தலையாய கடமையாகும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் சி.சிவமோகன் தெரிவித்தார்.

வன்னி குரோஸ் கலாசாரப் பேரவையின் ஏற்பாட்டில் முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்ட காத்தவராயன் சிந்துநடைப் போட்டி நாடக விழாவில் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்: கலாசாரம் என்பது ஒரு இனத்தின் அடையாளம். கலாசாரம், பாரம்பரியமின்றி உலகில் எந்தவொரு இனமும் இல்லை. வன்னி மண்ணின் கலாசாரமாக கோவலன் கூத்து காத்தவராயன் கூத்து, கர காட்டம் பண்டாரவன்னியன் வரலாற்று நாடகம் மற்றும் இனியம் ஆகியன விளங்குவது பெருமைக்குரிய விடயம்.

இவற்றைக் கட்டிக்காக்க வேண்டியது ஒவ்வொருவரதும் கடமை. அதனைப் பேணிப் பாதுகாப்பதோடு அடுத்த சந்ததிக்கும் அவற்றைக் கொண்டு சென்று சேர்க்க வேண்டும். -என்றார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக முல்லை மாவட்டச் செயலக பிரதம கணக்காளர் மி.ஜெறினோல்ட் முல்லை வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி உதயராணி முன்ஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தப் போட்டியில் எட்டு அண்ணாவிமார்களின் தயாரிப்பில் உருவாக்கப்பட்ட காத்தவராயன் சிந்து நடைக் கூத்து, ஒவ்வொரு மணித்தியாலங்கள் போட்டியின் நேரமாக வரையறுக்கப்பட்டு அவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது அத்துடன் இப்போட்டிகளின் நடுவர்களாக துறை சார்ந்த தேர்ச்சி பெற்ற யாழ். நகர் நடுவர்கள் கடமை யாற்றியிருந்தனர். (த-ஐ-4-102)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களை அழித்தொழிக்கும் கைங்கரியங்கள் பல வழிகளில்

## அதன் ஒரு செயற்பாடே போதைப் பொருள் கடத்தல் என்கிறார் சரவணபவன் எம்.பி.

யாழ்ப்பாணம், ஏப்.18

உலக நாடுகளைப் பிடித்து விடுதலைப் புலிகளை அழிக்க முடியும் எனில், ஏன் கடற்பரப்பினூடாக மேற்கொள்ளப்படும் போதைப்பொருள் கடத்தல் செயற்பாட்டைக் கட்டுப்படுத்த முடியாது? அவர்கள் தமிழர்களை அழிப்பதற்குப் பல கைங்கரியங்களை மேற்கொண்டு வருவதுதான் அதற்குக் காரணம். அவற்றில் ஒன்றாகவே கடற்பரப்பின் ஊடாகப் போதைப் பொருள்கள் நாட்டுக்குள் அவர்களால் கொண்டுவரப்படுகின்றன.



இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

வலி.தென்மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனமும், சரவணபவன் அறக்கட்டளையும் இணைந்து நடத்திய சித்திரைப் புதுவருடக் கொண்டாட்டம் பண்டத்தரிப்பில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

எம்மை அறியாமலே நாம் உணராமலே எம்முடைய கலாசாரம் அழிக்கப்படுகிறது. உலக மயமாக்கல் என்ற ஒரு சொற்பிரயோகத்தை வைத்துக் கொண்டு அதனூடாக எமக்கு நுகரக் கூடியவற்றைக் காட்டி அதனூடாக எல்லோருக்கும் இந்த மாதிரி கணினி வேண்டும், தொலைபேசி வேண்டும் என அவை எல்லாவற்றையும் இதற்குள் கொணர்ந்து இளைஞர்களை அதற்குள் விழுத்தி தம்முடைய நிகழ்ச்சி நிரலை மிகச் சாதூரிமாக அவர்கள் நடத்திச் செல்கின்றனர்.

சமூகத்தைக் கெடுக்க திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் எவற்றைச் செய்தனரோ அதை இங்கும் செய்கின்றனர் என்பதை ஆழமாக அவதானித்தால் தெரியும். இதற்காக தம்முடைய கைங் கரியத்தை வெற்றி கரமாக முன்னெடுத்துச் செல்கின்றனர். இந்தச் செயற்பாடுகளில் இருந்து விடுபடுவதற்கு நம்முடைய இளைஞர்கள் இறுக்கமாக இருத்தல் வேண்டும்.

ஆக்கிரமிப்பில் இருந்து நாம் விடுபடவேண்டும். இந்தச் செயற்பாடுகளுக்காக ஒவ்வொரு பகுதியிலும் இதுபோன்ற நிகழ்வுகளை நடத்துதல் வேண்டும். இதுதொடர்பாக வசதி படைத்தவர்கள், செய்யக்கூடியவர்கள், புலம்பெயர்ந்த மக்கள் கருத்தில் கொள்ளவேண்டும்.

எம்மிடம் சித்திரைப் புத்தாண்டு மட்டுமல்ல தைப்பொங்கல் முதலான பல கொண்டாட்டங்கள் உள்ளன அவற்றிலும் இது போன்று பண்பாடு, கலை, கலாசாரங்களைப் பாதுகாப்பதற்கும் வளர்ப்பதற்கும் செய்யக் கூடியதை நாம் செய்வோம்.

எம்முடைய இளைஞர்கள் உள்ளனர்-காத்திருக்கின்றனர். இதுபோன்ற செயற்பாடுகள் ஊடாகத் தம்மை இவர்கள் வளர்த்துக் கொள்வார்கள். இந்த இளைஞர் கூட்டம் தம்முடைய கைங்கரியத்தைக் காட்டியதால் தான் நாம் இவ்வளவு தூரம் வந்துள்ளோம். இது ஓர் முன் உதாரணமாகட்டும். எல்லா இடங்களிலும் நாம் இதனைச் செய்வதற்கு எம்முடைய கலை, கலாசாரம் எல்லாம் இணைந்து வரும்போதுதான் நாம் முழுமையான தமிழனாகலாம். வெறுமனே சொல்லளவில் நான் பேசுவது தமிழ் என கூறுவதுடன் தமிழர்களாக இருக்க முடியாது. தற்போது நம்முடைய இளைஞர்கள் மத்தியில் இலகுவாக ஊடுருவியுள்ள ஒன்றுதான் போதைப்பொருள் பாவனை. போதைப்பொருள் நான் இருக்கின்ற இடத்தில் இருந்து மிகத் தொலைவில் இல்லை. மிக அருகாமையில் இருந்துதான் தொடங்குகின்றது இதன்வரவு. இன்று இலங்கையில் யாழ்ப்பாணத்தில் இருந்துதான் கேரளக் கஞ்சா வருகின்றது என்று தென்னிலங்கையில் பறை சாற்றியுள்ளனர். இங்கே கடந்த மூன்று மாதங்களில் 250 கிலோ கஞ்சா பிடிக்கப்பட்டுள்ளது. பொலிஸாரைக் கோட்டால், காவல்படையினரைக் கேட்டால் அது கடற்படையினரின் அனுசரணையுடன் தான் இங்கே வருகின்றது என்கிறார்கள். பாருங்கள் எம்மவர்கள் தம்முடைய பணத் தேவைக்காக இந்த வேலையைச் செய்கின்றனர். கடற்படையும் இதற்கு உதவி புரிகின்றது. அதுமட்டுமல்ல இந்த வேலையைச் செய்பவர்கள் தங்களுடைய நண்பர்களுக்கும் இதனைத் தெரியப்படுத்துகின்றனர்.

இது அப்படியே ஒரு புற்றுநோய் போல பரவுகின்றது, பரவிக் கொண்டிருக்கின்றது. நாங்கள் விழிப்பாக இருக்கவேண்டும், மக்கள்விழிப்பாக இருக்கவேண்டும். முக்கியமாக கரையோர மக்கள்விழிப்பாக இருக்கவேண்டும்.

ஏனெனில் அவர்களுடைய பிள்ளைகளும் பெற்றவர்களுக்குத் தெரியாமல் பணத்துக்காக இந்தச் செயற்பாட்டில் ஈடுபடக் கூடும். தம்முடைய வாழ்க்கையை இழக்க நேரிடலாம்.

போதைப் பொருள் கடத்துபவர்களைப் பிடிக்கவேண்டும். ஆனால் மூன்று மாதத்தில் 250 கிலோ கஞ்சாவைப் பிடித்துள்ளனர்.

இதனைவிட அதிகளவான கஞ்சா கடத்தப்பட்டிருக்கலாம் - நாட்டுக்குள் கொண்டுவரப் பட்டிருக்கலாம். இந்த விடயங்களில் இளைஞர்கள் அவதானமாக இருக்கவேண்டும். எந்தவகையில் தமிழர்களின் கலாசாரம் பண்பாட்டை சீர்குலைக்கும் கதவுகள் உள்ளனவே அவற்றை அடைப்பதற்கு தயாராக இருக்கவேண்டும் என்றார். (த-ஐ-4-ரி5)

## பஞ்சாபி சால்வையில் தீப்பற்றி உயிரிழந்தார் தாய்

### அடுப்பிலிருந்து பாத்திரம் இறக்கியபோது

யாழ்ப்பாணம், ஏப்.18

எரிந்துகொண்டிருந்த அடுப்பிலிருந்து பாத்திரத்தைத் தான் அணிந்திருந்த பஞ்சாபி சால்வையால் இறக்கிய போது எரிகாயங்களுக்கு உள்ளான பெண் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார்.

உடல் முழுவதும் தீக்காயங்களுக்கு உள்ளாகி யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த குடும்பப் பெண் சிகிச்சை பயன் இன்றி நேற்று முன்தினம் மாலை உயிரிழந்துள்ளதாக யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் மூர் வீதி, நாவாந்துறையில் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த முகமட் சப்ராஸ் பசீலா (வயது-32) என்ற இரண்டு பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்தார்.

கடந்த 13 ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இரவு 12.30 அளவில் குழந்தை பால் கேட்டு அழுதுள்ளது. தந்தையிடம் குழந்தையைக் கொடுத்து விட்டுச் சமையல் கட்டுக்குச் சென்ற இவர் மண்ணெண்ணெய் அடுப்பைப் பற்ற வைத்து தண்ணீர் கொதிக்க வைத்துள்ளார்.

தண்ணீர் கொதிக்க வைத்த பாத்திரத்தை இறக்குவதற்குப் பிடி துண்டு இல்லாத காரணத்தால் அணிந்திருந்த பஞ்சாபியின் சால்வையைக் கொண்டு தூக்கியுள்ளார். இதன்போது அடுப்பில் சால்வையின் நுணி தீப்பற்றி உடல் முழுவதும் தீ பரவியது. உடனடியாக முதலுதவி செய்யப்பட்ட அவர் யாழ். போதனா வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தார். அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிகப்பட்டு அவருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்ட போதும் அது பயனளிக்காது அவர் உயிரிழந்தார்.

பொலிஸாரும் நீதிமன்றப் பணிப்புக்கமைய திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமாரும் விசாரணை மேற்கொண்டனர். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப் பட்டது. (த-ஐ-4-107)





## தாவடியில் நேற்று சடலம் மீட்பு

காங்கேசன்துறை வீதி, தாவடிச் சந்தியில் கடை ஒன்றுக்கு முன்பாக சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். தாவடியில் வசிக்கும் இரத்தினசிங்கம் துரைசிங்கம் (வயது - 59) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகக் கோப்பாய் பொலிஸார் மேலும் கூறினர். (த-ஐ-4-101)

## விழிப்புணர்வு செயலமர்வு

யாழ்ப்பாணம், ஏப்.18

யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்தால் பதிவு செய்யப்பட்ட சக்தி வளக் கழக பொறுப்பாசிரியர்களுக்கான விழிப்புர்ணவுச் செயலமர்வு இன்று திங்கட்கிழமையும், நாளை செவ்வாய்க்கிழமையும் நடைபெறவுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ந. தெய்வேந்திரராஜா தெரிவித்துள் ளார்.

இந்த இரு நாள் செயலமர்வு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் அமைந்துள்ள விஞ்ஞான வள நிலையத்தில் காலை 8.30மணியிலிருந்துமாலை4.30 மணி வரை நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வுக்கு சக்தி வளக் கழகப் பொறுப்பாசிரியர் அல்லது பதிலாசிரியர் தவறாது கலந்து கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-ஐ-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனல் மின் நிலையம் வேண்டாம் சம்பூரில்

## மீள்குடியேற்றக் கிராம மக்கள் ஆர்ப்பாட்டம்




மூதூர்,ஏப்.18
திருகோணமலை மூதூர் கிழக்கு சம்பூரில் அமைய உள்ள அனல் மின் நிலையத் திட்டம் வேண்டாம் எனக் கோரி சம்பூர் மீள்குடியேற்றக் கிராம மக்கள் முன்னெடுத்த ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்றுக் காலை சம்பூர் அரசடி விநாயகர் கோவிலுக்கு முன் இடம்பெற்றது.

> இந்த நிலக்கரி அனல் மின் நிலையத்தை எமது பிரதேசத்தில் மட்டுமல்ல இலங்கையின் வேறு எந்த பிரதேசத்திலும் அமைக்க வேண்டாம் என ஜனாதிபதியாக தங்களை மன்றாட்டமாக கேட்டுக் கொள்கின்றோம்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் சமூக மட்டப் பிரதிநிதிகள், பெண்கள் அமைப்புக்கள், மீனவர் சங்கப் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். இதன்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு மனு ஒன்று கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கு.நாகேஸ்வரனிடம் கையளிக்கப்பட்டு அவரூடாக அனுப்பி வைக்கப்பட்டது.

அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
போர்ச் சூழ்நிலைகள் காரணமாகப் பல வருடமாக இடம்பெயர்ந்திருந்து, பல்வேறு நலன்புரி நிலையங்களில் பல துயரங்களை அனுபவித்தவாறு வாழ்ந்து வந்தோம். ஆயினும் கடந்த வருடத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட எமது மீள் குடியமர்வு தங்களது நல்லாட்சி அரசால் நிறைவடைந்து கொண்டிருப்பதை நன்றியுடன் நினைவு கோருகின்றோம்.
ஆனால் எமது பிரதேசத்தில் அனல் நிலையம் என்ற பெயரில் மனித வாழ்வுக்கு பெரும் தீங்கை ஏற்படுத்தக் கூடும் எனக் கருதப்படுகின்றதும், தற்போது அமெரிக்கா, சீனா, இந்தியா போன்ற நாடுகள் பலவற்றினால் கைவிடப்பட்டு கொண்டு வருவதுமான நிலக்கரி அனல் மின் நிலையம் ஒன்று அமைக்கப்படுவதற்கான செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றமை எமக்கு மன வேதனையை ஏற்படுத்துகின்றது.
இந்த அனல் மின் நிலையத்தால் பல ஏக்கர் நெற்செய்கைக் காணிகள் மற்றும் தோட்டக் காணிகள், 20 இற்கும் மேற்பட்ட கட்டு வலை மீன் பிடித் தளங்கள், நிலத்தடி நீர் மட்டம் போன்றவற்றை நேரடியாகவே இழக்கவேண்டிய நிலை ஏற்படுகின்றது.
எனவே நல்லாட்சி அரசு ஒன்றை அமைப்பதற்கான ஆணையை மக்களிடம் இருந்து பெற்றுக் கொண்ட பெருந் தலைவர் என்ற வகையிலும், இந்த நாட்டின் ஏழை மக்களின் வாழ்க்கையை நன்கு உணர்ந்தவர் என்ற வகையிலும், இலங்கை மக்களாகிய நாம் எமது வாழ்வின் ஜீவனோபாயம் மற்றும் எமது குழந்தைகளின் எதிர்காலம் ஆகிய வற்றைக் கேள்விக்குறியாக்கும் இந்த நிலக்கரி அனல் மின் நிலையத்தை எமது பிரதேசத்தில் மட்டுமல்ல இலங்கையின் வேறு எந்தப் பிரதேசத்திலும் அமைக்க வேண்டாம் என ஜனாதிபதியான தங்களை மன்றாட்டமாகக் கேட்டுக் கொள்கின்றோம். எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-ஜ-40)

---

# துமிந்த திஸாநாயக்கவுக்கு எதிராக விரைவில் ஒழுக்காற்று நடவடிக்கை

## பந்துல ஜனாதிபதிக்குக் கடிதம்



கொழும்பு, ஏப்.18
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்கவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன கோரிக்கை விடுத்துள்ளார்.
இந்தக்கோரிக்கைக் கடிதத்தைப் பதிவுத்தபாலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.
ஹோமாகம தேர்தல் தொகுதியின் பிரதம அமைப்பாளரான எனக்கு, அறிவிக்காமல் தொகுதியில் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேல் மாகாண அமைச்சர் காமினி திலகசிறிக்கு கடிதம் ஒன்றின் மூலம் கூட்டமொன்றை ஒழுங்கு செய்யுமாறு துமிந்த திஸாநாயக்க உத்தரவிட்டமை, கூட்டத்தில் பங்கேற்றமை, உரையாற்றியமை என்பன கட்சி ஒழுக்க விதிகளுக்கு புறம்பானதாகும்.
எனவே துமிந்த திஸாநாயக்கவுக்கு எதிராகக் கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கடிதம் ஊடாக ஜனாதிபதியிடம், பந்துல குணவர்த்தன கோரியுள்ளார்.
இதேவேளை-இந்த ஆவணத்தின் பிரதிகள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆலோசகர்களான முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க மற்றும் மகிந்த ராஜபக்ச ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (த-ஜ-5)

---

# விசாரணைகளுக்கு வராமல். அமெ. சென்றார் கோத்தபாய

## நடவடிக்கை எடுக்கக் கோருகிறது ஆணைக்குழு

கொழும்பு,ஏப்.18
பெரும் மோசடிகள் மற்றும் ஊழல்கள் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகளுக்குச் சமுகமளிக்காமல் திடீரென அமெரிக்காவுக்குச் சென்ற முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ஆணைக்குழு கோரவுள்ளது.
பெரும் மோசடிகள் மற்றும் ஊழல்கள் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவால் விசாரணைகள் நடத்தப்பட்டு வரும் நிலையில், ஆணைக் குழுவுக்குத் தெரியப்படுத்தாமல் திடீரென அமெரிக்காவுக்குக் கோத்தபாய சென்றிருந்தார்.
இதனால் தமது விசாரணைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக, ஆணைக் குழு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த நிலையில் கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராகத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்படி, ஆணைக் குழுவின் செயலாளர் ஊடாக ஜனாதிபதியிடம் கோர முடிவு செய்யப்பட்டுள்ளது.
அடுத்த மாத முதல் வாரத்திலேயே கோத்தபாய ராஜபக்ச நாடு திரும்புவார் என்ற அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.
கோத்தபாயவின் மாமியாருக்கு சுகவீனம் ஏற்பட்டமையினாலேயே, அவர் அமெரிக்காவுக் குச் சென்றிருந்ததாகத் தகவல்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-ஜ-5)

---

# புலிகளின் வெடிபொருள்களை மீட்கவே கடற்படைக்குப் பயிற்சி

## பசுபிக் தீவில் வழங்குகின்றது அமெரிக்கா


இந்தப் பத்து நாள் பயிற்சி, குவாம் தீவில் உள்ள அமெரிக்கக் கடற்படைத் தளம் மற்

கொழும்பு, ஏப்.18
விடுதலைப் புலிகளால் குளங்களிலும், கடலோரிகளிலும் விட்டுச் செல்லப்பட்டுள்ள வெடிபொருள்களை அகற்றுவதற்கே, அமெரிக்காவிடம் கடற்படையினர் பசுபிக் தீவில் பயிற்சி பெற்று வருவதாகக் கடற்படை தெரிவித்துள்ளது.
கடற்படையின் சுழியோடிகள் 20 பேருக்குப் பசுபிக் தீவான குவாமில், அமெரிக்க கடற்படை பயிற்சிகளை அளித்து வருகிறது.
கடந்த 7 ஆம் திகதி ஆரம்பித்த இந்தப் பயிற்சிகள் நேற்று முன்தினத்துடன் நிறைவடைந்துள்ளன.
இரண்டு நாட்டுப் படைகளுக்கும் இடையிலான நிபுணத்துவப் பரிமாற்றப் பயிற்சியாகவே, இந்தப் பயிற்சிகளை அமெரிக்கா வழங்கி வருகிறது.
சுழியோடும் நடவடிக்கைகள் தொடர்பான

றும் அதற்கு அப்பால் உள்ள கடற்பகுதியில் இடம்பெற்றது.
இது தொடர்பாகத் தகவல் வெளியிட்டுள்ள கடற்படை, வடக்கிலும் கிழக்கிலும் உள்ள குளங்கள் மற்றும் கடலோரிகளில் விடுதலைப் புலிகளால் விட்டுச் செல்லப்பட்ட வெடிபொருள்கள் இருப்பதாகவும், அவற்றை அகற்றுவதற்கான நிபுணத்துவப் பயிற்சிகளை அமெரிக்கக் கடற்படையினரிடம் இருந்து பெறுவதே இந்த கூட்டுப் பயிற்சியின் நோக்கம் என்றும் கூறியுள்ளது. (த-ஜ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர் மீதான இன அழிப்புக்கு சர்வதேச விசாரணை அவசியமானது

## கனேடிய எதிர்க்கட்சி வலியுறுத்து

கொழும்பு, ஏப்.18
ஈழத் தமிழ்த் தேசிய இனத்துக்கெதிரான போர்க் குற்றம் மற்றும் இன அழிப்பைச் சர்வதேச விசாரணைக்கு உட்படுத்தவேண்டும் என்று கனேடிய எதிர்க்கட்சியான பழமைவாதக் கட்சியின் தலைவி ரோணா அம்புரூஸ் அம்மையார் தெரிவித்துள்ளார்.

கனேடிய தமிழர் தேசிய அவைக்கும், கனடாவின் பழைமைவாதக் கட்சிக்கும் இடையிலான முக்கிய உயர்மட்டச் சந்திப்பு கடந்த 14 ஆம் திகதி இடம் பெற்றது. இந்தச் சந்திப்பின் பின்னர் எதிர்கட்சித் தலைவி விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சந்திப்பில், ஈழத் தமிழ் மக்கள் கடந்த காலங்களில் இலங்கை அரசால் எதிர்கொண்ட துன்பங்கள் தொடர்பில் ஆதாரங்களுடன், தமிழர் தரப்பினால் எடுத்துரைக்கப்பட்டது.

அத்துடன் ஈழத் தமிழர் தேசிய இனம் என்பதோடு அவர்களுக்கு உரித்தான சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் முன் வைக்கப்பட்டது.

தற்போதைய இலங்கை அரசு, கண் துடைப்புக்காக சில முன்னேற்றத்தைக் காண்பிக்க முயற்சிக்கின்றது என்றும், தமிழர்களுக்கு எதிரான இன அழிப்பு நடவடிக்கை தொடர்ந்து வருவதாகவும் ஆதாரங்கள் முன்வைக்கப்பட்டன.



> தற்போதைய இலங்கை அரசு, கண் துடைப்புக்காகச் சில முன்னேற்றத்தைக் காண்பிக்க முயற்சிக்கின்றது என்றும், தமிழர்களுக்கு எதிரான இன அழிப்பு நடவடிக்கை தொடர்ந்து வருவதாகவும் ஆதாரங்கள் முன் வைக்கப்பட்டன.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட எதிர்க்கட்சித் தலைவி, தமிழர்கள் தரப்பின் ஆதார பூர்வமான தரவுகளை முற்று முழுதாக உள்வாங்கி, தமது கட்சி, தமிழர்களின் தேவைகளை முன்னின்று அனைத்து உதவிகளையும் செய்யும் என உறுதி வழங்கினார்.

தமது கட்சி ஆட்சியிலிருக்கும்போது பொது நலவாய நாடுகளின் கூட்டத்தை இலங்கையில் வைத்த காரணத்தால் முற்று முழுதாகப் பகிஷ்கரித்தது மட்டுமல்லாது போர்க் குற்றம், மானிடத்துக்கு எதிரான குற்றம் மற்றும் இன அழிப்புக்கெதிராகத் தொடர்ச்சியாக உலக அரங்கில் உரத்துக் குரல் கொடுத்ததென்பதையும் நினைவூட்டினார்.

இந்தச் சந்திப்பைத் தொடர்ந்து, எதிர்க்கட்சி தலைவி விடுத்த உத்தியோகபூர்வ அறிக்கையில், ஈழத் தமிழ்த் தேசிய இனத்துக்கெதிரான போர்க் குற்றம் மற்றும் இன அழிப்பைச் சர்வதேச விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்றும், இதனைத் தற்போதுள்ள அரசிடம் வேண்டுகோளாகவும் முன் வைத்துள்ளார். (த-ஐ-5)

## மலாக்கா நீரிணை வரை ஆழ்கடலில் பாதுகாப்பு

### முன்னெடுக்கவுள்ளது இலங்கைக் கடற்படை

கொழும்பு,ஏப்.18
மாலைதீவு தொடக்கம் மலாக்கா நீரிணை வரையான ஆழ்கடலில் இலங்கைக்கடற்படை பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட திட்டம் ஒன்றை அடிப்படையாக வைத்தே, கடற்படை இந்தப் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாகக் கடற்படைப் பேச்சாளர் கப்டன் அக்ரம் அலவி தெரிவித்துள்ளார்.

இந்தப் பாதுகாப்புத் திட்டம் 2020 ஆம் ஆண்டு வரை இடம்பெறும்.

கடற்படையின் மூன்று போர்க் கப்பல்கள், மாலைதீவு மற்றும் இந்தோனேசியாவில் இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதற்கான பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளன.

எனினும் தற்போது கடற்படைக்கு ஆழ்கடல் கண்காணிப்புக் கப்பல்கள் தேவைப்படுகின்றன என்றும், விரைவில் நான்கு கப்பல்களை இதற்காகக் கொள்வனவுசெய்யவுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (த-ஐ-5)

## மோட்டார் பந்தயப் பயிற்சியில் நுவரெலியாவில் 12 பேர் காயம்

கொழும்பு, ஏப்.18
நுவரெலியா விக்டோரியா பூங்காவுக்கு அண்மையில் மோட்டார் பந்தயத்துக்காகப் பயிற்சியில் ஈடுபட்ட மோட்டார் சைக்கிள் ஒன்று விபத்துக்குள்ளானதில், மோட்டார் சைக்கிள் சாரதி உட்பட 12 பேர் காயமடைந்துள்ளனர்.

நுவரெலியாவில் புத்தாண்டுக் கொண்டாட்டத்துக்காக மோட்டார் பந்தயம் நடைபெறவுள்ளது. இதற்காக நேற்றுமுன்தினம் மோட்டார் சைக்கிள் வீரர்கள் பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர். இதனைப் பெருமளவானோர் வீதியின் இரு மருங்கில் நின்று பார்வையிட்டுக் கொண்டிருந்தனர்.

இதன்போது வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் சாரதி ஒருவர் வளைவில், வேகத்தைக் கட்டுப்படுத்தாமல் பார்வையாளர் கூட்டத்துடன் நேரே சென்று மோதினார்.

இதனால் மோட்டார் சைக்கிள் சாரதி, இதனை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த பார்வையாளர்கள், பாதுகாப்புக்கு நின்றிருந்த பொலிஸார் உள்ளிட்ட 12 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (த-ஐ-5)

## போகுமிடமெல்லாம் எதிர்ப்பு நெருக்கடியில் மகிந்த அமரவீர

கொழும்பு, ஏப்.18
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர போகுமிடமெல்லாம் தலைதூக்கும் எதிர்ப்புக் காரணமாக பெரும் நெருக்கடியொன்றை எதிர்கொண்டுள்ளார்.

மீன்பிடி, நீரியல் வளத்துறை அமைச்சரான மகிந்த அமரவீர, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்ட பின்னர் கட்சியை வலுப்படுத்தும் நோக்கில் இலங்கை முழுவதும் பயணம் மேற்கொண்டு கட்சியின் முக்கியஸ்தர்கள் மற்றும் ஆதரவாளர்களைச் சந்தித்து வருகின்றார்.

எனினும் அவர் போகுமிடமெல்லாம் கட்சியின் முக்கியஸ்தர்களிடம் மட்டுமன்றிக் கீழ்மட்ட ஆதரவாளர்கள் மத்தியிலும் அவருக்கு எதிர்ப்பு வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இதன் காரணமாக அவர் கலந்து கொள்ளும் கூட்டங்களை இடை



நடுவில் நிறுத்தி வெளியேற நேர்ந்துள்ளது. களுத்துறை, காலி, தங்காலை போன்ற இடங்களில் அவ்வாறான நிகழ்வுகள் நடைபெற்றிருந்தன.

இவ்வாறான நிலையில் கடந்த வாரம் மாத்தளை மாவட்டத்துக்குச் சென்றிருந்த மகிந்த அமரவீர, தனக்கு எதிர்ப்பைக் காட்டிய பிரதேச சபை உறுப்பினர்களை வழிக்குக் கொண்டு வரும் வகையில் தலா 5 லட்சம் ரூபா வீதம் அபிவிருத்தி நிதி பெற்றுத் தருவதாக ஆசை காட்டியுள்ளார்.

எனினும் அதற்கு மசியாத பிரதேச அரசியல்வாதிகள், மாத்தளை மாவட்டத்தில் சுதந்திரக் கட்சிக்காரர்கள் புறக்கணிக்கப் படுவதாகவும், ஐக்கிய தேசியக் கட்சியின் குடும்பம் மாவட்டத்தில் ஆதிக்கம் செலுத்துவதாகவும் முறைப்பட்டுள்ளனர்.

முன்னாள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோனின் புதல்வரும் மத்திய மாகாண சபை உறுப்பினருமான பிரமித தென்னக்கோனும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு அமரவீரவை விமர்சித்துள்ளார். இதன் காரணமாக மாத்தளைக் கூட்டத்திலும் தோல்வியுடன் வெளியேறும் நிலை மகிந்த அமரவீரவுக்கு ஏற்பட்டது. (த-ஐ-5)

## சு.க. மே தினக் கூட்டத்துக்கு மகிந்தவுக்கு அழைப்பில்லை

கொழும்பு, ஏப். 18
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டத்துக்கு இது வரை தனக்கு அழைப்புக் கிடைக்கவில்லையென முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கண்டியில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டத்துக்கு இது வரை அழைப்புக் கிடைக்கவில்லை. ஆனாலும் கூட்டு எதிர்க் கட்சியினால் கிருலப்பனையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மே தினக் கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டால், செல்வீர்களா? என்று ஊடகவியலாளர் ஒருவர் அவரிடம் வினவியதற்கு, கூட்டு எதிர்க் கட்சியின் மே தினக் கூட்டத்தைப் பொறுப்பேற்றிருக்கின்றேன் என்று பதிலளித்துள்ளார். (த-ஐ-5)

## தண்டிக்கும் அதிகாரத்தை வழங்கக் கோருகிறது கோப்

கொழும்பு, ஏப்.18
தண்டிக்கும் அதிகாரத்தை வழங்குமாறு பொது முயற்சியாண்மை குறித்த நாடாளுமன்றத் தெரிவுக்குழு (கோப் ஆணைக்குழு) கோரிக்கை விடுத்துள்ளது.

ஆணைக்குழுவின் அமர்வுகளின்போது சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதிநிதியொருவரைப் பிரசன்னமாகச் செய்யுமாறு, இதன் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுனில் ஹந்துநெத்தி, சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டின் சட்டத்தையும், அரசியல் அமைப்பையும் மீறிச் செயற்படும் அரச நிறுவன அதிகாரிகளை ஆணைக்குழுவுக்கு அழைத்து விசாரணை நடத்தி நேரடியாகவே அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் நோக்கில் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

கோப் ஆணைக்குழுவால் விசாரணை நடத்தி வரும் அரச நிறுவனங்களில் பல்வேறு நிதி மோசடிகள் மற்றும் சட்டவிரோத நியமனங்கள் வழங்கப் பட்டுள்ளமை விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

விசாரணைகளின்போது சட்டமா அதிபர் திணைக்கள உத்தியோகத்தர் ஒருவர் பிரசன்னமாகியிருந்தால் தண்டனை குறித்த தீர்மானங்களை எடுப்பது இலகுவாக அமையும் என்ற காரணத்தால் இவ்வாறு யோசனை முன்வைக்கப் பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் சபாநாயகர் கரு ஜயசூரிய சட்ட மா அதிபருடன் பேச்சு நடத்தி விசாரணைகளின்போது சட்டமா அதிபர் திணைக்களப் பிரதிநிதி ஒருவரையும் பிரசன்னமாக்க நடவடிக்கை எடுக்க உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (த-ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழ் நாட்டில் ஆரம்பித்துள்ள தூள்பறக்கும் தேர்தல் பரப்புரை

தமிழ் நாட்டில் மாநில சட்டசபை தேர்தலுக்கான பரப்புரைகளை அங்குள்ள முக்கிய கட்சிகள் அனைத்துமே தீவிரப்படுத்தி களத்தில் இறங்கியிருப்பதாக அங்கிருந்து கிடைத்து வரும் செய்திகள் கூறுகின்றன.

பொதுவில் முதலமைச்சர் ஜெயலலிதாவின் தலைமையிலுள்ள அ.தி.மு.கழகமே மீண்டும் பதவியில் அமரக்கூடிய வாய்ப்பைப் பெறும் என்று பார்வையாளர்களும் விமர்சகர்களும் கூறிவருகிறார்கள். இதற்கு அவர்கள் கூறும் முக்கிய காரணங்களில் ஒன்றாக அந்தக் கட்சியினர் நடத்துகின்ற கூட்டங்களுக்கு வந்து சாய்கின்ற லட்சக் கணக்கான மக்கள் தொகையைக் சுட்டிக் காட்டுகின்றார்கள்.

மக்கள் கூட்டம் அதிகரித்ததால் ஜெயலலிதா கலந்து கொண்ட ஒரு கூட்டத்தில் இரு பெண்கள் நெரிசலில் சிக்கி இறந்து போனதும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

தமிழ் நாடு தேர்தல் களத்தில் இப்போது கச்சதீவு பிரச்சினை முக்கிய பேசுபொருளாகக் காணப்படுகின்றது. கச்சதீவை மீட்டே தீர்வது என்று ஜெயலலிதா சூளுரைத்து வருகிறார்.

ஈழத்தமிழர் பிரச்சினை கடந்த தேர்தலின்போது அடிபட்ட அளவுக்கு இந்தமுறை எடுபடவில்லை. புதுக்கட்சி ஆரம்பித்து சகல தொகுதிகளிலும் வேட்பாளர்களை நிறுத்தியுள்ள சீமான் போன்றவர்களுக்கும் இலங்கைத் தமிழர் பிரச்சினை தான் வாய்ப்பான விடயம். ஆறு கட்சிகள் சேர்ந்து அமைத்துள்ள முற்போக்குக் கூட்டணியில் சேர்ந்துள்ள வைகோ போன்றவர்களும் இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றிப் பேசுகிறார்கள். பொதுவில் இவர்களில் பலரும் இலங்கையிலுள்ள இன்றைய நிலைமைகள் பற்றி அறியாதவர்கள். இங்கு போர் முடிவுற்று ஐந்து ஆண்டுகளாகி விட்ட நிலையிலும் இலங்கைத் தமிழர்களுக்கு தனிநாடுதான் ஒரே தீர்வு என்றும் தலைவர் பிரபாகரன் இன்னமும் தலைமறைவாக உயிருடன் இருந்து வருகிறார் என்றும் கூட களநிலை அறியாமல் அவர்கள் தமிழக மக்கள் மத்தியில் கருத்துக்களை வெளியிட்டு வருவது இங்குள்ளவர்களுக்கு சில சமயங்களில் சங்கடத்தை ஏற்படுத்துவதாய் இருப்பதுடன் இலங்கைத் தமிழர் சார்பில் ஆக்கபூர்வமான கருத்துக்களை, நடைமுறை சாத்தியமான கருத்துக்களை அவர்கள் வெளியிட வேண்டும். அதுவே பயன் தருவதாக இருக்கும் என்றும் கருத்து நிலவுகின்றது. சிறிமாவோ பண்டாரநாயக்கவுக்கும் அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்திக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட ஓர் உடன்பாட்டின் பிரகாரம் கச்சதீவு இலங்கைக்கு வழங்கப்பட்டது. அந்த ஒப்பந்தம் கையெழுத்தான சமயத்தில் தமிழ் நாட்டின் முதல்வராக இருந்த தி.மு.க.தலைவர் மு.கருணாநிதி எதிர்ப்புத் தெரிவிக்காமல் பேசாமடந்தையாக இருந்து விட்டார். அது தமிழ் நாட்டு மக்களுக்கு அவர் இழைத்த துரோகம் என்று ஜெயலலிதா பரப்புரை செய்து வருகின்றார். கச்சதீவு இலங்கைக்கு வழங்கப்பட்ட சமயம் தி.மு.கழகம் அதனை எதிர்த்து மத்திய குழுவில் தீர்மானம் நிறைவேற்றியதாக இப்போது அந்தக் கழகத்தின் சார்பில் மறுப்பறிக்கை விடுக்கப்பட்டுள்ளது. உடன்பாட்டை எதிர்த்து அரசியல் சட்டத்துக்கு மாறான செயல் என்று கருணாநிதி வழக்குத் தாக்கல் செய்திருக்க வேண்டும். அவர் செய்யாததைத் தாம் செய்வதாகவும் மீண்டும் ஆட்சிக்கு வந்ததும் கச்சதீவை உச்ச நீதிமன்றத் தீர்ப்பைப் பெற்று மீட்கப்போவதாகவும் தமிழ் நாட்டு மக்களுக்கு அவர் உறுதியளித்து வருகிறார். இது மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள லட்சக்கணக்கான மீனவ மக்களுக்கு மகிழ்ச்சியளிக்கும் விடயமாகவே இருக்கும். அதே சமயம் தாங்கள் பதவிக்கு வந்தால் மீனவர்களுக்கு நிறைவேற்றப் போகும் நலத்திட்டங்கள் பலவற்றைப் பற்றி தி.மு.கவும் கருணாநிதியும் உறுதி மொழிகளை தங்கள் தரப்பில் அள்ளி வீசிக்கொண்டு தான் இருக்கின்றார்கள். தே.மு.காவின் தலைவர் விஜயகாந்தின் தலைமையில் ஒன்று சேர்ந்துள்ளவர்களும் சாதாரணமானவர்கள் அல்லர். வைகோ, திருமாவளவன், விஜயகாந் போன்ற பீரங்கிப் பேச்சாளர்கள் அங்கு அணி சேர்ந்து இருக்கிறார்கள். தமிழ் நாட்டில் பரப்புரைப் பொருளாக முகிழ்த்துள்ள இன்னொரு முக்கிய விடயம் மது ஒழிப்பாகும். பதவிக்கு வந்ததும் முதல்காரியமாக மது ஒழிப்பு என்கிறார் கருணாநிதி. மது அரக்கனால் நாசமாகிப் போன குடும்பங்களைச் சார்ந்தவர்களுக்கு இது மகிழ்ச்சிதரும் விடயம் தான். அதே சமயம் தமிழ் நாட்டில் மது ஒழிப்பை நீக்கியவரே கருணாநிதி தான் என்று கூறும் ஜெயலலிதா மது ஒழிப்பு தமிழ் நாட்டில் படிப்படியாகக் கொண்டுவரப்படும் என்று கூறிவருகிறார்.

அடுத்துவரும் மே 16ஆம் திகதி தமிழ் நாட்டில் சட்டசபைக்கான தேர்தல் நடைபெறவிருக்கும் நிலையில் பரப்புரைகள் தூள் பறக்கத் தொடங்கியுள்ளன. தேசிய கட்சிகளான பா.ஜ.க மற்றும் அகில இந்திய காங்கிரஸ் போன்ற கட்சிகளின் பரப்புரைப் போக்கு இன்னமும் சூடுபிடிக்கத் தொடங்கவில்லை. பொதுவில் இப்போதைய முதலமைச்சர் ஜெயராம் ஜெயலலிதா மற்றும் முன்னாள் முதல்வர் மு.கருணாநிதியின் தி.மு.கழகத்துக்கும் இடையிலே பலத்த நேரடிப் போட்டி நிலவுவது போல் தெரிகின்றது. இவர்களுக்கு அடுத்தபடியாக முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் நடிகருமான விஜயகாந்தின் தலைமையிலான தேசிய முற்போக்கு கூட்டணி காணப்படுகின்றது.

பொதுவில் இவர்கள் மூவரும் முதல்வர் பதவியை நோக்கமாகக் கொண்டே களம் இறங்கி உள்ளார்கள். மூவரில் எவர் அரியாசனத்தில் அமர்வார் என்பது தமிழ் நாட்டு மக்களின் தீர்ப்பில் தங்கியுள்ளது.

# அடிப்படைத் தகவல்களே தெரியாத அரசியல்வாதிகளால் விமர்சனம்

## அமைச்சர் சுவாமிநாதன் செவ்வி

தமிழில் : கஜிவசி

போர்க் காலத்தில் கடும் துன்பப்பட்ட தமிழ்ச் சமூகத்தைப் பொருளாதார ரீதியிலும் சமூகவியல் ரீதியிலும் மேலுயர்த்துவதற்காக 65,000 வீட்டுத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படுகிறது என்று தெரிவிக்கிறார் சிறைச்சாலைகள் மறு சீரமைப்பு, புனர்வாழ்வு, மீள் குடியமர்வு மற்றும் இந்து சமய விவகார அமைச்சர் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன். அவர் கொழும்பில் இருந்து வெளிவரும் சிலோன் ருடே பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியின் மொழியாக்கம் இது.

### வீட்டுத்திட்டம் நிறுத்தப்படவில்லை

*கே:* 65,000 வீட்டுத் திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டது என்பது உண்மையா?

*ப:* வீட்டுத் திட்டம் நிறுத்தப்படவில்லை. கடைசி அமைச்சரவைக் கூட்டத்தில் அந்த விடயம் எடுத்துக்கொள்ளப்பட்டது. அத்தோடு அடுத்த அமைச்சரவைக் கூட்டத்துக்கு முன்பதாகக் குறிப்பிட்ட சில விடயங்கள் குறித்துத் பிரதமரும் தானும் என்னோடு தனிப்பட்ட முறையில் கலந்துரையாட வேண்டியிருக்கிறது என்று ஜனாதிபதி தெரிவித்தார். எப்படியிருந்தாலும், ஏற்கனவே உறுதி செய்யப்பட்டுவிட்ட ஆர் சிலோர்மிட்டால் நிறுவனத்துடனான ஒப்பந்தம் தொடர்பில் பிழைகளோ விவகாரங்களோ ஏதுமில்லை. மார்ச் 12ஆம் திகதிய அமைச்சரவைக் கூட்டத்திலேயே இந்த ஒப்பந்தத்தை ஆர் சிலோர்மிட்டால் நிறுவனத்துக்கு வழங்குவது என்று முடிவெடுத்தாகிவிட்டது.

அதற்கும் மேலாக, அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட அனைத்துக் குழுக்களும் இந்த வீட்டுத் திட்ட ஒப்பந்தத்தை எல்லோராலும் நன்கு அறியப்பட்ட ஆர் சிலோர்மிட்டால் என்ற பிரெஞ்ச் நிறுவனத்துக்கே வழங்குவது என்று ஏகமனதான முடிவையே எடுத்துள்ளன.

*கே.*நீங்கள் கூறுவது போல திட்டம் நிறுத்தப்படவில்லை என்றால், இந்தத் திட்டத்தைச் சிதைப்பதற்கு - அமுக்கி விடுவதற்கு - யார் முயற்சிக்கிறார்கள்?

*ப:* யாழ்ப்பாணத்தில் இந்தத் திட்டம் நடக்கக்கூடாது என்று விரும்புகின்ற சில அரசியல்வாதிகளே அனேகமாக இந்தத் திட்டத்தை முடக்கி விடுவதற்கு முயற்சிக்கிறார்கள். ஆனால், யாழ்ப்பாணத் தமிழ்ச் சமூகத்தை நான் உயர்த்திவிட வேண்டும். தமிழ்ச் சமூகத்தின் தரத்தையும் நான் உயர்த்திவிடவேண்டும். ஏனென்றால், அவர்கள் போரால் மோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள். ஒரு அமைச்சராக நான் எடுக்கும் சில முடிவுகளை வடக்கில் உள்ள சில அரசியல்வாதிகளால் ஏற்றுக்கொள்ள முடியாமல் இருக்கின்றது.

> இந்தத் திட்டத்தின் வடிவமைப்பு (வீட்டின் வடிவமைப்பு) கூட நன்கு அறியப்பட்ட ஒன்றே. அவர்கள் தொழில்முறை வடிவமைப்பாளர்கள். பால்மண்ட் ஸ்ருடியோ என்பது அதன் பெயர், லண்டனில் உள்ளது. இலங்கையின் பல திட்டங்களில் அவர்கள் பணியாற்றி உள்ளார்கள். வீட்டுக்கான கட்டம் அறிவியல் பூர்வமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

அனேகமாக, அந்த அரசியல்வாதிகள் வீட்டுத் திட்டத்தை முடக்கி விட நினைப்பதற்கான காரணம், தமிழ்ச் சமூகத்தை மேலுயர்த்துவது அவர்களுக்குத் தேவையற்றதாக இருக்கின்றமையே.

*கே.*இப்படிச் சில அரசியல்வாதிகள் இந்தத் திட்டத்தை அமுக்கி விடுவதற்கு முயன்றாலும்கூட, அதற்கான அதி உச்சத் தேவை இருக்கின்றது. அப்படியிருக்கையில் அமைச்சு ஏன் திட்டத்தை விரைவில் ஆரம்பிக்கவில்லை?

*ப:* திட்டத்தை ஆரம்பிப்பது குறித்து முடிவெடுப்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடனும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் நான் கலந்துரையாடல்களை நடத்த உள்ளேன். அந்தப் பகுதிக்கு (வீட்டுத் திட்டம் வழக்கப்பட உள்ள பகுதிக்கு) ஜனாதிபதி சென்ற போது அவரது கவலையெல்லாம், மக்கள் அந்த வீடுகளை ஏற்றுக்கொள்ளத் தயாரா என்பதிலேயே இருந்தது.

### வீடுகளில் வசிக்கப் போகிறவர்கள் மக்களே

அந்த வீடுகளில் வசிக்கப் போகிறவர்கள் மக்களே; அரசியல்வாதிகள் அல்லர்.

மிகக் குறுகிய காலத்துக்குள் இந்தத் திட்டத்துக்கு 35,000 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. இது ஏனைய திட்டங்களுக்குக் கிடைத்த விண்ணப்பத்திலும் பார்க்க மூன்று மடங்கு அதிகமானது.

*கே:* அந்தளவுக்கு மிக அதிகமான தேவை இந்தத் திட்டத்துக்கு இருக்கின்றது என்னும் போது, திட்டம் மேற்கொள்ளப் படாது என்கிற வதந்தி ஏன் எழுகிறது?

*ப:* தங்களுடைய சொந்த நலன்களுக்காக இந்தத் திட்டத்தை அபகரித்துவிட நினைக்கின்ற சில ஒப்பந்தகாரர்களே இந்த வதந்திகளுக்குக் காரணம். அவர்கள் மக்களுடைய நலன்களுக்காக இதனைச் செய்யவில்லை.

ஆனால், நாங்கள் மக்களுக்கு எதையாவது செய்வதற்கு முயற்சிக்கின்றோம். மக்கள் அதனை ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை ஏற்கனவே ஏற்றுக் கொண்டுவிட்ட மக்களின் மனதை மாற்றுவதற்கு இந்த ஒப்பந்தகாரர்கள் முயற்சிக்கிறார்கள். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனகூட இந்தத் திட்டத்தால் கவரப் பட்டுள்ளார்.

*கே:*இந்தச் சர்ச்சைகள் எல்லாவற்றுக்கும் நடுவில் இந்தத் திட்டம் குறித்த உங்களது தனிப்பட்ட கருத்து என்ன?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ப:இந்தத் திட்டம்தான் யாழ்ப் பாணத்துக்கு மிகப் பொருத்தமான ஒன்று. அத்தோடு ஒப்பந்த நிறுவனமே அதற்கான நிதி அனுசரணையையும் வழங்குகின்றது. அது உலக அளவில் நன்கு அறியப்பட்ட சிறந்த பிரான்ஸ் நாட்டு இரும்பு நிறுவனமும் கூட.

**வடக்கு மாகாண முதலமைச்சரின் விமர்சனம்**

இந்தத் திட்டத்தின் வடிவமைப்பு (வீட்டின் வடிவமைப்பு) கூட நன்கு அறியப்பட்ட ஒன்றே. அவர்கள் தொழில்முறை வடிவமைப்பா ளர்கள். பால்மண்ட் ஸ்ரூடியோ என்பது அதன் பெயர். லண்டனில் உள்ளது. இலங்கையின் பல திட்டங்களில் அவர்கள் பணியாற்றி உள்ளார்கள்.

வீட்டுக்கான கட்டடம் அறிவியல் பூர்வமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதற்காக 6 மாதங்க ளுக் கும் மேற்பட்ட காலம் நாம் அவர் களுடன் பணியாற்றி இருக்கின்றோம். இந்தத் திட்டம் சூழல் நேர்த்தி - நடப்பு - சார்ந்ததும்கூட.

*கே.*வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் இந்தத் திட்டத்தை விமர்சித்திருக்கிறார். சுற்றுச்சூழல் ரீதியாக இந்தத் திட்டம் யாழ்ப்பாணத்துக்குப் பொருத்தப்பாடுடையது அல்ல என்று கூறியிருக்கி றார். உங்களுடைய பார்வை என்ன?

*ப:* மக்களுக்கு ஏன் சமையல் எரிவாயு கொடுக்கப்படவேண்டும் என்று விக்னேஸ்வரன் கேட்கிறார். அதற்கான காரணம் என்னவென்றால் விறகின் விலை கூடுதல் என்பதுதான். ஒரு கிலோ கிராம் விறகின் விலை 15 ரூபாவுக்கு விற்கப்படுகிறது. ஒரு குடும்பத்துக்குக் குறைந்தது ஒரு நாளைக்கு 5 கிலோ கிராம் விறகு தேவை என்றால், மாதத்துக்கு 2000, ரூபா தேவை விறகுக்கு. அதேநேரம் எரிவாயு சிலிண்டர் ஒன்றுக்கு 1,400 ரூபாதான் செலவு. அதேநேரம் யாழ்ப்பாண மக்களுக்கு விறகைப் பெற்றுக்கொள்வதும் பெரும் சிரமம்.

இந்தத் திட்டத்தினுடைய அடிப்படைத் தரவுகளைப் பற்றித் தெரிந்து கொள்ளாமலேயே அரசியல்வாதிகள் அறிக்கைகளை விட்டுவிடுகிறார்கள். இந்தத் திட்டத்துக்கு எதிராக மற்றொரு, நன்கு அறியப்பட்ட அரசியல்வாதியும் நாடாளுமன்றத்தில் அறிக்கை வாசித்தார் (நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனையே குறிப்பிடுகிறார்). ஆனால், அதன் பின்னர், இரண்டு நாள்கள் கழித்து எனக்கு ஒரு கடிதம் அனுப்புகிறார். இந்தத் திட்டத்தின் கேள்வி கோரல் நடைமுறை மற்றும் இந்தத் திட்டத்தின் விவரங்களைத் தருமாறு அதில் கேட்டிருக்கிறார்.

இதையே அவர் நாடாளுமன்றத்தில் அறிக்கையிடுவதற்கு முன்பாக என்னிடம் கேட்டிருந்தாரானால் அது எனக்கும் இந்தச் சமூகத்துக்கும் நன்மை பயப்பதாக இருந்திருக்கும்.

இப்படித்தான் இந்தத் திட்டத்தை விமர்சிப்பவர்கள் அது பற்றிய அடிப்படையான தகவல்கள் எதனையும் தெரிந்துகொள்ளாமலேயே அதைச் செய்கிறார்கள்.

அந்த விவரங்களை நான் அந்த அரசியல்வாதிக்கு (சுமந்திரன்) கொடுக்கும்போது, செப்ரெம்பர் 2014 முதல் சரியான கேள்வி கோரல் நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளது என்பதையும் இந்தத் திட்டம் வெளிப்படையானது என்பதையும் அவர் தெரிந்துகொள்வார்.

அமைச்சரவைக் குழு, திட்டக் குழு மற்றும் இன்னொரு குழு என்பன இந்தத் திட்டப் பரிந்துரையை ஆய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்டன. அனைத்துக் குழுக் களுமே, ஆர்சிலோர்மிட்டால் நிறுவனத்தின் யாழ்ப்பாணத்துக்கான வீட்டுத் திட்டத்தையே மிகப் பொருத்தமானது எனப் பரிந்துரைத்தன.

இந்த ஒரு நிறுவனம்தான் 100 வீதம் உறுதிப்படுத்தப்பட்ட நிதி ஏற்பாடுகளையும் முன்வைத்தது. கொங்ஹொங் மற்றும் சங்காய் வங்கிக் கூட்டுறவு நிறுவனத்தின் (எச்எஸ்பிசி) மற்றும் பிரெஞ்ச் அரசின் ஊடாக அந்த ஏற்பாடுகள் முன்வைக் கப்பட்டன.

அமைச்சரவைக் குழு, திட்டக் குழு மற்றும் இன்னொரு குழு என்பன இந்தத் திட்டப் பரிந்துரையை ஆய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்டன. அனைத்துக் குழுக் களுமே, ஆர் சிலோர்மிட்டால் நிறு வனத் தின் யாழ்ப் பாணத்துக்கான வீட்டுத் திட்டத்தையே மிகப் பொருத்த மானது எனப் பரிந்துரைத்தன.

இந்த வீட்டுக்கான அடிப்படைக் கட்டுமானம் 1.4 மில்லியன் (14 லட்சம்) ரூபா பெறுமதியானது. இரண்டாவதாக முன்வைக்கப்பட்ட கேள்வி கோரலில் இந்த அடிப்படைக் கட்டுமானத்துக்கான செலவு 1.3 மில்லியனாக முன்வைக் கப்பட்டது. ஆனால் அந்த நிறுவனம் நிதி ஏற் பாடுகளுக்கான எந்தவிமான உத்தரவாதத்தையும் முன்வைக்கவில்லை.

நாங்கள் பெற்றுக்கொள்ளும் கடனுக்கான வட்டி சலுகை ரீதியிலானது. இது ஒரு வர்த்தகக் கடன் அல்ல. அப்படிப் பெற்றால் வட்டி வீதம் இதனைவிட 5 அல்லது 6 வீதம் அதிகமாக இருக்கும்.

## சமூக சேவை உத்தியோகத்தர் ஆள்சேர்ப்புத் திட்டத்தில் மேலதிக கல்வித் தகைமைகள்

அண்மையில் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளரால் சமூக சேவை உத்தியோகத்தர் பதவிக்கான ஆள்சேர்ப்புப் போட்டிப் பரீட்சைக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அதில் பல்கலைக்கழக பட்டத்துடன் க.பொ.த (சா/த), க.பொ.த(உ/த) ஆகியன இந்தப் பதவிக்கு வேண்டிய கல்வித்தகைமைகளாகக்காட்டப்பட்டுள்ளன. இவை அண்மையில் தயாரிக்கப்பட்ட சமூகசேவை உத்தியோகத்தர் ஆள்சேர்ப்புத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கின்ற கல்வித் தகைமைகளாகும்.

எனினும் இந்த ஆள்சேர்ப்புத் திட்டத்தில் அரசின் கொள்கைப்படி பொதுச் சேவை ஆணைக் குழுவினாலும் பொது நிருவாக அமைச்சினாலும் வரையறை செய்யப்பட்ட கல்வித்தகைமைகளுடன்உடன்படாதவகையில்ஆள்சேர்ப்புக்கான கல்வித்தகைமைகள் சேர்க்கப்பட்டுள்ளன. அரசின் வரையறைகளின்படி MN 4 (2006) அல்லது அதற்கு மேற்பட்ட சம்பள அளவுத் திட்டமுடைய பதவிகளுக்கு பல்கலைக்கழக பட்டம் அல்லது சேவைநிலை அனுபவம் என்பனவே கல்வி மற்றும் தொழில்சார் அனுபவமாகும். பல்கலைக்கழகப் பட்டத்துடனான MN சம்பள அளவுத்திட்டமுடைய எந்த வொரு பதவிக்கும் க.பொ.த(சா/த) அல்லது க.பொ.த (உ/த) வேண் டப்படுவதில்லை. உதாரணமாக MN 4 (2006) சம்பள அளவுத்திட்டமுடைய அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு பல்கலைக்கழகப் பட்டமொன்றே போதுமானதாகும். ஆள்சேர்ப்புத் திட்டங்கள் யாவும் பொது நிர்வாக சுற்றறிக்கை 06/2006 இற்கமைய பொதுச் சேவை ஆணைக்குழுவின் வழிகாட்டல் சுற்று நிருபத்தின் அடிப்படையிலேயே தயாரிக்கப்படல் வேண்டும். தன்னிச்சையாக எந்தவொரு அலுவலரும் அடிப்படை வரையறைகளை மாற்ற முடியாது.

மேலும், இலங்கை நிர்வாக சேவையை எடுத்துக்கொண்டால் பல்கலைக்கழகப் பட்டம் அல்லது ஒரு பதவியின் சேவைக்காலம் என்பனவே போதுமானது.

அவ்வாறிருக் கும்போது MN 5 சம்பள அளவுத்திட்டமுடைய சமூக சேவை உத்தியோகத்தர் பதவிக்கு மட்டும் க.பொ.த (சா/த) பெறுபேறுகள் எதிர்பார்க்கப்படுவதன் காரணம் என்ன?

இன்னொரு விதமாக நோக்கினால் க.பொ.த (சா/த) மற்றும் க.பொ.த (உ/த) கல்வித் தகைமையின்றி ஒருவர் பல்கலைக்கழகப் பட்டத்துடன் அபிவிருத்தி உத்தியோகத்தராகவோ அல்லது இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தராகவோ தெரிவுசெய்யப்பட வாய்ப்பு இருக்குமெனின் அவர் ஏன் ஒரு சமூகசேவை உத்தியோகத்தராகத் தெரிவு செய்யப்பட முடியாது என்பது நியாயமான கேள்வியாகும்.

இதனிடையே சமூக சேவை உத்தியோகத்தருக்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கும் கூட க.பொ.த(சா/த), க.பொ.த (உ/த்) தகைமை வேண்டப்பட்டுள்ளது. இதுவும் அரசின் மட்டுப்படுத்தப்பட்ட ஆள்சேர்ப்புக்கான வரையறைகளை மீறியுள்ளமை நோக்கத்தக்கது. அதேநேரம், சமூக சேவை உத்தியோகத்தர் வகுப்பு 1 இலிருந்து விசேடதரத்துக்கானபதவிஉயர்வுக்கும் க.பொ.த(சா/த) வேண்டப்பட்டிருப்பது ஆச்சரியமளிக்கின்றது.

மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்கும் க.பொ.த. (சா/த), க.பொ.த.(உ./த) கோரப்பட்டமையும் வகுப்பு 1 இலிருந்து விசேட வகுப்புக்குப் பதவி உயர்வுக்கும் க.பொ.த(சா/த), க.பொ.த(உ/த) உட்செலுத்தப்பட்டமையும் முற்றிலும் அரச நடைமுறைக்குப் பொருத்தமற்றதாகும்.

எனவே சமூகசேவை உத்தியோகத்தர் பதவியின் ஆள்சேர்ப்புத்திட்டம் உரியவாறு அரசின் நடைமுறைகளுக்கமைய திருத்தப்பட்டு மீள் பரீட்சை விளம்பரம் கோரப்பட வேண்டும்.

எனவே உரிய நடவடிக்கைகளை மேற் கொண்டு உதவுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**பாதிக்கப்பட்டவர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாய்லாந்தில் அண்மையில் உலகின் பெரிய நீர்ச்சண்டைத் திருவிழா இடம்பெற்றது. தாய்லாந்தின் கலாசார புதுவருடத்தைக் கொண்டாடு ஒருவரில் ஒருவர் நீரூற்றி மகிழ்ந்தனர். 3 நாள்கள் இடம்பெற்ற இந்தப் புதுவருடக் கொண்டாட்டத்தில் இதுவும் ஒரு அங்கமாகும். இதன நாடுதழுவிய ரீதியில் இந்த சடங்கு கொண்டாடப்பட்டது. தென்கிழக்கு ஆசியாவில் வறட்சி நிலவும் சூழலில் இது இடம்பெற்றிருப்பது ச

## எத்தியோப்பியாவில் 140 பேர் படுகொலை

### தெற்கு சூடான் கும்பல் அட்டகாசம்

ஆடிஸ் அபாபா,ஏப்.18
எத்தியோப்பியாவில் தெற்கு சூடான் எல்லையில் காம்பெல்லா மாகாணம் உள்ளது. இங்குள்ள முகாமில் தெற்கு சூடானில் கடந்த 2013 ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரத்தை தொடர்ந்து அங்கிருந்து வந்த அகதிகள் தங்கியுள்ளனர்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் தெற்கு சூடானில் இருந்து காம்பெல்லா மாகாணத்துக்குள் ஆயுதங்களுடன் எத்தியோப்பியாவுக்குள் ஒரு கும்பல் புகுந்தது. அவர்கள் கண்ணில் பட்டவர்களையெல்லாம் தாக்கினர்.

பின்னர் சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினர். அதில் 140 பேர் உயிரிழந்தனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்கள் ஆவர். இவர்களைத் தவிர 39 சிறுவர்களைக் கடத்திச் சென்றனர். இத்தகவலை எத்தியோப்பியா தகவல் தொடர்பு துறை அமைச்சர் கெடாசெவ் ரெடா தெரிவித்தார்.

தெற்கு சூடானைச் சேர்ந்த 'முர்லே' என்ற பழங்குடியின மக்கள் தாக்குதலில் ஈடுபட்டதாகவும் அவர் கூறினார். சம்பவம் குறித்து ,பொலிஸார் விரைந்து சென்று பதில் தாக்குதல் நடத்தினர். அதில் 60 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.


இதற்கிடையே துணை ஜனாதிபதி; ரியக் மாசர் தனக்கு எதிராக புரட்சி நடத்தி ஆட்சியை கவிழ்க்க முயன்றதாக ஜனாதிபதி சல்வா கீர் குற்றஞ் சாட்டினர். அதனை துணை ஜனாதிபதி மாசர் மறுத்துள்ளார். குடிபெயர்ந்த பழங்குடியினர் இத்தாக்குதலில் ஈடுபட்டதாக அவர் கூறினார்.(ஐ-ரி4)

## பாதுகாவலரை குதறிய புலி

சான் சல்வடோர், ஏப்.18
எல்சல்வடோரில் மிருகக்காட்சி சாலையில் இருந்த வெண் புலி பாதுகாவலர் ஒருவரைக் கொன்று, தப்பித்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், தப்பித்த புலி சில நிமிடங்களில் மீண்டும் மிருகக் காட்சி சாலையில் கொண்டு வந்து சேர்க்கப்பட்டது என பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், பாதுகாப்பு ஆடைகள் எதுவும் அணியாமல் புலிக்கு உணவு வழங்கச் சென்ற வேளையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. புலி குதறியதில் அவருக்கு கடுமையான காயங்கள் ஏற்பட்டது. இத னால் அவர் உயிரிழந்தார் எனத் தெரிவித்தார். (ஐ-ரி4)



## சவூதி அரேபியாவிடம் இரு தீவுகள் ஒப்படைப்பு

### எகிப்தில் கலவரத்தின் பின்னணி



கெய்ரோ,ஏப்.18
சவூதி அரேபியா மன்னர் சல்மான் அண்மையில் எகிப்துக்கு வருகை தந்தார். அப்போது எகிப்து ஜனாதிபதி அப்துல் பதே அல்–சிசியை சந்தித்துப் பேசியுள்ளார்.

அதைத் தொடர்ந்து செங்கடலில் உள்ள திரான், சனாபிர் ஆகிய ஆளில்லாத இருதீவுகளை சவூதி அரேபியாவுக்கு வழங்குவதாக அறிவித்தார்.

அதற்கு எகிப்தில் கடும் எதிர்ப்பு கிளம்பியது. ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் ஒப்புதல் பெறாமல் 65 ஆண்டுகள் தங்கள் கட்டுப்பாட்டில் இருந்த தீவுகளை தன்னிச்சையாக வழங்கி விட்டார்.

எகிப்து மக்களின் உரிமை தாரை வார்க்கப்பட்டது எனக் குற்றஞ் சாட்டப்பட்டது.

இதனால் நேற்றுமுன்தினம் தலைநகர் கெய்ரோ, அலெக்சாண்ட்ரியா உள்ளிட்ட பல நகரங்களில் கலவரம் வெடித்தது. பொதுமக்கள் வீதிகளுக்கு வந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஜனாதிபதி சிசிக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர். அவர் பதவி விலக வலியுறுத்தினர். இதனால் பதட்டமும் பரபரப்பும் ஏற்பட்டது.

கலவரத்தை அடக்க ஆயிரக்கணக்கான பொலிஸார் அங்கு குவிக்கப்பட்டனர். கலவரத்தில் ஈடுபட்ட 80 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதற்கிடையே தனது நட்பு நாடான எகிப்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினையைத் தீவிரமாக கண்காணிப்பதாக அமெரிக்க வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது. (ஐ-ரி4)

## ஈக்குவ... நிலந...

### 77 பேர் சா...

குவிட்டோ,ஏப்.18
ஈக்குவடோரில் நேற்றுமுன்தினம் மாலை ஏற்பட்ட நில நடுக்கத்தால் 77 பேர் உயிரிழந்துள்ளனர். ரிச்டர் அளவில் 7.8 என பதிவாகியுள்ள இந்த நிலநடுக்கம் நகரை உலுக்கியதுடன் 100 மைல்கள் தொலைவுக்கு பாதிப்பையும் ஏற்படுத்தியது என அதிகாரிகளும், பாதிக்கப்பட்ட மக்களும் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி அலுவலக செய்திக் குறிப்பில், 77 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், 588 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், ஜனாதிபதி பாதிக்கப்பட்ட பகுதிக்கு அவசர நிலை பிரகடனப்படுத்தியுள்ளார்.

மேலும், 10 ஆயிரம் இராணுவத்தினரும், 3 ஆயிரத்து 500 பொலிஸாரும் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு மீட்புப்பணிக்காக விரைந்துள்ளனர்.

ஜனாதிபதி ரபேல் கொரேயா தெரிவிக்கையில், 1979 ஆம் ஆண்டிலிருந்து ஈக்குவாடோரை

நிலநடுக்கம்
கிறது. இதன
மாகாணங்க
நிலை பிரக
யுள்ளோம்.
குவிட்டோவி
பலமாக உ
100 மைல்க
க்கு நில நடு
பட்டது எனத்
இடிபாடுக
டைந்தவர்க
மருத்துவம
வீடுகள், அடு
யங்களை உ
கட்டடங்கள்
இதனிடையே
வும், தேசிய

## வட கொரியாவின் ஏவுகணை சோதனைக்கு ஐ.நா. பாதுகாப்

வொஷிங்டன்,ஏப்.18
சக்திவாய்ந்த அணுகுண்டு, ஐதரசன் குண்டு மற்றும் அணு ஆயுதங்களை நீண்டதூரம் சுமந்து சென்று தாக்குதல் நடத்தும் ஏவுகணைகள் ஆகியவற்றை வடகொரியா அவ்வப்போது பரிசோதித்து வருகிறது.

இதற்கு உலக நாடுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. ஆனால், உலக நாடுகள் எதிர்ப்பை பொருட்படுத்தாத வடகொரியா, ஏவுகணை சோதனை நடத்தும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.

இந்த நிலையில், வடகொரியாவின் தேசத்தந்தையான வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்–னின் தந்தையும், அந்நாட்டின் முன்னாள் அதிபருமான மறைந்த கிம் இல் சுங்–கின் பிறந்தநாள் கடந்த வெள்ளிக்கிழமை கொண்டாடப்பட்டது. ஆண்டுதோறும் அவரது பிறந்தநாளை ஏவுகணை சோதனைகளுடன் வடகொரியா கொண்டாடும். நடப்பு ஆண்டும், ஏவுகணைச் சோதனை

ஆனால், இந்த ஏவுகணை சோதனை தோல்விய

இந்நிலையில், வடகொரியாவின் ஏவுகணை சோத ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை கடும் கண்டனம் ஏவுகணை முயற்சி தோல்வியில் முடிந்தாலும், இ னத்தின் விதிகளை மீறிய நடவடிக்கை என்று கூற அனைத்துவித நிகழ்வுகளையும் சபை உன்னிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ண்டாடும் வகையில் இது இடம்பெற்றது. தூய்மைப்படுத்தும் சடங்காக குடும்ப அங்கத்தவர்கள்
. இதனால் மக்கள் வீதியோரங்களில் திரண்டு ஒருவரில் ஒருவர் நீரைப்பாய்ச்சினர் அடிப்பர்.
பது சமூக ஆர்வலர்களைத் தூண்டியுள்ளது. (ஐ-ரி4)

# அகதிகளைச் சந்தித்தார் பாப்பரசர் பிரான்சிஸ்

## குடும்பங்களுக்கு அடைக்கலமும் கொடுத்தார்

ரோம்,ஏப்.18

கிரீக் தீவில் லெஸ்போஸ் பகுதிக்கு பாப்பரசர் தனது பயணத்தை மேற்கொண்டார். இதன் பின்னர் அவர் நாடு திரும்புகையில் 12 அகதிகளை தன்னுடன் அழைத்துக்கொண்டு வத்திக்கானுக்குத் திரும்பியுள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகளிலும், வட ஆபிரிக்காவிலும் இருந்து வரும் அகதிகளைச் சந்திக்க கிரீக்குக்கு பயணித்த பாப்பரசர் பிரான்சிஸ், வத்திக்கானுக்கு திரும்புகையில் தான் வந்த விமானத்தில் 2 சிரிய அகதிக் குடும்பங்களை தன்னுடன் அழைத்து வந்ததாக வத்திக்கான் தலைமையகம் தெரிவித்துள்ளது.

மேலும், அந்தக் குடும்பத்துக்கான செலவுகளை வத்திக்கான் தலைமையகம் ஏற்றுக் கொள்ளும் என்றும், 12 பேரில் 6 பேர் சிறுவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அழைத்து வரப்பட்ட குடும்பங்கள் இஸ்லாமியர்கள் என்றும், அவர்களது இல்லம் குண்டு வெடிப்பில் முற்றாக அழித்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் குடும்பங்கள் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்டன என சர்வதேச மனிதவள நெருக்கடி மீட்புப் பணியக ஊடகப்பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சுற்றுப் பயணம் தொடர்பில் பாப்பரசர் தெரிவித்ததாவது:- உலக நாடுகள் அகதிகளை வரவேற்க வேண்டும். நாட்டுக்கு குறுக்கே சுவர் எழுப்புவது பிரச்சினைகளுக்குத் தீர்வாகாது. மாறாக பாலங்கள் அமைக்க முன்னவர வேண்டும். கடந்த நூற்றாண்டுகளில் கட்டப்பட்ட சுவர்களால் எந்தவிதப் பயனும் இல்லை. பாலம் அமைப்பதன் மூலம் ஒன்றிணைந்த வளமான சமூகத்தை உருவாக்க முடியும்.

ஐ.நாவின் அகதிகளுக்கான ஆணையாளர் தெரிவிக்கையில், பாப்பரசரின் இந்தச் செயல் முன்மாதிரியான தொன்று. இந்த செயற் பாடு உலக அரசுகளுக்கும், சமூகத்தினருக்கும், தடைகள் புறக்கணிப்பு பயங்கள் என்பவற்றைக் கடந்த செயல் - என்றார். (ஐ-ரி4)



# வடோரில்
# டுக்கம்
# ாவு

டுக்கம் தாக்கி வரு
இதனால் நாம் சில
ணங்களில் அவசர
பிரகடனப்படுத்தி
ளாம். தலைநகர்
டோவில் நிலநடுக்கம்
க உணரப்பட்டது.
மல்கள் சுற்றுப் பகுதி
ல நடுக்கம் உணரப்
எனத் தெரிவித்தார்.
ாடுகளில் காயம
வர்கள் உடனடியாக
துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.
. அடுக்கு மாடி கட்டடங்கள், வர்த்தக மை
ளை உலுக்கி எடுத்த நிலநடுக்கத்தால்
ங்கள் நொறுங்கி வீழ்ந்தன.
டையே சுனாமி அபாயம் இல்லை என
தேசிய கடல் காலநிலைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற நில நடுக்கத்தால்; 41 பேர் உயிரிழந்துள்ளனர். இதனிடையே வேறு 3 அதிர்வுகளும், ரிச்டர் அளவில் 5.4 இல் இருந்து 4.5 எனும் அளவில் இடம்பெற்றுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-ரி4)



# ஜப்பானில் தொடரும் நிலநடுக்கம்

## 41 பேர் சாவு மீட்புப் பணிகளில் பின்னடைவு

டோக்கியோ, ஏப்.18

ஜப்பானில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட நில நடுக்கத்தில் 41 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும்உயிருடன்பலர்புதையுண்டிருக்கலாம் எனவும் அதிகாரிகள் அஞ்சுகின்றனர். ரிச்டர் அளவில் 7.3 என பதியாகிய இந்த நில நடுக்கத்தால், வீதிகள், ரயில் தண்டவாளங்கள் என்பன சிதைவடைந்திருப்பதாகவும், மலைப் பகுதிகளில் தொன் கணக்கான சேற்று மண் மக்கள் பகுதியில் வீழ்ந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

பல பகுதிகளில் மக்கள் உயிருடன் புதைக்கப்பட்டிருப்பதாகவும், இதனால் எச்சரிக்கையுடன்மீட்புப்பணிகளைமேற்கொள்வதாகவும் மீட்புப்பணி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேலும், 90 ஆயிரம் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர். நீர் அணைக்கு அண்மையில் குடியிருப்போர் 300பேர்வீட்டைவிட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர். நில அதிர்வை உணர்ந்த வைத்தியர்களும், நோயாளிகளுமாக கட்டடத்தை விட்டு வெளியேறினர்.

குமாமோட்டோ எனும் மலைப்பகுதி சிறிய கிராமம் ஒன்று, நில அதிர்வால் முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளது. அவர்களைச் சென்றடைய முடியவில்லை என்பதுடன், அவர்களுக்கான உதவிகளை வழங்குவதிலும் தாமதம் ஏற்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமையில் இருந்து ஜப்பானில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. உயிரிழப்புகளின் எண்ணிக்கை 41 ஆகவும் உயர்ந்துள்ளது. அத்துடன் ஆயிரம் பேர் காயமடைந்ததுடன், 184 பேர் கடுமையான காயங்களுக்கு ஆளாகியுள்ளனர் என அதிகாரிகள் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளனர். (ஐ-ரி4)

# ப்பு சபையில் கடும் கண்டனம்

தனை நடத்தப்பட்டது.
ல்வியில் முடிந்தது.
சோதனை முயற்சிக்கு
னம் தெரிவித்துள்ளது.
ும், இது ஐ.நா. தீர்மா
ு கூறியுள்ளது.
ானிப்பாகக் கவனித்து வருவதாகவும், விதிமீறலுக்கு எதிரான நடவடிக்கையை வடகொரியா தவிர்க்க வேண்டும் என்றும்- ஐ.நா. பாதுகாப்பு சபை வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

முன்னதாக, இந்தச் சோதனை முயற்சி வடகொரியாவின் மற்றொரு ஆத்திரமூட்டும் நடவடிக்கை என்று அமெரிக்கா மீண்டும் எச்சரித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (ஐ-ரி4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 2016 உங்களது எண் பலன் எப்படி?

**(உங்களது எண் பலன் எப்படி? என்ற தலைப்பில் ஐந்தாம் எண்காரர்களுக்கான பலன்கள் நேற்றைய உதயனில் பிரசுரமாகியிருந்தன. இன்று 6 ஆம் எண்காரர்களுக்கான பலன்கள் பிரசுரமாகிறது)**

## எண் 6

ஒன்பது எண்களிலும் இயற்கையிலேயே அதிர்ஷ்டசாலிகளான 6 ஆம் எண்காரர்களைப் பற்றிப் பார்ப்போம். இந்த உலகத்தைப் பற்றி மட்டுமே நினைப்பவர்கள் இவர்கள் தான். பூர்வ ஜென்மம், அடுத்த ஜென்மம் போன்றவற்றில் அதிகம் நம்பிக்கையில்லாதவர்கள். அது மட்டுமல்ல அப்படிப் பேசுபவர்களைக் கண்டால் கிண்டலும், குதர்க்கமும் செய்வார்கள். இன்பம், பணம், சுகமான அனுபவங்கள் நோக்கிலே இவர்கள் ஓடுவார்கள்! சுயநலம் மிகுந்தவர்கள் இவர்கள் தான். இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழில் மிகவும் ஈடுபாடு உடையவர்கள். நீடித்த இளமை இவர்களது வரப்பிரசாதமாகும்.

மன்மதர்களின் மைந்தர்கள் இவர்களே புத்திரபாக்யம் நிறைந்தவர்கள் இவர்கள் தான். அதிலும் பெண் குழந்தைகள் இவர்களுக்கு அதிகம் உண்டு. பணவிடயத்தில் இவர்களே மிகவும் அதிர்ஷ்டமானவர்கள். இவர்களே குபேரனின் மைந்தர்கள்! எவர் மூலமாவது எப்படியாவது இவர்களுக்குச் சமயத்துக்கு ஏற்பப் பணம் வந்து கொண்டே இருக்கும். சாப்பிடுவதிலும், சிற்றின்பத்திலும் பணத்தை நிறைய செலவு செய்வார்கள்.

ஆனால் மற்ற பொதுவான விடயங்களிலும், அடுத்தவர்களுக்கு (இலாபம் இல்லாமல்) உதவுவதிலும் மிகுந்த கஞ்சத்தனம் பார்ப்பார்கள். இந்த எண்காரர்கள் சிற்றின்பத்தில் மிதமாக இருக்கப் பழகிக் கொள்ள வேண்டும். 6 எண் பலம் குறைந்தால் கடவுள், சாத்திரங்கள் மீது மிகுந்த அவநம்பிக்கை கொள்வார்கள். ஸ்திரீலோலராகி விடுவார்கள். அடிக்கடி மற்றவர்களிடம் பணம் வாங்குவார்கள். ஆனால் திருப்பிக் கொடுக்கும்போது மட்டும் இழுத்துப் பிடித்துத்தான் கொடுப்பார்கள்.

இவர்கள் தங்களது நேரத்தை காதல், கவிதை, கதை, வசனம், சினிமா, கருவிகள் என்று வீணாக்குவார்கள். தங்களது சபல புத்தியின் காரணமாகப் பல அன்பர்கள் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி, ஏங்கி, பல முயற்சிகள் செய்து, பல துன்பங்களை அடைகின்றனர். (மனத்தில் பலவகைக் குணங்கள், பொறமைகள், மற்றவர்களை புண்படுத்தும் குறும்புப் பேச்சுகள் இவர்களுக்கு உண்டு. ஆனால் எவராவது இவர்களுடைய துயரங்களையும், துன்பங்களையும் பற்றிப் பேசினால் இவர்களுக்கு அந்த இடத்தில் இருக்கப் பிடிக்காது! இவர்களுக்கு ஓரளவு கோப குணமும் உண்டு. கோபம் வரும் போது முரட்டுத்தனமாக நடந்து கொள்வார்கள்) இவர்களுக்கு 5ஆம் எண்காரர்களைப்போன்று நண்பர்கள் அதிகம் உண்டு.

இவர்கள் எளிதில் மாற்ற முடியாத பிடிவாதக்காரர்களே! எனவே சிறுவயதிலிருந்தே இந்த எண்காரர்கள் ஒழுக்கம், பொறுமை போன்ற நல்ல குணங்களை விடாமுயற்சியுடன் வளர்த்துக் கொள்ள வேண்டும். பொதுவாகவே ஒரு வீட்டில் 6ஆம் எண் குழந்தைகள் பிறப்பது, அந்தக் குடும்பத்தின் அதிர்ஷ்டத்தை அதிகரிக்கும் என்பார்கள். மேலும் 6 எண்காரர்கள், தங்கள் பிறந்த வீட்டின் வசதியைவிடப் பிற்காலத்தில் உயர்ந்த செல்வர்களாகவே விளங்குவார்கள். இவர்களின் காம உணர்ச்சிகள், காதல் ஆகியவை நிலையானவை! ஆனால் அவைகள் வேகமும், முரட்டுத்தனமும் உடையவை.எப்போதும் இவர்கள் தங்களது அதிர்ஷ்டத்தையே நம்பி இருப்பார்கள்.

துன்பப்பட்டு உழைப்பதில் அலட்சியம் காட்டும் குணம் இருக்கும். இதை இவர்கள் மாற்றிக் கொண் டால் தான் 'விஜயலட்சுமி' எப்போதும் இவர்களுடன் இருப்பாள்.

தங்களின் அனாவசியக் குடும்பச் செலவுகள், அனாவசிய ஆடம்பரச் செலவுகள் ஆகியவற்றைக் குறைத்துக் கொண்டால் தான், பணம் எப்போதும் நீங்காமல் இவர்களுடன் இருக்கும். இல்லையெனில் கடன்தொல்லையும்,ஏமாற்றமும் ஏன் வறுமையும் கூட ஏற்பட்டு விடும்.

(தொடரும்)

தெய்வத்தமிழ்ச் சுடர்
இராசையா ஸ்ரீதரன்

# நல்லைக் குருமணியின் 35 ஆவது குருபூசைத் தினம்

சைவமும் தமிழும் தழைத்தோங்க வேண்டும் என்று முற்றுமுழுதாகத் தம்மையே அர்ப்பணித்துப் பாடுபட்ட நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன ஸ்தாபகர் நல்லைக் குருமணியின் 35 ஆவது குருபூசைத் தினம் கடந்த 13ஆம் திகதியாகும். கதாப்பிரசங்கம் செய்தே சைவம் வளர்த்தவர் நல்லைக் குருமணி என்று கூறின் மிகையாகாது.

நல்லூர் கந்தன் ஆலய மேற்கு வீதியிலே 1966 இல் இந்த ஆதீனத்தை ஸ்தாபித்த இவர், அதன்மூலம் பல அறப்பணிகளை மேற்கொண்டார். யாழ்.குடா நாட்டின் மூலை முடுக்கெல்லாம் சென்று அங்குள்ள ஆலயங்களில் பிரசங்கம் செய்து, தமிழ் வளரப் பாடுபட்டதோடு நின்றுவிடாமல் தம்முடைய ஆதீனத்திலே சமயபாட வகுப்பு, சங்கீத வகுப்பு, பண்டித வகுப்பு, பாலர் வகுப்பு என்று இன்னோரன்ன பல வகுப்புக்களையும் நடத்தி சமுதாயம் முன்னேற அரும்பாடு பட்டார்.

இவருடைய பிரசங்கம் நடைபெறாத கோயில்களே இல்லையெனும் அளவுக்கு எல்லா இடங்களுக்கும் சென்று கதாப்பிரசங்கம் செய்த பெருமை நல்லைக் குருமணியையே சாரும். நல்லூர் மகோற்சவ நாள்களில் தினமும் தொடர் பிரசங்கம் செய்து அடியார்களை தம் பக்கம் ஈர்த்துக் கொண்டவர் இவர்.

இவர் இலங்கையில் மட்டுமன்றி இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், லண்டன் முதலான நாடுகளுக்கும் சென்று கதாப்பிரசங்கம் செய்திருக்கின்றார். இவருடைய கதாப்பிரசங்கத்தின்போது இசையும் கதையுமாகப் பாத்திரங்களை அப்படியே படம் பிடித்துக் காட்டுமாப் போல கண்முன்னே சம்பவங்கள்



நடைபெறுவது போன்று விளங்கப்படுத்துவார்.

கந்தபுராணம், திருத்தொண்டர் புராணம், திருவிளையாடற் புராணம், இராமாயணம், மகாபாரதம் முதலியன யாவும் தொடர் பிரசங்கமாகச் செய்வதில் இவருக்கு நிகர் இவரே. இவருடைய திறமையைக்கண்ட பெரியோர்கள் முத்தமிழ்மணி என்று பட்டம் கொடுத்து மணிபாகவதர் என்று அன்போடு அழைக்கலாயினர். இவர் இந்தியாவிலேயுள்ள மதுரை ஆதீனத்திலே காஷாயம் பெற்றுத் துறவு பூண்டு தம்பிரான் சுவாமிகள் என்னும் திருநாமத்துடன் இலங்கைக்கு வந்து நல்லூர் கோயில் வீதியில் திருஞானசம்பந்தர் ஆதீனம் ஒன்றை உருவாக்கி சைவமும் தமிழும் வளரத் தம்மாலான பணியைச் செய்தார்.

அறப்பணிகள் பல செய்து அரும் பாடுபட்ட இவர் 1981 இல் சமாதி நிலை எய்தினார். அவர் மறைந்தாலும் அவருடைய கணீரென்ற இனிய குரலும் சைவத் தோற்றமும் மறையவே மறையாது.

இப்பொழுது இந்த ஆதீன முதல்வராக இருக்கின்ற இரண்டாவது குருமஹா சந்நிதானமும் கோயில் கும்பாபிஷேகங்களில் அருளாசியுரைகளை வழங்கி அறம் வளர்த்து வருகிறார். இந்தஆதீனத்தின் நற்பணிகள் மேலும் நல்ல முறையில் தொடர சைவ அபிமானிகள் தம்மாலான உதவி களைச் செய்வதே நாம் சுவாமிகளுக்குச் செய்யும்கைம்மாறாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org



# எச்சரிக்கை

ஜெ.காயா

என்றுமில்லாத அளவுக்கு தற்போதைய சூழலில் வெப்பம் அதிகரித்துக் காணப்படுகின்றது. இது வழமையாகஇருந்த காலநிலையிருந்து ஏற்பட்ட மாற்றமாகும். இவ்வாறான காலநிலை மாற்றங்கள் புவியின் மேற்பரப்பில் நிலைத்துள்ள உயிரினக்கோளத்துக்குத் தற்போது ஓர் அசாதாரணச் சூழலை ஏற்படுத்தினாலும் எதிர்வரும் காலங்களில் அவ்வுயிர்க் கோளத்துக்கும் பௌதிக வளங்களின் விருத்திக்கும் பெரும் அச்சுறுத்தலாக மாறப் போகின்றது என்பது மெல்ல மெல்ல வெளிப்படத் தொடங்கியுள்ளது.

சூரியனிலிருந்து உடைந்து பிரிந்து அதன் ஈர்ப்பு விசையில் இன்று வரை இயங்கிக் கொண்டிருக்கும் பூமி, தன்னுள் அதன் நெருப்புக் குழம்பைக் கொண்டுள்ள போதிலும் அந்த வெக்கை தணிந்து ஆறி இறுகியமெலிதானமேற்பரப்பில்உயிர்க்கோளத்தையும் பேணி வருகின்றது. மேற்பரப்பு குளிர்மையாகி இறுகிவிட்டதால் புவியின் உட்பகுதி வெப்பநிலை வெளியே செல்வது தடைப்பட்டுவிட்டது. இதனால் தான் அக்குழம்பு பூமியின் சில நொய்தலான பகுதிகளினூடாக (எரிமலைகள்) வெளிவந்து கொண்டிருக்கின்றது. இது இவ்வாறிருக்க பூமியின் வெளியே- பெரும் நெருப்புக் கோளாகத் திகழும் சூரியனது வெப்பத்தையும் சகித்து தன்னைச் சுற்றிப்படர்ந்துள்ள வளிக்கோளத்தினதும் நீர்க்கோளத்தினதும் துணையுடன் தன்மேல் படிந்துள்ள உயிர்க்கோளத்தின் சமநிலையைப் பேணி வருகின்றது பூமி.

இவ்வாறு அகத்தேயும் புறத்தேயும் உள்ளதும் பூமிக்கும் சவாலானதுமான ஒரு விடயமாக உஷ்ணமான தன்மை விளங்குகின்றது. பூமி சூரியனின் ஈர்ப்பில் அதனை மையமாக வைத்து சுழலும் ஒரு கோளமாகையால் சூரிய ஒளி அதன் மீது படுவதும் அவ்வொளியூடாக வெப்பம் பூமியைச் சென்றடைவதும் இயல்பானதொன்றாகும். அதன் மூலமாகவே தான் பச்சையத்தைத் தயாரிக்கும் நீண்டு வளர்ந்த பசுமைப் போர்வையும் அதனை நுகரும் உயிரின அங்கிகளையும் (மனிதன் உட்பட) பூமியின் பல்வகைமையில் காணக் கூடியதாக உள்ளது ஆயினும் பூமியை வந்தடையும் வெப்பம் உகந்த அளவு உள்ளதாலேயே அது சாத்தியமாகின்றது. ஆனால் தற்போது அந்நிலைமை மாறி உஷ்ணம் கூடிய மித மிஞ்சிய வெப்பநிலை பூமியில் நிலவுகின்றது.

### சூழலுக்கு எதிரான மனித நடவடிக்கைகள்

சூரியனை மையமாக வைத்து நீள் வட்டப்பாதையில் ஏறத்தாழ 23வீத பாகையளவான சரிவுடன் பூமி சுழலும் போது இரு தடவைகள் சூரியனுக்கு அண்மையாகவும் இரு தடவைகள் தூரமாகவும் செல்லும் நிலை ஏற்படும். அப்பருவகாலங்களில் ஏற்படும் காலநிலை மாற்றங்கள் வழமையானவை, மற்றும் இயல்பானவை ஆகும். ஆயினும் இன்றைய அதிகரித்த வெப்பநிலைக்குக் காரணம் மனிதர்களின் சூழலுக்கு எதிரான செயற்பாடுகளாகும். அவையே இன்று மெல்ல மெல்ல மாறுபட்ட காலநிலை மாற்றங்கள் மூலம் மனிதனையும் ஏனைய உயிரினங்களையும் அச்சுறுத்தத் தொடங்கியுள்ளன.

இன்றைய அதிகரித்த வெப்பநிலைக்கான பிரதான மனித செயற்பாடுகளில் ஒன்றாக விளங்குவது பூமியின் மீது படிந்துள்ள பசுமைப் போர்வை நீக்கப்படுவதாகும். இதனால் நேரடியாகத் தரையில் படும் வெப்பம் பூமியைப் பாலைவனமாக்க ஆரம்பித்துள்ளது. தன் வாழ்நாளில் ஒரு தாவரத்தையேனும் நடுவதற்கு முற்படாத மனிதன் பெருந்தொகையில் காடுகளை அழித்து வருகின்றான். அதுமட்டுமன்றி தனது குடியிருப் புக்கள் நகர நிர்மாணங்களை மேற்கொள்ள இடையூறாக எண்ணி எஞ்சியுள்ள ஒன்றிரண்டு மரங்களையும் அழித்து உயர்ந்த கட்டடங்களை நிறுத்தி தரைகள் அனைத்தும் கொங்கிறீட் இட்டு வருகின்றான். தன் சந்ததியினரின் எதிர்காலத்தைச் சிந்திக்காத மனி தனின் முட்டாள் தனம் இதுவாகும்.

> இன்றைய அதிகரித்த வெப்பநிலைக்குக் காரணம் மனிதர்களின் சூழலுக்கு எதிரான செயற்பாடுகளாகும். அவையே இன்று மெல்ல மெல்ல மாறுபட்ட காலநிலை மாற்றங்கள் மூலம் மனிதனையும் ஏனைய உயிரினங்களையும் அச்சுறுத்தத் தொடங்கியுள்ளன.

பூமியைச் சுற்றிப்படர்ந்துள்ள வளிமண்டலம் பாதிக்கப்படுவதாலும் கூடிய வெப் பம் பூமியை வந்தடைகின்றது. நேரடியாக மனிதனால் அழிக்கப்படாமல் எஞ்சியுள்ள ஒன்றிரண்டு மரம் செடி கொடிகளும் தரை மாசுபட்டு வருவதால் தம் ஆயுள் காலத்தைக் குறைத்து வருகின்றன. இரசாயன உரப் பாவனைகள், கிருமிநாசினிகள், எப்போதுமே உக்காத பொலித்தீன் பாவனைகள் போன்றனவே நிலமாசடைவைத் தூண்டிவருவனவாகும். இது நிலத்தையும், நிலத்தடி நீரையும், தாவரங்களையும் பாதிக்கின்ற செயலாகும். இத்தகைய மனித செயற்பாடுகளால் பாதிப்படைந்துவரும் சூழலின் எதிர்விளைவுகளுக்கே தற்போது மனிதன் முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

### பாதிப்புக்கள்

இன்று உணரத்தொடங்கியுள்ள வெப்ப நிலை மாற்றத்தால் பூமியின் நிலப் பரப்புக்கள் தரிசாக்கப்பட்டு பாலைவனமாதல் என்பது சகல பிரதேசங்களிலும் அதிகரிக்கும். இதனால் மனிதன் உள்ளிட்ட உயிரினங்கள் அழிவையே எதிர்நோக்க நேரிடும். ஏற்கனவே பாலைவனமாகியுள்ள நாடுகள் உணவுக்குப் பஞ்சம் ஏற்பட்டு பட்டினிச் சாவை எதிர்நோக்கியுள்ளன. பயிர்ச் செய்கையும் நீரும் இல்லாத விடத்து கொங்கிறீட் தரைகளில் மனித வாழ்வு சாத்தியமற்ற ஒன்றாகும். பனிப்பாறைகள் உருகத் தொடங்கியுள்ளதால் அதில் தங்கி வாழும் உயிரினங்களை அழிவிற்கு உட்படுத்துவதோடு நின்று விடாது உருகியவை நீராகி கடல் நீரோடு கலந்து கடல் மட்டத்தை உயர்த்தி சிறு தீவுகளைத்தனக்குள் அமிழ்த்தவும் தொடங்கிவிட்டன. இதனால் ஏற்கனவே மூன்றில் ஒரு பகுதியாகவுள்ள நிலப்பரப்புக் குறைவடைந்து கடலினுள் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. இவ்வாறு பூமிக்கும் உயிரின சூழலிற்கும் பாதிப்பை ஏற்படுத்தும் மனித செயல்களின் பிரதிபயனாகத்தான் இன்றைய சூழலில் அதிக வெப்பநிலை உணரப்பட்டுகின்றது. ஆனால் தனக்குக் கிடைத்ததும் மனித வாழ்வுக்கு உகந்ததுமான பூமியைச் சரியாகப் பராமரித்துப் பேணத்தெரியாத மனிதன் எந்தவொரு அடிப்படை வசதியும் தென்படாத செவ்வாயை நோக் கிப் பயணிக்க ஆரம்பித்துள்ளான். செவ்வாயில் இல்லாததைத் தேடும் அவன், அனைத்துப் பயன்களையுமுடைய பூமியைப் பாழாக்குவது கவலைதரும் ஒன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னருக்கு தெனாலிராமன் தந்த பரிசு



மன்னர் கிருஷ்ணதேவராயருக்குப் பிறந்தநாள் விழா. நகரமெல்லாம் தோரணம். வீடுகெளல்லாம் அலங்காரம். மக்கள் தங்கள் வீட்டில் உள்ள ஒருவருக்குப் பிறந்தநாள் என்பது போல மன்னரின் பிறந்தநாளை மகிழ்ச்சியோடு கொண்டாடினர். முதல்நாள் இரவே வீதிகள் தோறும் ஆடல் பாடல் நிகழ்ச்சிகள், வாண வேடிக்கைகள் இடம்பெற்றன. அரண்மனையில் வெளிநாடுகளிலிருந்து வந்த விருந்தினர்களுக்கு விருந்து ஏகதடபுடலாக நடந்தது. மறுநாள் அரச சபையில் அரசருக்கு மரியாதை செலுத்துதல் நடந்தது. முதலில் வெளிநாடுகளிலிருந்து வந்த அரச பிரதானிகள், தங்கள் தங்கள் நாட்டு மன்னர்கள் அனுப்பிய பரிசுகளை அளித்தனர். பிறகு அரச பிரதானிகள், பொதுமக்கள் மன்னருக்கு பரிசளித்து மரியாதை செலுத்தினார்கள். அதன்பிறகு அரசரின் நெருங்கிய நண்பர்கள் தங்கள் பரிசுகளை அளித்தனர்.

அப்போதுதான் பெரியெதாரு பொட்டலத்துடன் தெனாலிராமன் உள்ளே நுழைந்தான். அரசர் உட்பட எல்லோரும் வியப்போடு பார்த்தனர். மற்றவர்களிடம் பரிசுகளை வாங்கித் தன் அருகே வைத்த மன்னர், தெனாலிராமன் கொண்டு வந்த பரிசுப் பொட்டலம் மிகப் பெரிதாக இருந்ததாலும் அவையிலுள்ளவர்கள் ஆவலோடு என்ன பரிசு என்று பார்ப்பதாலும் அந்தப் பொட்டலத்தைப் பிரிக்கும்படி தெனாலிராமனிடம் கூறினார்.



தெனாலிராமன் தயங்காமல் பொட்டலத்தைப் பிரித்தான். பிரித்துக் கொண்டெ இருந்தான். பிரிக்கப் பரிக்கத் தாழை மடல்கள் காலடியில் சேர்ந்தனவே தவிர பரிசுப் பொருள் என்னவென்று தெரியவில்லை. அதனால் எல்லோரும் ஆவலுடன் கவனித்தனர். கடைசியில் மிகச் சிறிய பொட்டலமாக இருந்ததைப் பிரித்தான். அதற்குள் நன்றாகப் பழுத்துக் காய்ந்த புளியம்பழம் ஒன்றிருந்தது. அவையினர் கேலியாகச் சிரித்தனர். அரசர் கையமர்த்திச் சிரிப்பு அடங்கியவுடன் “தெனாலிராமன் கொடுத்த பரிசு சிறிதாக இருக்கலாம். அதற்கு அவன் கொடுக்கப் போகும் விளக்கம் பெரிதாக இருக்கலாமல்லவா?” என்று அவையினரைப் பார்த்துக் கூறிவிட்டு தெனாலிராமன் பக்கம் திரும்பி “ராமா இந்தச் சிறிய பொருளைத் தேர்ந்தெடுத்ததன் காரணம் என்ன?” எனக் கேட்டார். “ அரசே ஒரு நாட்டை ஆளும் மன்னர் எப்படி இருக்க வேண்டும் என்ற தத்துவத்தை விளக்கும் பழம் புளியம் பழம் ஒன்றுதான். மன் னராக இருப்பவர் உலகம் என்ற புளிய மரத்தில் காய்க் கும் பழத்தைப் போன்றவர். அவர் பழத்தின் சுவையைப் போல இருக்க வேண் டும்.அதேநேரத்தில் ஆசாபாசங்கள் ஒட்டியும் ஒட்டாமலும் இருக்கவேண் டும் என்பதை விளக்கவே இந்தப் புளியம்பழத் தைப் பரிசாகக் கொண்டு வந்தேன். புளியம்பழ மும் ஓடும்போல இருங்கள்” என்றான்.

அவையினர் கைதட்டி ஆரவாரம் செய்தனர். மன்னர் கண்கள் பனிக்க ஆசனத்தைவிட்டு எழுந்து தெனாலிராமனைத் தழுவி “ராமா எனக்குச் சரியான புத்தி புகட்டினாய்” ஒரு பிறந்த நாள் விழா விற்கு இத்தனை ஆடம்பரம் தேவையில்லை. பொக்கிஷப் பணமும் பொது மக்கள் பணமும் வீணாகும்படி செய்துவிட்டேன். உடனே விசே டங்களை நிறுத்துங்கள். இனி என் பிறந்த நாளன்று கோயில்களில் மட்டுமே அர்ச்சனை ஆராதனை செய்யப்பட வேண்டும், அவசியமில்லாமல் பணத்தை ஆடம்பரமாகச் செலவு செய்யக் கூடாது” என உத்தரவிட்டார். தெனாலிராமனின் துணிச்சலையும் சாதுரியத்தையும் எல்லோரும் பாராட்டினார்கள். அரசர் தனக்கு வந்த பரிசுப் பொருள்களில் விலை உயர்ந்தவற்றைத் தெனாலிராமனுக்குப் பரிசாகத் தந்தார்.

## மரம் வளர்ப்போம்

தாத்தா வைத்த தென்னையும்
தலையால் இளநீர் தருகிறது

பாட்டி வைத்த கொய்யாவும்
பழங்கள் நிறையத் தருகிறது

அப்பா வைத்த மாஞ்செடியும்
அல்வா போலப் பழம் தருகிறது

அம்மா வைத்த முருங்கையும்
அளவில்லாமல் காய்க்கிறது

அண்ணன் வைத்த மாதுளையும்
கிண்ணம் போலப் பழுக்கிறது

சின்னஞ்சிறுவன் நானுமொரு
செடியை நட்டு வளர்ப்பேனே....



## வரலாற்றில் இன்றைய தினம்



1797 - ஒஸ்ரியாவுக்கு எதிரான போரில் பிரான்ஸ் வெற்றி பெற்றது.
1912 - டைட்டானிக் கப்பல் விபத்தில் தப்பிய 705 பேர் கப்பல் மூலம் கொண்டு வரப்பட்டனர்.
1924 - குறுக்கெழுத்துப் புதிர்ப் புத்தகம் முதன் முதலாக சைமன் மற்றும் சுசெஸ்டர்ஸ் ஆகியோரால் பிரசுரிக்கப்பட்டது.
1946 - சர்வதேச நீதிமன்றம் தனது முதலாவது சந்திப்பை நெதர்லாந்து ஹேக்கில் நடத்தியது.
1983 - லெபனானில் அமெரிக்க தூதுவராலயம் மீது மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 63 பேர் சாவு.
1993 - ராஜீவ் காந்தி கொலை வழக்கு தொடர்பிலான விசாரணைக்கு உடுகம்பொலவின் சத்தியக் கடதாசிகளை ஜெயின் ஆணைக்குழு கோரியது.
1993 - லலித்தின் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக்கு செல்வாக்கு அதிகரிப்பு; லலித்தின் கட்சிக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியினர் அராஜகம்; பொலிஸ் அதிகாரிகளும் உடந்தை எனத் தெரிவிப்பு.
2000 - இயக்கச்சியில் உக்கிர சண்டை வெடித்தது.
2002 - ஆப்கானிஸ்தானில் தவறுதலான அமெரிக்க விமானத் தாக்குதலில் 4 கனேடியப் படையினர் சாவு.

## வர்ணம் தீட்டுவோம் வாங்க....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமை தர வேண்டும்..!

இதயத்தால் பேசப்படுகின்ற,இதயத்தால் உணரப்படுகின்ற ஒரு மொழி தமிழ் மொழி. தொன்மை, எளிமை, செம்மை, தூய்மை, தாய்மை என்பதான இயல்பிலக்கணங்களைக் கொண்டது.இத்தகைய தாய்மையின் அரவணைப்பில் வாழ்ந்து வந்த,வருகின்ற ஒரு பூர்வீக இனம் தமிழினம்.இத்தகைய மொழிச் சிறப்பும் கலை,கலாசாரம்,விழுமியங்களின் சீரான இயக்கமும் கொண்டமைந்த இனத்தின் நிலைத்திருப்பு என்பது உரிமை என்ற வேண்டுதலின் இடித்துரைப்பின் முன் நிறுத்தப்பட்டிருந்த அரசின் வன்முறைகளாலும்,அடக்கு முறைகளாலும் அழிவிற்குட்படுத்தப்பட்டன.தனித்துவ அடையாளங்கள் அர்த்தமற்ற வகையிலே சிதைக்கப்பட்டன. தற்போது முன் நிறுத்தப்பட்டுள்ள அரசும் அதே முகமலர்வில் திருக்கோலம் கொண்டுள்ளது. தனது நகர்வுகளை தனித்துவமற்றதாக்கியிருக்கின்றது.

கடந்த ஆண்டில் மன்மதனாக நல்லாட்சி என்ற நாமம் கொண்டு வலம்வரத் தொடங்கிய அரசு வேகமிழந்திருக்கிறது.செய்ய வேண்டிய பரிகாரங்களை இன்னமும் செய்யத் தலைப்படவில்லை.தனித்து நிகழ்வுகளின் நிழலோடு காலங்கள் கரைந்து ஓராண்டு கடந்துவிட்டது.தற்போது காலம் மன்மதக் கோலம் மாறி துர்முகக் கோலம் தனை தோற்றமாகப் பெற்றிருக்கின்றது. செய்ய வேண்டிய காரியங்களில் பற்றிருக்கிறது.இந்தத் தோற்றத்திலாவது அரசு தமிழர்களுக்கு தீர்வைத் தருமா..? தெரியவில்லை..!

2009 ஆம்ஆண்டு மே மாதத்தில்சர்வதேசத்தின் பங்காற்றலுடன் திட்டமிட்டு தமிழர் தாயகத்தில் அரங்கேற்றப்பட்ட மிகப் பெரிய மனிதப்பேரவலம்,மனித உரிமை மீறல்கள் இரத்தங்களோடு ஆதாரமாய் தாய் மண்ணில் உறைந்து கிடக்கின்றன. தீர்வை வேண்டி உயிரோடு ஊசலாடி இருக்கின்றன. தமிழர் விடுதலைக்கான நியாயமான அபிலாசைகள் அங்கலாய்க்கின்றன, பரிதவித்திருக்கின்றன, தொடர் கதையாய் தொடர்கின்றன.


எமது அயல் நாடான, எங்கள் தொப்புள் கொடி உறவுகள் வாழ்ந்து வருவதாக நாம் நம்பியிருக்கின்ற, அந்த நம்பிக்கையின் வழி நகர்ந்து வருகின்ற பாதைகளின் சுவடான பாரததேசமும், தமிழர்களுக்கான எந்தவித தீர்விற்கான வழி வகைகளையும் ஆத்மார்த்தமாகச் செய்வதாகத்தெரியவில்லை. தேர்தல் காலங்களில் மட்டும் மடை திறந்து பாயும் நதிகளைப் போல ஒரு வித ஈரலிப்பையும்,ஆத்மார்த்தமான தவிப்பை ஒத்ததான நிழல் விம்பத் தோற்றத்தையும் தந்து விடுகின்றனர். மாறாக உள்ளார்ந்து உணர்வு ரீதியாக அழுத்தங்களைப் பிரயோகித்து இலங்கை அரசிடம் இருந்து தீர்வைப் பெறுவதற்கான பரோபகாரங்களைச்செய்யவில்லை. தனித்து தமிழர்களின் மீள் கட்டுமானங்களுக்கான கடனுதவிகளிலும் அவ்வப்போது திருவிழாக்களை முன்னிலைப்படுத்தி தூதுவர்கள் என்ற பெயரில் நிகழ்வுகளைச் சாதுவாக நடத்துவதிலும் தங்கள் செயற்பாடுகளை மட்டுப்படுத்திக் கொள்கின்றனர். தாம் சார்ந்த நினைவுபடுத்தல்களையும் அதற்கான நிகழ்வுகளையும் முன்னிறுத்தப் பழகிக் கொள்கின்றனர்.

அண்மையில் கூட அவ்வாறானதொரு நிகழ்வு யாழ்.மண்ணில் இடம்பெற்றிருக்கின்றது. யாழ் இந்தியத் துணைத்




தூதரகம் இந்தியாவின் சட்டம் மற்றும் நீதித்துறைக்கான முதலாவது அமைச்சர் கலாநிதி பி.ஆர்.அம்பேத்காரின் 125 நினைவுதினத்தை முன்னிட்டதான சிறப்புப் பட்டிமன்ற நிகழ்வை சித்திரை வருடப் பிறப்பின் (துர்)முகமாக நிகழ்த்தியிருந்தது. கடந்த காலத்தில் எம் இன விடுதலைக்காகப் புறப்பட்ட கிட்டு என்கின்ற தனி மனித வரலாற்றின் தியாகச் சாவுக்குக் காரணமான இந்திய தேசத்தின் நீதியையும் எடுத்தியம்பியது.எத்துணை பொருத்தம் (மன வருத்தம்) பாருங்கள்,இன விடுதலைக்காகப் போராடிய ஓர் மாவீரனின் நினைவுப் பூங்காவில் அந்த மாபெரும் வீர மறவனின் சாவுக்குக் காரணமான பாரததேசத்தின் சட்டம்,நீதி தொடர்பில் பதவி வகித்த அமைச்சர் ஒருவரின் நினைவு தினக் கொண்டாட்டம்.

1993 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16 ஆம் திகதி காலையிலே இந்திய உளவுத்துறையான ரோவின் வழிநடத்தலில் இந்தியக் கடல் எல்லையின் அருகே சர்வதேச கடற்பரப்பில் கிட்டு உட்பட ஏனைய போராளிகளைப் பருந்தாக வட்டமிட்டு உரிமை வேண்டிப் போராடியவனின் உயிரை உய்விக்கத் தெரியாத திட்டமிட்ட சதியால் கொலைவெறிச் சதிராடிய உன்னதம் புரிந்தவர்களின் நீதி எங்கே இருக்கிறது பாருங்கள். உணருங்கள் மக்களே..இத்தகைய ஈழத் தமிழர் வரலாற்றின் பின்னணியில் 2009 இறுதிப்போரில் தமிழினம் கண்டு கொண்ட மனிதப் பேரவலம் தன்னையும் தடுத்து நிறுத்த முடியாத, கை கட்டி வேடிக்கை பார்த்திருந்த பாரத தேசத்தின் சட்டம்,நீதி என்கின்ற இருட்டிய கண்களையும் நியாயமாகப் புரிந்து கொள்ளுங்கள். உரிமைகளை இழந்த ஓர் இனமாக,உற்றார் உறவுகளை இழந்த தமிழர் தாயகமாக எமக்கு தேவையானது பழமைகளுமல்ல,மாறிவரும் புதுமைகளுமல்ல...! சுதந்திரமாக நிம்மதிப் பெருமூச்சோடு சம உரிமைகளோடு சமத்துவமாய் வாழ்கின்ற தேசமே....!



# சீதனக் கொடுமைக்கு எவர் காரணம்?

எ.ரி.சத்தியன்

சீதனம் கொடுப்பதோ, வாங்குவதோ ஒரு போதைத்தனம் ஆகும். ஒருவன் உழைத்த உழைப்பை மற்றொருவன் சீர்வரிசை என்னும் பேரிரைச்சல் போட்டு பறிப்பது நன்றல்ல, அயராத உழைப்பே தீராத இன்பத்தைக் கொடுக்கும். ஆகவே ஒருவன் சொந்தக் கையினால் உழைக்கும் உழைப்பே நிலையான பணத்தையும் நிம்மதியான வாழ்வையும் கொடுக்கும்.

எனவே ஓர் ஆண்மகன் பெண்ணைப் பெற்ற பெற்றோரிடம் சீர்வரிசை கேட்காது பெண்ணின் பண்பையே பார்க்க வேண்டும். அப்பண்புகளான அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு எங்கு நிலவுகின்றதோ அங்கு தான் அமைதி, அடக்கம், அறிவு, அழகு, நிறைந்து காணப்படும்.

ஆகவே இந்த சீதனக் கொடுமைக்கு யார் காரணம்? இவ்வளவு சீர்கேடுகளுக்கும் யார் காரணம்? ஆண்களா? இல்லை! இதற்குக்காரணம் பெண்களே. ஆண்மகனை பெற்ற தாயே சீதனம் வேண்டும் என ஆணை இடுகின்றாள். பெண் இனமே தன் இனத்துக்கு கேடு விளைவித்துக் கொண்டு ஆண்வர்க்கத்தின் மீது பழி சுமத்துவது நியாயமா? சீதனம் இல்லாத கன்னிகைகள் பலர் கட்டுக்கட்டாக கவிதைகளையும் கட்டுரைகளையும் எழுதி கல் நெஞ்சுடையோரையும் கலங்க வைத்து சீரான வாழ்வு பெற்று குடும்பப் பெண்ணாகிப் பின் மாமியார் ஆகும் வேளையில் மதி மயங்குவது சரியா? ஆண் வர்க்கம் செய்த உதவியும் அறியாது தாம் செய்த பழிகளையும் சேர்த்து விடுகின்றார்கள். பெண் இனத்துக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுத்ததில் பாரதியும் ஒருவன் ஆவான். இவன் பெண்களுக்கு எதிரான அடக்கு முறையை கட்டுக் கவிதைகள் மூலம் கட்டவிழ்த்து சுதந்திரக் காற்றை சுவாசிக்க வழி வகுத்தான். எனவே சீதனக் கொடுமையை உருவாக்குபவர்கள் பெண்களே. அவர்களே வேண்டிக் கொள்வது.

எதிர்காலத்துப் பெண்களே
தயாள சிந்தையுடன்
தந்ததைப் பெற்றுக் கொண்டு
தாரத்தைக் கொடுத்து விடுங்கள்
பெண்ணைப் பெற்ற பெற்றோரை
வாழவிடுங்கள்
உங்கள் இனத்துக்கு வாழ்வு கொடுங்கள்
வாழ்வில் வசந்தம் பெற
ஆண் மகனே இப்பாதையில் பயணம் செய்
தன் மானமுள்ள ஆடவனே

பணத்தைக் கணக்கில் எடுக்காது குணம் நிறைந்த குணவதிகளைத் தேர்ந்தெடுத்து வாழ்க்கையில் உயர்வு அடையுங்கள். பெண்ணிடம் சீதனம் பெற்று பெண் வீட்டில் அடிமை வாழ்வு வாழுதல் ஆண்களுக்குப் பெருமை தருமா? பெண் ஒருத்தியை வைத்துப் பராமரிக்கும் தகுதி உனக்கு இல்லையென்றால் திருமணம் உனக்கு ஒரு கேடா? சீதனம் எனும் சமூகக் கொடுமைக்கு சமாதி இடுவோம். பெண்களை வாழ விடுவோம்.



ஆண் மகனை பெற்ற தாயே சீதனம் வேண்டும் என ஆணை இடுகின்றாள் பெண் இனமே தன் இனத்துக்கு கேடு விளைவித்துக் கொண்டு ஆண் வர்க்கத்தின் மீது பழி சுமத்துவது நியாயமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** செயல்களில் குளறுபடி ஏற்படலாம். தொழிலில், சுமாரான இலாபம் கிடைக்கும். குடும்பத் தேவைக்கு பெண்கள் கடன் வாங்க நேரிடும். உடல் நலனில் கவனம் தேவை.

**இடபம்:** பெருந்தன்மையுடன் நடந்து கொள்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், அபரிமிதமான முன்னேற்றம் ஏற்படும். வருமானம் அதிகரிக்கும். பெண்கள் விரும்பிய பொருள் வாங்கி மகிழ்வர்.

**மிதுனம்:** பேச்சில் அன்பும், பண்பும் கலந்திருக்கும். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பூர்வீகச் சொத்து மூலம் பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர்.

**கடகம்:** புதியவரை நண்பராக ஏற்பதில் கவனம் வேண்டும். தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். மனைவியின் ஆலோசனை நன்மைக்கு வழிவகுக்கும். பிள்ளைகள் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**சிங்கம்:** மனதில் சந்தோசம் நிலைத்திருக்கும். தொழில், வியாபாரத்தில், அபிவிருத்திப்பணி திருப்திகரமாக நிறைவேறும். பெண்கள், புத்தாடை, நகை வாங்க அனுகூலம் உண்டு. வாகனப் பயணத்தால் இனிமை காண்பீர்கள்.

**கன்னி:** பணியை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்படலாம். விடாமுயற்சியால், தொழிலில் இருந்த தடை நீங்கும். வருமானம் சீராகும். பெண்கள் சிக்கனத்தின் மூலம் சேமிக்க முயல்வர்.

**துலாம்:** எதிர்மனப்பாங்கு உள்ளவரும் மறைமுகமாக உதவுவர். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் உயரும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். அரசியல்வாதிகளுக்கு தலைமையின் ஆதரவு கிடைக்கும்.


**விருச்சிகம்:** அடுத்தவர் நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில், புதிய வழிகளின் மூலம் தாராள பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமையில் இருந்து விடுபடுவர். பெண்கள், ஆடை ஆபரணம் வாங்குவர்.

**தனுசு:** குடும்ப விடயம் பற்றி பிறரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். ஆரோக்கியம் பலம் பெறும். பெண்கள் ஆன்மிக நிகழ்ச்சிகளில் பங்கேற்பர்.

**மகரம்:** சிலர் பேச்சு, உங்களை சங்கடப்படுத்தலாம். தொழில், வியாபாரத்தில், மிதமான வருமானம் கிடைக்கும். உறவினர் வருகையால், வீட்டுச் செலவு அதிகரிக்கும். பிள்ளைகளின் செயற்பாடு நிம்மதி தரும்.

**கும்பம்:** அனைவரிடமும் அன்பு காட்டி பழகுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சி அதிகரிக்கும். நிலுவைப் பணம் கிடைக்கும்;. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைத்திருக்கும்.

**மீனம்:** கலகலப்பாகப் பேசி, பிறர் மனதைக் கவர்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் அதிகரிக்கும். சுபவிடயம் குறித்த பேச்சு முன்னேற்றம் பெறும். நண்பர்களால் உதவி கிடைக்கும்.



# பவர்ஸ்ராருக்கு இப்படி ஒரு ஆசை

அட்லீ இயக்கத்தில் விஜய், சமந்தா, ராதிகா, பேபி நைனிகா உள்ளிட்டோர் நடித்த தெறி படம் தமிழ்ப் புத்தாண்டு அன்று வெளியாகியுள்ளது. படம் வெளியான அனைத்து மொழியிலும் வரவேற்பைப் பெற்றுள்ளது. விஜயை அவரது ரசிகர்கள் மன்னன் என்று கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் பவர்ஸ்ரார் டுவிட்டரில் தெறி பற்றி கருத்து தெரிவித்துள்ளார். அவர் டுவிட்டரில் கூறியிருப்பதாவது, இயக்குநர் அட்லீ கேட்டுக் கொண்டால் தெறி பார்ட் 2 இல் நடிக்க நான் தயார் எனத் தெரிவித்துள்ளார். தெறி படத்தை பார்த்த விஜய் இரசிகர்கள் அவர் படத்தின் இரண்டாம் பாகத்தில் நடிக்க வேண்டும் என்று கூறிக் கொண்டிருக்கும் வேளையில் பவர்ஸ்ராருக்கு இப்படி ஒரு ஆசை வந்துள்ளது. முடிவு அட்லீ கையில் தான் உள்ளது.

## பரீட்சை எழுதும்போது பெண்கள் என்ன செய்வார்கள் தெரியுமா...???

1.எழுதுவது.
2.அடிக்கடி நெற்றியில் விழும் முடியை எடுத்து காதுகளுக்கு பின்னால் விடுவது.
3.மீண்டும் எழுதுவது.
4.பேனாவில் மை இருக்கிறதா என்று அடிக்கடி சோதனை செய்வது.
5.மீண்டும் எழுதுவது.
6.தெரியாத கேள்விக்கு யோசிக்கும்போது அடிக்கடி பேனாவை உதட்டில் வைத்து உரசுவது.
7.கூடுதலாக எழுத பேப்பர் கேட்பது.
8.மீண்டும் எழுதுவது....!!!


படித்ததில் பிடித்தது

**ஆனால் ஆண்கள் என்ன செய்வார்கள் தெரியுமா?**

1.எத்தனை பொண்கள் இருக்கிறாங்கள் என எண்ணுவது.
2.பெண் பரீட்சைக் கண்காணிப்பாளரை நோட்டம் விடுவது.
3.அறையில் உள்ள ஜன்னல் கம்பிகளை எண்ணுவது.
4.பேனா எந்தக் கம்பனி என்று பார்ப்பது ஆராய்ச்சியில் ஈடுபடுவது.
5.உட்கார்ந்த இடத்தில் இருந்து கொஞ்சம் தள்ளி உட்காருவது.
6.அடிக்கடி நேரம் பார்ப்பது. (எப்படா வெளியில் விடுவாங்க)
7.அடுத்த பரீட்சையிலாவது நல்லா படிக்க நினைப்பது....!!!



**முகநூலைக் கண்டு பிடிச்சது வேண்டுமானால் அமெரிக்கா காரணாக இருக்கலாம்... ஆனா**



**அதிலை முகநூலின் ஐடியை கண்டுபிடிச்சது எங்க தமிழ்நாட்டு பெண்களே தான்!!**

**125 கோடி மக்களை பிளாஸ்ரிக் உபயோகிக்காதீர்கள் என்று கட்டாயப்படுத்துவதை விட.**



**ஒரு உத்தரவின் மூலம் அவைகளின் உற்பத்தியை அரசால் நிறுத்த முடியாதா..?**

**"டா" போடும் பெண்கள் அனைவரும் ஆண்களையே (தேநீர்) "டீ" போட கிச்சனுக்குள் அனுப்புகின்றனர்**



**இன்றைய "டா" நாளைய "டீ" இதுவே காலப்போக்கில் டாடி என குழந்தைகளால் அன்போடு அழைக்கப்படுகிறது!!!**




**மிருதுளா**

தன் கடமைகள் எதையும் சரியாகச் செய்யாத குடும்பத்தினர் ஒருவருக்கு, தேவையான அனைத்தையும் அன்போடு செய்வதெல்லாம் சினிமாவில் மட்டுமே சாத்தியம்...

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 4 | | | | | 6 | 8 | |
| 8 | | | | 4 | | | | |
| | | 1 | 6 | | | 9 | | |
| 4 | 3 | | | 6 | | 7 | | |
| | 8 | | 9 | 3 | 1 | | | |
| | | 2 | 4 | 7 | | | | 3 |
| | | 3 | | | 4 | 2 | | |
| | | 4 | | 1 | | | | 7 |
| | 2 | 8 | | 9 | | | 5 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 2 | 8 | 5 | 7 | 3 | 6 | 9 | 1 |
| 7 | 1 | 5 | 9 | 6 | 4 | 3 | 2 | 8 |
| 3 | 6 | 9 | 1 | 8 | 2 | 4 | 7 | 5 |
| 5 | 3 | 2 | 4 | 9 | 8 | 7 | 1 | 6 |
| 8 | 4 | 6 | 7 | 5 | 1 | 9 | 3 | 2 |
| 9 | 7 | 1 | 2 | 3 | 6 | 5 | 8 | 4 |
| 6 | 5 | 3 | 8 | 2 | 7 | 1 | 4 | 9 |
| 2 | 9 | 4 | 3 | 1 | 5 | 8 | 6 | 7 |
| 1 | 8 | 7 | 6 | 4 | 9 | 2 | 5 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தரிக்காய் ஊறுகாய்



## தேவையான பொருள்கள்

மெல்லிய கத்தரிக்காய் – அரைக்கிலோ
பூண்டு – 4 பல்லு
மிளகாய் தூள் – 4 தேக்கரண்டி
நசுக்கிய இஞ்சி – 1 அங்குலம்
எண்ணெய் – 2 கப்
உப்பு – தேவையான அளவு

## செய்முறை:

பூண்டைவிழுதாகஅரைத்துக்கொள்ளவும். கத்தரிக்காய்களை நன்கு கழுவி இரண்டு அங்குல நீள அளவுக்கு நறுக்கிக் கொள்ளவும்.

நறுக்கிய கத்தரிக் காய்களைஉப்புதூளில் பிசிறி எடுத்துக் கொள்ளவும்.

பிறகு அதனுடன் பூண்டு விழுது, நசுக்கிய இஞ்சி, மிளகாய்த்தூள் சேர்த்து அக்கலவையை சட்டியில்சிறிது எண்ணெய் விட்டு மிதமான சூட்டில் வதக்கவும்.

இதனைப்பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டால் தேவையானப் போது பயன்படுத்திக் கொள்ளலாம்.



## வீட்டில் பூச்சி தொல்லை தடுப்பதற்கான வழிமுறைகள்!!

ஈக்கள், நுளம்பு, கரப்பான்பூச்சி, மூட்டைப் பூச்சி, வண்டு என வீட்டில் நம்மோடு பலவகை பூச்சிகளும் குடித்தனம் நடத்தி வரும். சில பூச்சிகள் வீட்டில் இருப்பதும் தெரியாது, போவதும் தெரியாது, வண்டுகளை போல. ஆனால், சில எம்மை நிம்மதியாக ஓரிடத்தில் உட்கார விடாது, 10 நிமிடங்கள் கூட தூங்கவிடாது, தொல்லை செய்துக் கொண்டே இருக்கும், மூட்டை பூச்சிகளைப் போல.

இவற்றை எல்லாம் துரத்த வெளியில் கடையில் இருந்து இரசாயன மருந்துகளை வாங்கி கொண்டு வந்து அடித்தால், நாம் தான் ஓர் நாள் வீட்டை விட்டு வெளியில் இருக்க வேண்டுமே தவிர, அவை வீட்டில் ஜம்மென்று இருக்கும்.

வீட்டில் தொல்லை செய்யும் பூச்சிகளை விரட்ட, இயற்கையான எளிய வழிகள் இருக்கும் போது ஏன் வீணாக சிரமப்பட வேண்டும்....

**நாளை**
**சித்திரை-06**
செவ்வாய்க்கிழமை 19.04.2016
திதி: திரயோதசி முழுவதும்
நட்சத்திரம்: உத்தரம்
பி.இ.02.21 வரை
ராகுகாலம்: 03.02-04.32 வரை
சுபநேரம்: 10.32-12.02 வரை
பிரதோச விரதம்


## பயன்தரும் வீட்டுக் குறிப்புகள்!

- ஆணி அடிக்கும் போது நுனியில் தேங்காய் எண்ணெய் தடவினால் சுவரில் சுலபமாக இறங்கும்.
- சமையல் அறையில் எண்ணெய் பசையுள்ள இடத்தில் சுண்ணாம்புடன் மண்ணெண்ணெய் கலந்து அடிக்கலாம்.
- கூர்மையான கத்திகளில் தேங்காய் எண்ணெய் தடவி வந்தால் அதன் கூர்மை மழுங்காது.
- பால் பாக்கெற் வாங்கி காய்ச்ச நேரமில்லாமல் போனால் அதை தண்ணீருக்குள் போட்டு வைத்துவிட்டால் மூன்று மணி நேரம் கழித்துக் கூட காய்ச்சலாம்.
- இனிப்பு பலகாரங்கள் உலர்ந்து கெட்டுப் போகாமலிருக்க அதன் மீது சிறிது தேன் பூசி வைக்கலாம்.
- பால் காய்ச்ச மறந்து போய் விட்டீர்களா? பால் திரிந்து போகுமோ என்ற பயம் ஏற்படுகிறதா? கவலை வேண்டாம். பாலைக் காய்ச்சும் முன் ஒரு சிட்டிகை சமையல் சோடா மாவு கலந்து காய்ச்சினால் பால் திரியாது.
- நெய் எவ்வளவு காலமும் கட்டியாக இருக்க அதோடு ஒரு வெல்லத் துண்டைப் போட்டு வைக்கவும்.
- தக்காளி, எலுமிச்சைப் பழம் சீக்கிரம் கெடாமலிருக்க உப்பு கலந்த நீரில் போட்டு வைக்கவும்.
- தயிர் புளித்து விடுமோ என்ற பயம் வேண்டாம். ஒரு துண்டு தேங்காயைப் போட்டு வைத்தால் தயிர் புளிக்காது.
- அப்பிள் மிகவும் புளிப்பாக இருந்தால் தோல் சீவி நறுக்கி உப்பு, மிளகாய்ப் பொடி, வெந்தயப் பொடி, பெருங்காயப் பொடி கலந்து தாளித்துக் கொட்டுங்கள். புதுமையான ஊறுகாய் தயார்.



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 800 | 700 | 500 | 600 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 300 | 200 | – |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 600 | 600 | – |
| பாரை | 550 | 500 | 500 | 600 | 550 | 600 | 450 |
| சுறா | 500 | 400 | 600 | 500 | 700 | – | – |
| சீலா | 300 | 500 | 400 | 500 | 400 | 300 | 400 |
| விளை | 650 | 500 | 400 | 600 | 400 | 400 | 350 |
| முரல் | 300 | 400 | 350 | 450 | 400 | 300 | 300 |
| கும்பிளா | 400 | 400 | 300 | 400 | 350 | 300 | – |
| கிளாக்கன் | 800 | 800 | – | – | 600 | 400 | – |
| ஓரா | 400 | 300 | – | – | 450 | 400 | – |
| திரளி | 300 | 200 | 200 | 250 | 300 | 200 | 300 |
| நகரை | 250 | 300 | – | 300 | 300 | 300 | 300 |
| சூடை | 150 | 150 | 100 | 250 | 120 | 100 | – |
| ஒட்டி | 300 | 200 | 150 | 250 | 300 | – | – |
| திருக்கை | 150 | 300 | 200 | 400 | 300 | 300 | 150 |
| மதனம் | 150 | 250 | 180 | 400 | 250 | – | 250 |
| கொய் | 100 | 200 | 60 | 150 | 100 | 50 | – |
| பாலை | 400 | 300 | 250 | – | 400 | 300 | – |
| வாழை | 100 | 150 | 200 | 400 | 350 | 300 | – |



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 50 | 50 | 60 | 60 | 60 | 20 | 40 |
| கத்தரி | 100 | 60 | 100 | 80 | 80 | 40 | 50 | 50 |
| கரட் | 100 | 100 | 80–200 | 120 | 80 | 120 | 90 | 140 |
| மரவள்ளி | 50 | 50 | 40 | 50 | 50 | 60 | 40 | 40 |
| பயிற்றை | 100 | 80 | 100 | 120 | 80 | 40 | 70 | 50 |
| பாகல் | 120 | 120 | 120 | 120 | 100 | 100 | 120 | 100 |
| கருணைக்கிழங்கு | 100 | – | 80 | – | 80 | – | 70 | 80 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 90 | 90 | 80 | 100 | 70 | 60 |
| சி.வெங்காயம் | 70 | 100 | 80 | 80 | 60 | 120 | 100 | 60 |
| பூசணி | 40 | 25 | 40 | 40 | 25 | 50 | 15 | 30 |
| தக்காளி | 120 | 70 | 100 | 120 | 100 | 80 | 100 | 140 |
| வாழைக்காய் | 50 | 40 | 60 | 40 | 40 | 40 | 40 | 30 |
| கீரை | 20 | 30 | 40 | 10 | 30 | 20 | 25 | 30 |
| பொன்னாங்காணி | 25 | 30 | 30 | 35 | 20 | 30 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 120 | 140 | 100–160 | 120 | 100 | 120 | 100 | 140 |
| புடோல் | 40 | 40 | 60 | 60 | 50 | 40 | 20 | 50 |
| கோவா | 50 | 80 | 60 | 80 | 50 | 100 | 55 | 60 |
| வெண்டி | 100 | 80 | 80 | 80 | 80 | 60 | 50 | 40 |
| போஞ்சி | 140 | 110 | 120 | 140 | 120 | 120 | 120 | 180 |
| லீக்ஸ் | 140 | 120 | 120 | 140 | 120 | 120 | 120 | 100 |
| தேங்காய் | 40 | 35 | 50 | 50 | 40 | 40 | 20–35 | 30 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 80 | 90 | 80 | 100 | 70 | 120 |
| தேசிக்காய் | 300 | 350 | 350 | 300 | 340 | 200 | 300 | 400 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 20 | 10 | 15 |
| கறிமிளகாய் | 100 | 80 | 100 | 100 | 120 | 120 | 80 | 100 |
| இராசவள்ளி | 160 | – | 140 | 160 | 140 | – | 110 | 90 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 300–500 | 300 | 300 | 300 | 260 | 350 |
| [illegible]கிழங்கு | – | – | – | – | – | – | – | – |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுட்பம்



## காணாமற்போன குழந்தைகளை கண்டறியும் காலணி அறிமுகம்

பெற்றோர்களே கண்டுபிடிக்கும் நவீன காலணிகள் உள்ளிட்ட பல புதிய கண்டுபிடிப்புகள் சுவிஸ் கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சுவிஸில் உள்ள ஜெனிவா நகரில் 44 ஆவது சர்வதேச புதிய கண்டுபிடிப்புகள் கண்காட்சி தொடங்கியுள்ளது.

இந்தக் கண்காட்சியில் 48 நாடுகளைச் சேர்ந்த 750 புதியகண்டுபிடிப்புகள் இடம்பெற்றுள்ளன. உதாரணத்துக்கு, இல்லற உறவில் குறைபாடுகள் உள்ளவர்களுக்காக விசேட படுக்கை ஒன்று இந்த கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளது. இந்த படுக்கையை சோபாவாகவும் மாற்றுவதுடன், இல்லற உறவில் ஈடுபடும் தம்பதிகள் தங்களுடைய விருப்பத்துக்கு ஏற்றவாறு இந்த சோபாவை மாற்றிப் பயன்படுத்திக் கொள்ளலாம். இதுமட்டுமில்லாமல், முதுகு வலி மற்றும் உடல்கோளாறுகள் உள்ளவர்களும் இந்த சோபாவை பயன்படுத்தி இல்லற உறவில் தங்களது விருப்பத்துக்கு ஏற்றவாறு ஈடுப்படலாம். இந்தக் கண்காட்சியில் இடம்பெற்றுள்ள மற்றொரு புதிய கண்டுபிடிப்புகுழந்தைகள் அணியும் காலணிகள் ஆகும்.

இந்த நவீன காலணிகளின் கியூ. ஆர் பார் கோட் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இந்த காலணிகளை அணியும் குழந்தைகளின் பெற்றோர் யார்? அவர்களது முகவரி என்ன? என்பது உள்ளிட்ட அனைத்து தகவல்களும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் காலணிகள் மூலம் குழந்தைகள் காணாமற்போனால், பெற்றோர்களே அவர்களை எளிதில் கண்டுபிடித்துவிடலாம். மேலே கூறியதை போல எண்ணற்ற புதிய கண்டுபிடிப்பு பொருள்கள் இந்தக் கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன. (த)

## வைபை வேகத்தை இரு மடங்கு அதிகரிக்கக் கூடிய புதிய வழிமுறை


வைபை வேகத்தை இரு மடங்கு அதிகரிக்கக் கூடிய புதிய வழிமுறையை இந்திய வம்சாவளி பொறியியலாளர் ஒருவர் கண்டறிந்துள்ளார்.

கொலம்பியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பொறியியல் மாணவரான ஹரிஷ் கிருஷ்ணசுவாமி, நான்-ரெசிப்ரோக்கல் சர்குலேட்டர் மற்றும் ஃபுல்- டூப்லெக்ஸ் ரேடியோவை (nondrecipro calcirculator and a fulldduplex radio) நானோஸ்கேல் சிலிகான் (nanoscalesilicon chip) சிப் ஒன்றில் பொருத்தி இந்த அமைப்பை உருவாக்கியுள்ளார்.

இந்த புதிய தொழில்நுட்பம் தொலைதொடர்பு துறையில் புரட்சியை உண்டாக்கும் என்றும் சிலிகான் சிப் பொருத்தப்பட்ட முதல் சர்குலேட்டர் இது தான் எனவும், கொலம்பியா ஹை-ஸ்பீட் மற்றும் எம்எம்-வேவ் ஐசி லாப் தலைவர் கிருஷ்ணசுவாமி தெரிவித்துள்ளார்.

மேலும், ஃபுல்-டூப்லெக்ஸ் கம்யூனிகேசன் (Fullddduplex communication) முறையில் நானோ சிலிகான் சிப் மற்றும் ஒற்றை ஆன்டெனா பயன்படுத்தி வைபை வேகத்தை இரு மடங்கு அதிகரிக்க முடியும் என்பதை சாத்தியமாக்கியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இருப்பினும் இது மக்கள் பயன்பாட்டுக்கு வழங்குவது குறித்து எந்தவித தகவல்களும் தற்போது வெளியிடப்படவில்லை.



# யு.ரி.ஈயின் உலகத்தரம் வாய்ந்த பயிற்சி நிலையத்துக்கு விருது



யுனைட்டெட் டிராக்டர்ஸ் அன்ட் எக்யுப்மன்ட் (பிரைவேட்) லிமிட்டெட்டின் பயிற்சி நிலையத்துக்கு வணிக பிரமுகர்கள், வெளிநாட்டு இராஜதந்திரிகள், நிபுணர்கள், தனியார் மற்றும் பொதுத்துறைகளைச் சேர்ந்த வாடிக்கையாளர்கள், கட்டர்பில்லர் பிரதிநிதிகள், விநியோகஸ்த்தர்கள் மற்றும் வணிக போட்டியாளர்கள் என பலரின் வரவேற்புக் கிடைத்துள்ளது. இந்த புகழ்பெற்ற யு.ரி.ஈயின் பயிற்சி நிலையத்துக்கு கட்டர்பில்லர் நிறுவனத்திடமிருந்து அண்மையில் பெருமைக்குரிய சேவைப் பயிற்சி சிறப்பு விருது வழங்கப்பட்டிருந்தது.

யு.ரி.ஈயின் பயிற்சி நிலையத்துக்கு அண்மையில் பயணம் செய்திருந்த கட்டர்பில்லர் பிராந்திய முகாமையாளர் தோமஸ் தியோ கருத்து தெரிவிக்கையில், இது உலகத் தரம் வாய்ந்த ஒரு சிறந்த பயிற்சி நிலையமாக அமைந்துள்ளது -என்றார். கட்டர்பில்லர் மாவட்ட முகாமையாளர் ஈ.சி.மனோஹர் கருத்துத் தெரிவிக்கையில், இது ஒரு முறையாக பராமரிக்கப்படும் பயிற்சி நிலையம் -என்றார்.

வணிகம்

கென்யாவின் தேசிய நிர்மாண சம்மேளனத்தின் பிரதிநிதிகள் குழுவொன்றும் இந்நிலையத்துக்கு அண்மையில் பயணம் செய்திருந்த போது, இந்நிலையத்தின் சிறப்பம்சங்கள் பற்றி விசேடமாக கருத்து வெளியிட்டிருந்ததுடன், இதன் போது அவர்கள் இதுவரை காலத்திலும் பார்த்த பயிற்சி நிலையங்களுள் சிறந்ததாக அமைந்திருந்ததாகக் குறிப்பிட்டனர். நிர்மாணத்துறையின் தேவையை கருத்தில் கொண்டும், தகைமைகள் வாய்ந்த தொழில்நுட்ப வல்லுநர்களை நிர்மாணத் துறையில் கொண்டிருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தைக் கவனத்தில் கொண்டும், இந்த நிலையத்தை 2013 இல், 200 மில்லியன் ரூபா முதலீட்டில் யு.ரி.ஈ நிறுவியிருந்தது. (த)

# கொலேட் 2016இல் டிஜிற்றல் பிரிண்ட் தங்க விருதை வென்ற போட்டோபுக்

இலங்கையில் டிஜிற்றல் முறையில் அச்சிடப்படும் போட்டோ புத்தகங்களை அறிமுகம் செய்த முன்னோடிகளான ஜாம்போட்டோ கொலேட் 2016 தங்க விருது வழங்கும் விழாவில் டிஜிற்றல் முறையில் அச்சிடப்பட்ட சிறந்த விடயங்களுக்கான விருதை வென்றுள்ளது. அச்சுத்துறைக்கான இந்தக் கண்காட்சி மாநாடு மற்றும் விருது வழங்கும் விழா என்பவற்றை இலங்கை அச்சகங்கள் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது.

ஜாம்போட்டோ தயாரித்த ஒரு போட்டோ புத்தகத்துக்கே இந்த விருது வழங்கப்பட்டது. மூன்று வருடங்களுக்கு முன் உள்ளூரில் புகைப்பட பிரதிகளைத் தயாரிப்பதில் இந்த நிறுவனம் சாதனை மிக்க ஆரம்பத்தை தொடங்கியது. இலங்கையில் முதற் தடவையாக போட்டா பிரதி புத்தகத்தை அது அறி முகம் செய்தது. அதிநவீன எச்.பீ இண் டிகோ டிஜிற்றல் அச்சு இயந்திரத்தைப் பயன்படுத்தி இது அறிமுகம் செய் யப்பட்டது. எமது இந்த அறிமுகம் போட்டோ புத்தகங்களுக்கு மட்டுமான ஆரம்பமாக அமையவில்லை. டிஜிற்றல் முறையில், அச்சிடப்பட்ட பல்வேறு வகையான விடயங்கள் இதன்மூலம் அறிமுகம் செய்யப்பட்டன என்று கூறினார் ஜாம்போட்டோவின் தலைவரும் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான அஷான் அபேசுந்தர. இந்த வகையில் இந்த விருது எமக்கு பெரும் மகிழ்ச்சி அளிக்கின்றது.



எமது உற்பத்திகளுக்கான ஆக்கபூர்வ பண்பு மற்றும் தரம் என்பவற்றுக்கான சான்றாகவும் எமது கம்பனியின் எதிர்கால ஆற்றல்களுக்கான சான்றாகவும் இது அமைந்துள்ளது என்று அவர் மேலும் கூறினார். பெபிரஸ் கூட்டுத்தாபனத்தின் அங்கத்துவ நிறுவனமானது ஜாம்போட்டோ பம்பலப்பிட்டியில் 4000 சதுர அடிகளைக் கொண்ட பரப்பளவில் செயற்படுகின்றது.

திருமண வைபவங்களுக்கான படப்பிடிப்பு சேவை, வடிமைப்பாளர்கள், வைபவங்களை ஒழுங்கமைத்தல், போட்டோ புத்தகம் ஒன்றை தயாரிக்கும் எண்ணம் கொண்ட ஒருவருக்கான சேவைகள் என பல்வேறுபட்ட நிபுணத்துவ சேவைகளை வழங்குகின்றது.

என்றும் நீடிக்கும் அழகிய கதைகள் என்ற தொனிப் பொருளில் ஜாம்போட்டோவின் இலக்கு வர்ணிக்கப் பட்டுள்ளது. அதி உயர்தரம் மிக்க மிகவும் வசதியான போட்டோ புத்தகங்கள் 5X7 முதல் 12X 17 அளவுகளில் தயாரிக்கப்படுகின்றன. பல்வேறு வகையான விசேடமான காகிதங்களில் இவை தயாரிக்கப்படுகின்றன. கவர்ச்சியான அட்டை உறுதியான பிணைப்பு என்பவற்றுடன் பாரம்பரிய முறையிலான அல்பம் ஒன்றுக்கு நிகராக இவை உருவாக்கப்படுகின்றன.

இலங்கையில் முதற் தடவையாக இணையவழி போட்டோ புத்தக உருவாக்க சேவை ஒன்றையும் கம்பனி இலங்கையில் ஆரம்பித்து வைத்துள்ளது.

இலங்கை அச்சகங்கள் சங்கத்தின் கலண்டரில் கொலேட் மிக முக்கிய ஒரு நிகழ்வாகும். இரண்டாண்டுகளுக்கு ஒரு தடவை இந்த விழா இடம்பெறுகின்றது.

இலங்கை அச்சு தொழில்துறையினர் தமது அங்கத்தவர்களின் ஆற்றல், உற்பத்தி மற்றும் தரம் என்பவற்றை ஒன்று திரட்டும் வகையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்படுகின்றது. கொலேட் 2016 கண்காட்சி இலங்கை கண்காட்சி மற்றும் மாநாட்டு மண்டபத்தில் மார்ச் 18 முதல் 20 வரை இடம்பெற்றது.

பெபிரஸ் கூட்டுத்தாபனம் ஜாம்போட்டோ இலங்கை சந்தையில் மிகச்சிறந்த விசேட காகிதங்களை வழங்கும் பெபிரஸ் பேப்பர்ஸ், டிஜிற்றல் விரைவு அச்சு சேவை நிபுணர்களான பிரிண்ட் பொயின்ட் தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனம், குழுமத்தின் சொத்து முகாமைத்துவக் கம்பனியான அஷ்லன் தனியார் முதலீட்டு வரையறுக்கப்பட்ட நிறுவனம் என்பவற்றை உள்ளடக்கியதாகும். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசுவாசமாகச்

2016 ஆம் ஆண்டு இறுதிக்குள் தீர்வு கிடைக்கும் என்று தெரிவித்திருந்தீர்கள். தெரிவித்ததைப் போன்று நடக்குமா என்று ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

2016 ஆம் ஆண்டு இறுதிக்குள் அரசியல் தீர்வு கிடைக்கும் என்பது, என்னுடைய கணிப்பு. தீர்வுத் திட்டத்தை ஏற்படுத்துவது நான் அல்ல. தீர்வுத் திட்டத்தைப் பெற்றுக் கொள்வதில் ஒரு ஒழுங்கு இருக்கின்றது. சில கருமங்கள் நடைபெற வேண்டும்.

என்னுடைய கணிப்பு, ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. மகிந்த ராஜபக்ச வீட்டுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றார். மைத்திரிபால சிறிசேன பதவிக்கு வந்துள்ளார். அவர் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காண்பதற்கு விரும்புகின்றார் என்பது எனது கணிப்பு. அவருக்கு உதவியாக ரணில் பிரதமராக வந்திருக்கின்றார். அவருக்கும் அதே சிந்தனை இருக்கின்றது.

இந்த இரண்டு பகுதிகளும் ஒரு பெரும்பான்மையைத் தாங்கள் அடையாவிட்டாலும் கூட எங்களுடைய உதவியுடன் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை அடையக் கூடிய நிலையில் இருக்கின்றார்கள். ஆனபடியால் இந்தக் கருமத்தில் தாமதம் ஏற்படவில்லை. விசுவாசமாக எல்லோரும் செயற்பட்டால் இந்தக் கருமம் வருடம் முடிவடைவதற்குள் முடிவடைய வேண்டும் என்பது என்னுடைய கணிப்பு.

அவ்விதமாக முடிவடைவது நல்லது என்று நான் நினைக்கின்றேன். அவ்விதம் முடிவடைந்தால் பிரச்சினை நீடிக்கப்படாமல், குழம்பாமல் நாங்கள் தீர்க்கலாம்.

ஊடகங்கள் இதைக் குழப்பக் கூடாது. ஊடகங்களின் சில கேள்விகளும், கருத்துக்களும் இதைக் குழப்புவதற்காகக் கேட்பது போன்று இருக்கின்றது. அதை நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன்.

எங்கள் மக்களுக்கு என்ன தேவை என்பது எங்களுக்குத் தெரியும். எமது மக்களுக்கு ஒரு நிரந்தரமான - நியாயமான - நடைமுறைப்படுத்தக் கூடிய - நிறைவேற்றக் கூடிய அரசியல் தீர்வு ஏற்பட வேண்டும். அது எங்களது மக்களின் இறைமையின் அடிப்படையில் பெறப்படவேண்டும். அது அவர்களின் பிறப்புரிமை.

எங்கள் மக்கள் மீது நாங்கள் ஒரு போதும் தீர்வை திணிக்க மாட்டோம். மக்களைச் சந்தித்து மக்களின் சம்மதத்துடனேயே தீர்வை ஏற்றுக்கொள்வோம். எமது மக்களை கைவிட மாட்டோம் - என்றார். (த-வ-5-101)

## சமஷ்டி

எண்ணுவதாக மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கட்சியென்ற ரீதியில் நாம் எதிர் பார்ப்பது தமிழ், முஸ்லிம் மற்றும் மலையக மக்கள் உட்பட, அனைத்து மக்களுக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும். சமஷ்டி என்பதை தேசிய ஒற்றுமைக்கான தீர்வாக நாம் ஒரு போதும் எண்ணவில்லை.

சமஷ்டி மக்களை தூரப்படுத்துமே தவிர இனங்களை அண்மைப்படுத்தாது. தமிழ், முஸ்லிம்,மலையகம் உட்பட அனைத்து சமூகங்களுடைய பிரச்சினைக்கு தீர்வென்பது பிரிந்து செல்வதால் ஏற்படப்போவதில்லை.

தேசிய ஒற்றுமையைக் கொண்டு வருவதன் மூலமே அதை அடைய முடியும். தேசிய ஒற்றுமையை அடைய வேண்டுமானால் சம உரிமைகள் அனைத்து சமூகத் துக்கும் வழங்கப்பட வேண்டும். அரசியல் சாசனத்தின் வழி சம உரிமைகள் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

இன்றைய சூழ்நிலையில் தமிழ் மக்களாயினும் சரி சிங்கள மக்களாயினும் சரி அல்லது வடக்கு தெற்கு மக்களாயினும் சரி ஒன்றிணைந்து பொதுப் பிரச்சினைகளுக்காக போராடத் தயாராகவுள்ளனர். தமிழக மீனவர்கள் வடக்கு கடல் பரப்பில் உள்ள மீன் வளங்களை கொள்ளையடித்துச் செல்கின்றனர். இது ஒரு பெரிய பிரச்சினை. இது குறித்து அரசு எவ்வித அக்கறையும் காட்டவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இதனைக் கண்டுகொள்ளவில்லை.

எல்லாப் பிரச்சினைகளையும் போராடியே வெல்ல முடியும். முதலாளித்துவ அரசியல்வாதிகளை மகிழ்ச்சிப்படுத்தும் ஏகாதிபத்தியத்தை மகிழ்ச்சிப்படுத்தும் பிரிவினைவாத சமஷ்டி முறை தமிழ் மக்களின் பிரச்சினைக்கு சாதகமானதொன்றாக தாம் கருதவில்லை என்றும் மேலும் தெரிவித்துள்ளார். (த-5)


## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் செல்வராசா
(பெரியதம்பி)



திருநெல்வேலி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும். பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் செல்வராசா 12.04.2016 செவ்வாய்க்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - நாகம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வனும். காலஞ்சென்றவர்களான கந்தசாமி - நேசம் தம்பதிகளின் மருமகனும். சுகந்தியின் அன்புக் கணவரும். மதுஷா. பானுஷா. கோகுலன் ஆகியோரின் அன்புத் தந்தையும். புஸ்பமலர் (ஜேர்மனி). செல்வமலர் (பேபி - திருநெல்வேலி). இராசமலர் (பிரான்ஸ்). ரஞ்சிதமலர் (அப்பன் - திருநெல்வேலி). காலஞ்சென்ற திருக்கேதீஸ்வரன் மற்றும் திருக்குமரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும். சுசீலகாந்தன் (ஜேர்மனி). பாலா (பூமகள் ரான்ஸ்போர்ட் திருநெல்வேலி). மனோகரன் (பிரான்ஸ்). உருத்திரகுமார் (கால்நடை வைத்தியசாலை - யாழ்ப்பாணம்). பாமினி (பிரான்ஸ்). ஜெயமலர். மல்லிகா. மஞ்சுளா. இராசமலர். தவமூர்த்தி. சுமதி ஆகியோரின் அன்பு மைத்துனரும். உமைக்குமரன் கஜமுகி (லண்டன்). உதயபவன் குகன்யா (ஸ்ரான்லி வீதி. கிளை- மக்கள் வங்கி). தனஞ்சயன், ஆரதி. ஆதவன். கௌசிகன். பௌசிகா (2ஆம் வருட இணைமருத்துவபீடம்). அன்புஜா (இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும். தீபானி. மிலானி. கல்யாணி ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும். பிரவீன். ஆதுஷன் ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.04.2016) செவ்வாய்க்கிழமை பிரான்ஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

97/1, 3ஆவது மைல்கல் பலாலி றோட்,
திருநெல்வேலி (ஜே/364)(11)

தகவல்:
குடும்பத்தினர்.

பேபி- 021 221 9584, அப்பன் - 021 221 9586

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி சரவணபவான்

தோற்றம்
25
.
01
.
1937



மறைவு
16
.
04
.
2016

தோப்பு: அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி சரவணபவான் 16.04.2016 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சரவணபவானின் (ஓய்வுநிலை நிர்வாக அலுவலர் - மாந்தை உதவி அரச அதிபர் பணிமனை) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான விநாசித்தம்பி - மீனாட்சி தம்பதியரின் பாசமிகு மகளும். காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும். காலஞ்சென்றவர்களான அன்னப்பிள்ளை, செல்லம்மா, பொன்னம்மா மற்றும் நாகுப்பிள்ளை. குணரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும். கிருபாகரன் (கனடா). சசிகலா (கனடா). நித்தியகலா (ஆசிரியை - அச்சுவேலி மத்திய கல்லூரி). கோமதி (ஆசிரியை - அச்சுவேலி மத்திய கல்லூரி). வசுமதி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும். சசி (கனடா). சிவகுமார் (கனடா). குணராஜா (ஓய்வுநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர் - யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடம்). கனகலிங்கம் (ஓய்வுநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர் - கட்டட திணைக்களம்). தவராஜா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும். அருண். சொரூபி. பைரவி. சுஜன். சஜீவன். சிவானுஜன். ஜெனீபன். சிவானுஜா (ஆசிரியை - மத்துகம விவேகானந்தா வித்தியாலயம்). சிந்துஜா ( NSB - அச்சுவேலி ). சிறீசன். சங்கீத். லிதுர்ஷன் (மாணவர்கள் - யா/ இந்துக் கல்லூரி). பிரியங்கா. தர்சிகா. சோபிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.04.2016) செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தோப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆஸ்பத்திரி வீதி,
தோப்பு, அச்சுவேலி. (ஜே/435)(11)

தகவல்: சரவணபவான்
(கணவர்)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நவரஞ்சிதமலர் வேணுதாஸ்

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட வேணுதாஸ் அவர்களின் அன்புத் துணைவியார் திருமதி நவரஞ்சிதமலர் வேணுதாஸ் 10.04.2016 ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் இளவாலை மாரீசன் கூடலைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - புவனேஸ்வரி தம்பதியினரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நவநீதகுமார் மற்றும் விஜிதா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று(18.04.2016) திங்கட்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: செல்வி வி.மகேஸ்வரி(மாமியார் - ஓய்வு நிலை ஆசிரியை சித்தன்கேணி, சிறிகணேசா வித்தியாலயம்)செல்வி சி.விஜிதா(சகோதரி)

வேணுதாஸ் - 004915216873842

### இராசதுரை இராசகுலசிங்கம்



யாழ். தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் பரிஸை வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை இராசகுலசிங்கம் 12.04.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசதுரை மற்றும் நாகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், மதிவதனியின் அன்புக் கணவரும். சோனியா. ஜன்போல். டவித் ஆகியோரின் அன்புத் தந்தையும். நகுலேஸ்வரி. குமாரகுலசிங்கம். ஜெயறஞ்சினி. ஜெயவதனி ஆகியோரின் அன்புச் சகோதர ரும். மகாலிங்கம் திரவியம் ஆகியோரின் அன்பு மருமகனும். விஜயராஜா. லோகநாயகம். ஞானதாஸ். வசீகரன். சசிகரன். நவகரன். ஜெகவதனி. தவவதனி ஆகியோரின் அன்பு மைத்துனரும். செல்விகா. வினோத். நிதூசன். ஜஸ்வின் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.04.2016) செவ்வாய்க்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புதிய செம்மணி வீதி,
கல்வியங்காடு. (ஜே/413)(11)

தகவல்:
மகாலிங்கம் திரவியம்
(மாமனார், மாமியார்
குடும்பத்தினர்)

### திருமதி பரமேஸ்வரி இராசையா



பிறப்பு 02.11.1928 இறப்பு 16.04.2016

யாழ்.அனலைதீவைப் பிறப்பிடமாகவும். யாழ்.நல்லூரை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி இராசையா (16.04.2016) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பசுபதிப்பிள்ளை இராசையாவின் (இளைப்பாறிய தலைமை ஆசிரியர்) அருமை மனைவியும், காலஞ்சென்றவர்களான சிவசம்பு - வள்ளியம்மை தம்பதிகளின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான பசுபதிப் பிள்ளை - வள்ளியம்மை தம்பதிகளின் அருமை மருமகளும். லம்போதரநாதன் (லண்டன்). இராசலிங்கம் (சிட்னி). காலஞ்சென்ற கமலா தேவி மற்றும் விமலாதேவி (நல்லூர்) ஆகியோரின் அன்புத் தாயாரும். புஸ்பமணி தம்பித்துரை (லண்டன்). கனகசபை (கனடா). காலஞ்சென்ற தியாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும். காலஞ் சென்றவர்களான ஐயம்பிள்ளை. செல்லத்துரை. தம்பித்துரை (கலைவாணி). பொன்னம்மா மற்றும் இராசம்மா. கமலாம்பிகை. சிவரூபி ஆகியோரின் அன்பு மைத்துனியும். பராசக்தி. ஜெயதர்சினி ஆகியோரின் அன்பு மாமியாரும். முரளி. சங்கர். சிவகாமி (லண்டன்). சேந்தன். குகன் (சிட்னி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும். ரவின். அரந்தன் (லண்டன்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.04.2016) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று செம்மணி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

290/14, கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

இ.லம்போதரநாதன்
இ.இராசலிங்கம்
இ.விமலாதேவி
} 021 205 4018


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



எமது யாழ். மலேரியா தடைப் பிரிவி னுடைய பொது சுகாதாரப் பரிசோதகர்

**குணசிங்கம் கருணாநிதி**

அவர்கள்(17.04.2016) ஞாயிற்றுக்கிழமை இறை பதம் அடைந்து விட்டார். அவரின் ஆத்மா சாந்தி யடைய பிரார்த்திப்பதோடு அன்னாரின் குடும்பத் தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அவரின் துயரில் பங்குறும்
பிராந்திய வைத்திய அதிகாரி, உத்தியோகத்தர்கள், பணியாளர்கள்,
பிராந்திய மலேரியா தடைப்பிரிவு, யாழ் பிராந்தியம், சுகாதாரக்கிராமம் - பண்ணை

# கண்ணீர் அஞ்சலி

## குணசிங்கம் கருணாநிதி

தோற்றம்
27 . 09 . 1966



மறைவு
17 . 04 . 2016

சங்கானை பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் வாழ்வின் எழுச்சி முகாமையாளர் **திருமதி க. சரோஜாதேவியின்** கணவரின் பிரிவால் துயர் உறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**வாழ்வின் எழுச்சி முகாமையாளர் சங்கம், யாழ் மாவட்டம்.**

# கண்ணீர் அஞ்சலி




எமது கல்லூரியில் ஆசிரியராக கடமை யாற்றும் **திருமதி கவிதா ஜெயசிறி** அவர்களின் தாயாரான **தவமணி வடிவேலு** அவர்களின் பிரிவால் துயர் அடைந்த அவரது குடும்பத்தவர்களிற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிறப்பு 29.03.1948
இறப்பு 16.04.2016

**அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள். யா/ வரணி மத்திய கல்லூரி - வரணி.**

# கண்ணீர் அஞ்சலி



17.04.2016 இறைபதம் அடைந்த எமது சக உத்தி யோகத்தர் **குணசிங்கம் கருணாநிதி** அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவ ரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்க ளைத் தெரிவித்துக் கொள்வ தோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவ னைப் பிரார்த்திக்கின்றோம்.

**அகில இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம், யாழ் மாவட்டம்.**

# 31 ஆவது அகவை நிறைவும் 7 ஆம் வருட நினைவுகளும்



## செல்வி வல்லிபுரநாதன் பிறிந்தாஜினி

மடியினில் 18.04.1985
மண்ணில் 02.01.2009

**எங்கள் குலக் கொழுந்தே! திங்கள் முகத்தழகே!**
**கங்குல் விலக்கிவிடும் காலைச் சிரிப்பழகே!**
**எங்கும் துயர்கசிய எமைவிட்டுப் போயினையோ?**
**மங்கலம் திலகமொடு மாலையிடும் பருவமதில்**
**எங்ஙனம் நீ ஏமாற்றம் தந்துவிட்டுப் போயினையோ?**
**எங்கள் பிறிந்தாவனமே நீயில்லாத்துயர்வெளியில்**
**நாளும் வலிகளொடு விழிஈரம் சுமக்கின்றோம்**
**ஆண்டுகள் பலகோடி ஆனாலும் ஆறாது**
**நீண்டு செல்லுமெங்கள் நினைவுப் பேராறு.**

**இராமலிங்கம் வீதி,**
**மட்டுவில் நாடு மேற்கு, பூநகரி.**

(ஆ. 17) (13.17)

**குடும்பத்தினர்.**

# மைத்திரியின் மே தினக் கூட்ட ஏற்பாட்டுக்கு வெல்கம-பவித்ரா-மகிந்தானந்த பொறுப்பு

இம்முறை காலி சமனல விளை யாட்டு மைதானத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலை மையில்நடைபெறவுள்ளசிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட் டத்துக்கானஏற்பாடு களைச்செய்யும் பொறுப்பு அமைச் சர்களான குமார வெல்கம, மகிந் தானந்த அளுத் கமகே, பவித்ரா வன்னியாராச்சி ஆகிய மூவரிடமும் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

கடந்த வாரம் நடைபெற்ற சுதந் திரக்கட்சியின்மத்தியநிறைவேற்றுக் குழுக் கூட்டத்திலேயே இவர்கள் நியமிக்கப்பட்டார்கள். (த-சி)

## வலி.வடக்கு

**பருத்தித்துறைபிரதேச செயலாளர் பிரிவில் 3 இடங்களும் , கர வெட்டி மற்றும் யாழ்ப்பாணம் பிர** தேச செயலாளர் பிரிவுகளில் தலா 2 இடங்களும் கோரப்பட்டுள் ளன.

மேலும், குடாநாட்டின் 15 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் மிக குறைந்த இடமாக உடுவிலில் ஓர் இடம் மட்டும் கோரப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் உயர் பாது காப்பு வலயத்தில் பல ஆயிரம் ஏக் கருடன் 118 இடங்கள் கோரப் பட்டுள்ளன. இவ்வாறு கோரப்பட் டுள்ள இடங்களில் பல மகிந்த ஆட்சிக்காலத்தில் அளவீடு செய்ய முற்பட்டவேளையில், மக்களும் அரசியல்வாதிகளும் தலையிட்டுத் தடுப்பில் ஈடுபட்டனர்.

எனினும் நல்லாட்சி அரசின் ஆட் சியில் இந்த விடயத்துக்கு தீர்வு கிட்டும் என நம்பியிருந்த மக்க ளின் மனதில் மீண்டும் அச்சம் சூழ்ந் துள்ளநிலையில், இன்று ஜனாதி பதி மாளிகையில் இது தொடர்பான கலந்துரையாடல் இடம்பெறவுள் ளமை குறிப்பிடத்தக்கது.

(த-வ-101)

## சிறுமி

கடந்த வெள்ளிக்கிழமை சிறுமி யின் வீட்டில் யாரும் இல்லாத நேரம் பார்த்து, அங்கு சென்று சிறுமியு டன் நீண்டநேரம் பேசியுள்ளார்.

பின்னர் தன்னுடன் அழைத்துச் சென்று உறவினர் வீட்டில் இரவு தங்க வைத்துப் பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்துவிட்டு, மறுநாள் அதிகாலை 3 மணி ளவில் சிறுமியைக் கொண்டு வந்து விட்டுள்ளார் என்று குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. இது தொடர்பில் சிறுமியின் பெற்றோர் ஊர்காவற் றுறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் குற்றஞ் சாட்டப்படும் இளைஞன் கொழும் புக்குச் சென்றுள்ளதாகப் பொலி ஸாருக்கு தகவல் கிடைக்கப்பெற் றுள்ளது. அவரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள தாகப் பொலிஸார் மேலும் தெரி வித்தனர்.

(த-வ-4-107)

## எதிர்காலச்

விலகிக்கொள்வதாக வும், தனித்துவமான முறையில் தனது அர சியல் செயற்பாடுகளை முன்னெடுக்கப் போவ தாகவும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

1994 ஆம் ஆண்டு முதன் முறை யாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட சந்திரகுமார், **அடுத்து நடந்த தேர்தல்களில் வெற்றி பெறவில்லை. எனினும், 2010 ஆம் ஆண்டு நடந்த நாடா** ளுமன்றத் தேர்தலில் யாழ்.மாவட் டத்தில் இருந்து தெரிவு செய்யப் பட்ட அவர், நாடாளுமன்றத்தில் குழுக்களின் பிரதித் தலைவராக வும் பணியாற்றினார்.

இதேவேளை, கடந்த ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஈ.பி.டி.பி சார்பில் போட்டியிட்ட சந்திரகுமார் தோல்வியடைந்தார். ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பில் இருந்து, டக்ளஸ் தேவானந்தா ஈ.பி.டி.பி.யை உருவாக்கிய போது, அதன் ஆரம்பகால உறுப்பினர் களில் ஒருவராக இருந்த சந்திரகு மாருக்கும், டக்ளஸ் தேவானந்தா வுக்கும் இடையில் கடந்த நாடாளு மன்றத் தேர்தலிலிருந்து கருத்து முரண்பாடுகள் உருவாகியிருந் தாக, ஈ.பி.டி.பி.யின் முக்கியஸ்தர் ஒருவர் குறிப்பிட்டார்.

(த-5)

**பணிப்பெண் தேவை**
யாழ் நகரை அண்மித்த வீடொன்றிற்கு பணிப்பெண் தேவை. தங்குமிடவசதி, மூன்று நேர உணவும் வழங்கப்படும். வயது (30-40) சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
தொடர்பு : 076 547 3487

## நள்ளிரவில்


கைப்பையினை அவ்விடத்திலே விட்டு சென்றுள்ளனர்.

அதிகாலை கோயிலுக்குச் செல் வதற்கு எழுந்து நகைகளைப்பார்த்த போது, அலுமாரி கதவு திறக்கப்பட் டிருந்ததைக் கண்டே இரவு திருடர் கள் உள்நுழைந் தமை தெரியவந் துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் வழக்குப் பதிவுசெய்துள்ள குற் றத்தடுப்புப் பொலி ஸார், மேலதிக விசா ரணைகளை மேற் கொண்டு வருகின் றனர். இதுவரை எவ ரும் கைது செய்யப் படவில்லை என்றும் விசாரணை மேற் கொள்ளப் படுகிறது என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்ட னர். (த-வ-4-107)

# மரண அறிவித்தல்

அன்னை மடியில்
11 . 08 . 1941



ஆண்டவன் மடியில்
17 . 04 . 2016

## மாசிலாமணி சுப்பையா

(ஓய்வுபெற்ற Artificer Grade - 1 , இலங்கை மின்சார சபை - சாவகச்சேரி)

மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாசிலாமணி சுப்பையா நேற்று (17.04.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற மாசிலாமணி – வள்ளி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சங்கரன் – வள்ளி தம்பதிகளின் அன்பு மரும கனும் அன்னம்மாவின் பாசமிகு கணவரும் சுபாஸ்கரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற சுபேந்திரன், சுதர்சன் (கனடா), மிஷாந்தி, சுகிர்தரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அகிலா(ஜேர்மனி), செந்தாரகா (கனடா), சதீஸ்தரன் (நீதிவான் – யாழ்ப்பாணம்), சாளினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் லற்றீனா (ஜேர்மனி), சுஜின் (ஜேர்மனி), அருஸ்கா (ஜேர்மனி), பிரவீனா (கனடா), பிரனிஸ் (கனடா), சுஜனிகா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சிவகுரு, காலஞ்சென்ற அண்ணாச்சாமி, கந்தசாமி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கற்பகம் (கனடா), காலஞ்சென்ற சரவணமுத்து, நல்லமுத்து, பூரணம், காலஞ்சென்ற சிங்கராசா, பரராசா (லண்டன்), தேவிமலர் (கனடா), துரைராசா (நோர்வே), கந்தசாமி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

மிஷாந்த் மவுறால்
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

**தகவல்**
**குடும்பத்தினர்**

## புதிய

அழைப்பு விடுக் கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற நிர்வாகப் பிரதானி நீல் இத்தவெல குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது மூன்று பேரில் ஒருவரு டைய பெயர் அரச மைப்புச் சபையி னால் பிரேரிக்கப் பட்டு, அதை ஜனாதி பதியிடம் சமர்ப்பிக் கவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

(வ-5)

## மைத்திரி

காலத்தில் செய்து கொள்ளப்பட்ட சில உடன்பாடுகள் குறித்தும், இந்தச் சந்திப்பில் ஆராயப் பட்டதாகவும் கொழும்பு ஆங்கில ஊடகத்தில் செய்தி யில் குறிப்பிடப்பட் டுள்ளது. (த-வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருத்து

எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார். வடக்கு - கிழக்கில் அமைக்கப்படவுள்ள 65 ஆயிரம் பொருத்து வீட்டுத் திட்டம் தொடர்பில் உங்களது நிலைப்பாடு என்ன என்று கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

**அவர் மேலும் தெரிவிக்கையில்,**

இந்த விடயம் சம்பந்தமாகத்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தன்னுடைய ஆட்சேபனை தெரிவித்துள்ளது. என்னுடைய கருத்தும், பொருத்து வீடுகள் எமது மக்களுக்கு பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கவில்லை. எமது மக்கள் பரம்பரையாகக்கல்லால் மண்ணால் கட்டப்பட்ட வீடுகளில்தான் வாழ்ந்து வந்துள்ளார்கள். அது அவர்களுடைய கலாசாரத்துடன் பின்னிப் பிணைந்த விடயம்.

இவ்விதமான பொருத்து வீடுகள் நாட்டில் எங்கும் கட்டப்படவில்லை. ஜனாதிபதி பிரேமதாச காலத்தில் பல்வேறு வீட்டுத் திட்டங்கள் நாட்டின் பல பகுதிகளில் நிறைவேற்றப்பட்டன. அந்தப் பகுதிகள் எதிலும் பொருத்து வீடு கட்டப்படவில்லை. ஏன் யாழ்ப்பாணத்தில் கட்டப்பட வேண்டும். அதுவும் சாதாரண வீடு கட்டுவதைப் போல் இரண்டு மடங்கு பணம் செலவு செய்ய வேண்டியிருக்கின்றது இந்த வீட்டைக் கட்டுவதற்கு.

கடந்த தடவை அமைச்சரவை கூடிய போது மறுபரிசீலிக்கப்படும் என்று ஜனாதிபதி கூறியதாக நாங்கள் ஊடகங்கள் வாயிலாக அறிந்திருக்கின்றோம். அது விடயம் சம்பந்தமாக நாங்கள் எங்கள் கருத்துக்களை முன்வைத்து நடவடிக்கை எடுப்போம்.

**சம்பூர் அனல் மின் நிலையம்**

சம்பூர் அனல் மின்நிலையம் அமைப்பதற்கு எதிராக மக்கள் தொடர்ச்சியாகப்போராட்டம் நடத்தி வருகின்றனர். இது தொடர்பில் நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள் என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு,

818 ஏக்கர் காணி இலங்கை அரசினால் உயர் நீதிமன்ற வாக்குறுதிகளை மீறி, நாடாளுமன்ற வாக்குறுதிகளை மீறி, முதலீட்டுச் சபையில் ஒப்படைக்கப்பட்டு, முதலீட்டுச் சபையினால் தனியார் நிறுவனத்துக்குக்கொடுத்து, அந்தத் தனியார் நிறுவனம் வேலை ஆரம்பிப்பதற்கு ஒழுங்கு செய்து கொண்டிருந்தது. இது மகிந்த காலத்தில் நடந்தது.

ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர், இவை அனைத்தும் இரத்துச் செய்யப்பட்டன. அந்தக் காணிகள் மக்களிடம் ஒப்படைக்கப்பட்டன. சென்ற வருடம் ஆவணி மாதம் நாடாளுமன்ற தேர்தல் முடிந்து ஒரு வாரத்தினுள் ஜனாதிபதிசம்பூருக்கு வந்து காணிகளைத் திருப்பி ஒப்படைத்தார். அந்தக் காணிகளில் மக்கள் குடியமர்ந்துள்ளனர். 238 ஏக்கர் காணியில் நிரந்தரமாக கடற்படை முகாம் அமைக்கப்பட்டிருந்தது. அந்த கடற்படை முகாம் அகற்றப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

அதற்கு மேலதிகமாக 500 ஏக்கர் காணி அனல்மின்நிலையத்துக்கு ஒதுக்கப்பட்டது. அதில் இற்றை வரையில் ஒரு மாற்றமும் இல்லை. அந்தக் காணியில் வசித்தவர்கள் 7 பேர். அவர்களுக்கு வேறு இடங்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் சம்பூர் மக்கள் கூறுகின்றார்கள் அனல் மின் நிலையம் அமைக்கப்பட்டால் தங்களுக்கு பல பாதிப்புக்கள் ஏற்படும் என்று. அதில் உண்மையில்லை என்று எவரும் கூற முடியாது. அதில் ஓரளவு உண்மை உண்டு. நான் அறிந்த அளவில் கரிய தூசி, பறக்கும் சாம்பல் இவ்விதமான பொருட்கள் வெளியேற்றம் காரணமாக மக்களுக்கு சில பாதிப்புக்கள் ஏற்படலாம். இவை பரிசீலிக்கப்பட வேண்டிய விடயங்கள்.

நுரைச்சோலையை மக்கள் எதிர்த்தார்கள். ஆனால் இன்றைக்கு மக்கள் எதிர்க்கவில்லை. எதிர்த்த பலர் அனல் மின்நிலையத்தில் வேலை பெறுகின்றனர்.

சம்பூர் தொடர்பில் இலங்கை - இந்திய அரசுடன் பேசுவோம். நிபுணர்களுடன் பேசுவோம். மக்களுடன் பேசுவோம். எல்லோருடனும் பேசி கலந்தாலோசித்து முடிவெடுக்கப்படும் - என்றார்.

(த-வ-5)

## மகிந்த

பிரசன்னம் குறைக்கப்பட வேண்டும். இராணுவம் தங்களுடைய மேற்பார்வையில், தங்கள் பாதுகாப்புக்குக்கூட பயன்படுத்தாத காணிகளை வைத்திருக்கின்றார்கள். அந்தக் காணிகளை மக்களும் பயன்படுத்த முடியாத நிலை மையில் தாங்களும் பயன்படுத்தாமல், பாதுகாப்பு தவிர்ந்த ஏனைய கருமங்களுக்கு பாவிக்கின்றார்கள். அந்த நிலைமை தொடரக் கூடாது.

ஆனால் மைத்திரிபால சிறிசேன அல்லது தற்போதைய அரசினால் ஒன்றும் செய்யப்படவில்லை என்று சொல்ல மாட்டேன்.

மகிந்த ஆட்சி இருந்திருந்தால் இது நடந்திருக்காது. இதைப் போல நிலைமை பத்து மடங்கு அல்ல நூறு மடங்கு மோசமடைந்திருக்கும். இதனை எமது மக்கள் உணர வேண்டும்.

இன்றைக்கு அவர்கள் பெரும்பான்மையின மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சிக்கின்றார்கள். நாட்டின் பாதுகாப்புக்கு குந்தமாக, இந்த அரசு செயற்படுகின்றது என்று. ஆனபடியால் அவர்களும் கவனமாகச் செயற்பட வேண்டிய தேவை இருக்கின்றது. இருப்பினும் எமது மக்களின் கஷ்டங்கள் தொடர முடியாது.

காணிகளில் மக்கள் குடியேற வேண்டும். காணி பாதுகாக்கப்பட்டால் மற்ற விடயங்கள் நடைபெறும் - என்றார்.

(த-வ-5)


### மரண அறிவித்தல்

**ஜீவராணி (தேவி) நந்தகுமார்**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10 | 15 |
| 01 | 04 |
| 1970 | 2016 |



கண்டியைப் பிறப்பிடமாகவும் நாவற்குழி, கொழும்பை வசிப்பிடமாகவும் தற்போது யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தவருமான ஜீவராணி நந்தகுமார் கடந்த (15.04.2016) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா மற்றும் பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிங்காரவேல்-லட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், நந்தகுமாரின் பாசமிகு மனைவியும், ஜெயாலன், கவிப்பிரியா, சச்சின் ஆகியோரின் தாயாரும், நடராசா, மகேந்திரன் (கனடா), திருமதி ரஞ்சனதாஸ், மகேஸ்வரி, செல்வராஜா (லெபனான்), தியாகராஜா (லண்டன்), முரளிதரன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுப்பிரமணியம்-தனலட்சுமி, கனகரத்தினம், சுப்பிரமணியம்-பார்வதி, தம்பிராசா, சந்திரசேகர், கனகசுந்தரம்-கோகுலதேவி, கதிரவேல் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.04.2016) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 3.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**81/14A, பிறவுண் வீதி,**
**கொக்குவில்.**
**021 222 9243**

தகவல்:
**குடும்பத்தினர்.**

### மரண அறிவித்தல்கள்

**இரத்தினசிங்கம் துரைசிங்கம்**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 22.06.1959 | 17.04.2016 |



தாவடி தெற்கை வசிப்பிடமாக கொண்ட இரத்தினசிங்கம் துரைசிங்கம் நேற்று(17.04.2016) ஞாயிற்றுக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம்-கண்மணி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நடராசா-ராசாத்தி தம்பதிகளின் அன்பு மருமகனும் லோகேஸ்வரியின் அன்புக் கணவரும் வினோ, ஜென்சிகா, சஞ்ஜீவன், யோபிகா (ஜேர்மனி), கேஸ்ரீபன், அபின்ஷிகா ஆகியோரின் தந்தையாரும் குரு, நிரோஜியன், கிருபாகரன் (ஜேர்மனி),ஆகியோரின் மாமனாரும் இராசேஸ்வரி (மலேசியா), பாலசிங்கம் (ஜேர்மனி), வீரசிங்கம், சர்வேஸ்வரி, பூலோகசிங்கம் (கனடா), யோகேஸ்வரி,நகுலேஸ்வரி (கனடா), சிறிகாந்தன் (கனடா) ஆகியோரின் சகோதரரும் ஐஸ்வரியன், தட்ஷாயினி, நிலோஷியா, வைஸ்ணவி, ஷாமினா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.04.2016) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பாடசாலை வீதி,**
**தாவடி தெற்கு,**
**கொக்குவில்.**

தகவல்
**உறவினர்கள்.**

## குணசிங்கம் கருணாநிதி (கண்ணன்)

(பொது சுகாதார பரிசோதகர் மலேரியா தடுப்புப் பிரிவு பண்ணை யாழ்ப்பாணம்)



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வட்டு தெற்கு வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட குணசிங்கம் கருணாநிதி 17.04.2016 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குணசிங்கம்-மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சபாநாயகம்- கமலாதேவி தம்பதியரின் பாசமிகு மருமகனும் சரோஜாதேவியின்(முகாமையாளர் வாழ்வின் எழுச்சி திணைக்களம் பிரதேச செயலகம்- சங்கானை) அன்புக் கணவரும் சிவகணா, மாதங்கி (மாணவர்கள் யாழ்ப்பாணக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அபிராமி(லண்டன்),செந்தில்நிதி(லண்டன்), கலைமதி (உரும்பிராய்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் துசாந்தி (லண்டன்), ரவீந்திரன் (உரும்பிராய்) சிவகுமார் (ஓய்வு நிலை வர்த்தக வங்கி உத்தியோகத்தர் யாழ்ப்பாணம்), றாகினி, சிவபாலன் (ஓய்வுநிலை முகாமைத்துவ உதவியாளர் சங்கானைப் பிரதேசசெயலகம்), றசினா, சந்திரசேகரன் (லண்டன்), சிவதேவி (லண்டன்), விக்கினேஸ்வரன் (ஜேர்மனி), கேமா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் திவ்ஜா, நிவேதா, விஜயராகவன் ஆகியோரின் அன்பு சிறிய தந்தையும் கஜானி, தேனுஜா, கஸ்தூரி, பிரணவன், கோகுலன், சாமினி, அபிலாஷ்,தனுசிதா, சாருகா, துளசிகா அகியோரின் பாசமிகு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.04.2016) திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மூளாய் வீதி,**
**(விளாத்தித் தோட்ட வீதி)**
**வட்டுக்கோட்டை.**

தகவல்
**குடும்பத்தினர்.**

## பஸ்தியாம்பிள்ளை சோமசுந்தரம்



மூளாயைப் பிறப்பிடமாகவும் கொழும்புத்துறை 2ஆம் குறுக்கை, வசிப்பிடமாகவும் கொண்ட பஸ்தியாம்பிள்ளை சோம சுந்தரம் கடந்த (16.04.2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பஸ்தியாம்பிள்ளை -மாரிமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் பூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கமலாம்பிகையின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவகளான நாகலிங்கம், பரிமளம், இரத்தினம் மற்றும் புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகேதரரும், காலஞ்சென்றவர்களான யோகசுந்தரம், கமலநாதன் மற்றும் ஞானாம்பிகை, சந்திரசேகரம், சற்குணமலர், மோகனமூர்த்தி, சிவசுந்தரம் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், காலஞ்சென்றவர்களான கமலாநந்தன், சிறிஸ்கந்தராசா மற்றும் சந்திரமலர் ஆகியோரின் அன்பு மாம னும், சாந்தி, பார்த்தீபன், சுமதி, ஆதவன், செல்வி, ஆதித்தன், விஜேந்தினி, கஜேந்தன், பாணுஜன், லேனுஜா ஆகியோரின் பாச மிகு பேரனும், சாரங்கன், சாருஷா, சாருஜன், அற்புதா, அபிநயன், வாகீசன், ஆரதி, ஆர்த்தனா, ஆருண்யா, ஆதீசனன், ஆரூரன் ஆகியோரின் அன்புப் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (17.04.2016) ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்று பூதவுடல் துண்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**24/3, 2ஆம், குறுக்கு வீதி,**
**கொழும்புத் துறை,**
**யாழ்ப்பாணம்.**

தகவல்:
**சோ. சிவசுந்தரம் (சமூக சேவைகள் திணைக்களம், வட மாகாணம்)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 19 வயது மாகாண மட்டத் துடுப்பாட்டம் இலங்கை அணியைப் பலப்படுத்துவதற்கு

யாழ்ப்பாணம், ஏப். 18
19 வயதுக்கு உட்பட்ட சிறந்த தேசிய அணியை உருவாக்கும் நோக்கத்துடனும், இலங்கை தேசிய அணிக்கான எதிர்கால நட்சத்திரங்களைத் தெரிவு செய்யும் நோக்கத்துடனும் இலங்கைக் கிரிக்கெட் சபையினால், மாகாணங்களின் 19 வயதுக்கு உட்பட்ட அணிகளுக்கு இடையில் தொடர் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

நாளை தொடக்கம் மே மதம் 12ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்தத் தொடரில் 10 அணிகள் கலந்து கொள்ளவுள்ளன. வடமாகாணத்தை பிரதிநிதித்துவம் செய்யும் அணிக்கு ஜெனி பிளெமிங் தலைமை தாங்குகிறார். ஏனைய வீரர்களாக யதுசன், கபில்ராஜ், தேவபிரசாத், தசோபன், ஜறோசன், கோமேதகன், மதுசன், ரீதீசன், உசாங்கன், அபிசன், சூரிய காந்தன், எம்.விதுசன் ஆகியோர் இடம்பிடித்துள்ளனர். இவர்களில் 11 வீரர்கள் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த வீரர்களாவர். வவுனியாவில் இருந்து இருவர் இடம்பிடித்துள்ளனர். கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களில் இருந்து தலா ஒவ்வொரு வீரர்கள் இடம்பிடித்துள்ளனர். இதன்படி கிளிநொச்சியில் இருந்து எம்.விதுசனும், மன்னாரில் இருந்து சூரியகாந்தன், வவுனியாவில் இருந்து அபிசன், உசாங்கன் ஆகியோரே இவ்வாறு இடம்பிடித்த ஏனைய மாவட்ட வீரர்களாவர். முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து எந்தவொரு வீரருக்கும் அணியில் இடம் கிடைக்கவில்லை.

வடமாகாணம் எதிர்வரும் 19ஆம், 20ஆம் திகதிகளில் ஊவா மாகாணத்துடனும், 28ஆம், 29ஆம் திகதிகளில் மேல் மாகாண வடக்கு அணியுடனும், மே மாதம் 2ஆம் 3ஆம் திகதிகளில் வடமேல் மாகாணத்துடனும், மே மாதம் 6ஆம் 7ஆம் திகதிகளில் மேல் மாகாண மத்திய அணியுடனும் மோதவுள்ளது.

சப்பிரகமுவ மாகாணத்தில் பெரிய அளவு கிரிக்கெட் வளர்ச்சி இல்லாதமையால் இரத்தினபுரி மாவட்ட வீரர்கள் அந்த மாகாணத்தையும் பிரதிநிதித்துவம் செய்யவுள்ளார்கள். கலந்துகொள்ளும் வீரர்களில் திறமையான சில வீரர்கள் இனங்காணப்பட்டு இலங்கை அணியின் அடுத்த தொடர்களில் இடம்கொடுக்கப்படும் என்று இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் திலங்க சுமதிபால அறிவித்துள்ளார். இதன்படி ஆகச் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தும் இளம் வீரர்களுக்கு ஆஸ்திரேலிய மற்றும் தென்னாபிரிக்க அணிகளுடனான தொடர்களில், வாய்ப்பு வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

19 வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக் கிண்ணத் தொடர் நடப்பு வருடத்தின் முதல் வருடாவருடம் நடைபெறவுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், மாகாணங்களுக்கு இடையில் நடத்தப்படும் இந்தத் தொடர் ஆசியக் கிண்ணத்துக்கு பெரும் உதவியாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(ம-23)

## ஞானஒளி, மெலிஞ்சிமுனை இளைஞர் கழகங்கள் இறுதியில்

யாழ்ப்பாணம், ஏப். 18
ஊர்காவற்றுறை பிரதேச இளைஞர் சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் மோதுவதற்கு கரம்பொன் ஞானஒளி இளைஞர் கழக அணியும் மெலிஞ்சிமுனை இருதய இளைஞர் கழக அணியும் தகுதி பெற்றுள்ளன.

ஊர்காவற்றுறை பொது விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதியாட்டங்களில் முதலாவதாக இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் கரம்பொன் ஞானஒளி இளைஞர் கழக அணியை எதிர்த்து தம்பாட்டி காந்திஜி இளைஞர் கழக அணி மோதிக் கொண்டது. இதில் கரம்பொன் ஞானஒளி இளைஞர்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் ஊர்காவற்றுறை வளாகம் இளைஞர் கழக அணியை எதிர்த்து மெலிஞ்சிமுனை இருதய இளைஞர் கழக அணி மோதிக் கொண்டது. இதில் மெலிஞ்சிமுனை இருதய இளைஞர் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ம-23)

## இளவாலை மத்தி, நவஜீவன்ஸ் அணிகள் வளர்மதி கரப்பந்தாட்டத்தில் சம்பியனாகின

யாழ்ப்பாணம், ஏப். 18
கரவெட்டி கிழக்கு வளர்மதி விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்திய கரப்பந்தாட்டத் தொடரில், செற்றப் முறையிலான ஆட்டத்தில் இளவாலை மத்திய விளையாட்டுக்கழக அணியும், ஓவர் கேம் முறையிலான ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணியும் சம்பியனாகின.

சித்திரை புத்தாண்டை முன்னிட்டு நடத்தப்பட்ட இந்தத் தொடரின் இறுதியாட்டங்கள், கடந்த வியாழக்கிழமை நடைபெற்றன. செற்றப் முறையிலான ஆட்டத்தின் இறுதியாட்டத்தில் இளவாலை மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் இளவாலை மத்திய விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது. தொடர்ந்து இடம்பெற்ற ஓவர் கேம் முறையிலான ஆட்டத்தின் இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வரணி இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. இதில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி 42:40 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றுச் சம்பியனானது. (ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஏப். 18

**அல்ஹிஜிரா வி.கழகத் தொடர்**
வவுனியா அல்ஹிஜிரா விளையாட்டுக் கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய அஷ்ரப் ஞாபகார்த்த மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மருதநிலா அணியை எதிர்த்து சண் சைய்ன் அணி மோதவுள்ளது.

**விக்ரோறி வி.கழகத் தொடர்**
மூளாய் விக்ரோறி விளையாட்டுக்கழகம் அமரர் ராகவன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் மூளாய் விக்ரோறி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சில்வேஸ்ரார் அணியை எதிர்த்து உடுப்பிட்டி சிவகுமரன் அணி மோதவுள்ளது.

**நாமகள் வி.கழகத் தொடர்**
தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 53ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் நாமகள் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் 3ஆம் சுற்று ஆட்டங்கள் நாமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து உடுப்பிட்டி புத்தூர் கலைமதி அணி மோதவுள்ளது. (ம-23)

## வென்றது அல்இக்பால்

யாழ்ப்பாணம், ஏப். 18
வவுனியா அல்ஹிஜிரா விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் அல் இக்பால் அணி வெற்றிபெற்றுள்ளது.

விலகல் முறையிலான இந்தத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய அஷ்ரப் ஞாபகார்த்த மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அல்இக்பால் அணியை எதிர்த்து லயன்ஸ் அணி மோதிக் கொண்டது. இதில் அல்இக்பால் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

# கிண்ணத்தை தனதாக்கியது டயமன்ஸ் கரவைச்சுடரின் கால்பந்தாட்டத் தொடரில்

மாங்குளம், ஏப். 18
கரவைச் சுடர் விளையாட்டு கழகம் தனது 45ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் டயமன்ஸ் அணி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துள்ளது.

கரவைச்சுடர் வி.கழக மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் வதிரி டயமன்ஸ் அணியை எதிர்த்து கொற்றாவத்தை சிறி அம்பாள் அணி மோதியது. ஆட்டத்தின் ஆரம்பத்திலேயே பலமான போராட்டத்தை வெளிப்படுத்தியது டயமன்ஸ். இதன் பயனாக 3ஆவது நிமிடத்தில் அந்த அணியின் சார்பாக முதல் கோல் பதிவானது. பின்னர் சிறி அம்பாள் டயமன்ஸுக்கு நிகராக ஈடுகொடுத்தது. இதனால் கோல் கணக்கில் மாற்றம் இல்லாமல் 1:0 என்ற டயமன்ஸின் ஆதிக்கத்துடன் முடிவடைந்தது முதல் பாதி.

இரண்டாம் பாதியின் 3ஆவது, 11ஆவது நிமிடங்களில் டயமன்ஸின் சார்பாக கோல்கள் பதிவாக அந்த அணியின் வெற்றி கிட்டத்தட்ட உறுதியானது. சிறி அம்பாள்அணியால் பதில் கோலைப் பதிவுசெய்ய முடியாது போக முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது டயமன்ஸ்.



இதில் சிறந்த கோல்காப்பாளர், நன்னடத்தை வீரருக்கான விருதுகளை சிறி அம்பாள்அணியின் கோகுலன் பெற்றுக்கொண்டார். ஆட்ட நாயகனாக டயமன்ஸ் அணியின் மது சுதனன், தொடராட்ட நாயகனாக டயமன்ஸ் அணியினைச் சேர்ந்த துசிகரன், வளர்ந்து வரும் வீரராக கரவைச்சுடர் அணியின் ராதா இருவரும் தெரிவானார்கள். நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் அகிலதாஸ் கலந்து கொண்டார்.

(ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிண்ணம் வென்றது சங்கானை

யாழ். மாவட்ட பிரதேச செயலக கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான துடுப்பாட்டத் தொடரில் சங்கானை பிரதேச செயலக அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது.

நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் சங்கானை பிரதேச செயலக அணியை எதிர்த்து கரவெட்டி பிரதேச செயலக அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய சங்கானை பிரதேச செயலக அணி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்களில் இலக்குகள் எதனையும் இழக்காமல் 86 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ரஜிதா 51 ஓட்டங்களையும், தேனுஜா 21 ஓட்டங்களையும் பெற்றனர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கரவெட்டி பிரதேச செயலக அணி நிர்ணயிக்கப்பட்ட 5பந்துப் பரிமாற்றங்களில் இரண்டு இலக்குகளை இழந்து 41 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. அதிகபட்சமாக தர்மினி 23 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் சங்கானை பிரதேச செயலக அணியின் சார்பாக டிலானி, பிரியங்கா இருவரும் தலா ஓர் இலக்குகளைக் கைப்பற்றினர். நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் கலந்து கொண்டார். (ம-422)



# வெற்றிக்குத் திரும்பியது கிங்ஸ் லெவின் பஞ்சாப்

ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற பஞ்சாப்- புனே அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் 6 இலக்குகளால் வெற்றிபெற்றது பஞ்சாப்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற புனே முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. சகல துறை வீரர்கள் அணிக்குத் தேவை என்று டோனி ஏற்கனவே தெரிவித்திருந்தார். இதனால் நேற்றைய ஆட்டத்தில் பெரேரா, இர்பான் இருவரும் அணிக்குள் இணைக்கப்பட்டிருந்தனர். களத்தில் ரகானே மற்றும் பிளாசிஸ். ஆரம்பம் சறுக்கியது. ஒன்பது ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ரகானே. பிளாசிஸ், பீற்றர்சன் இருவரும் இணைய மேலதிக இலக்கை இழக்காமல் பெரும் இலக்கை நிர்ணயிக்கக்கூடிய அடித்தளம் கண்டது புனே. 15 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார் பீற்றர்சன். பீற்றர்சன் ஆட்டமிழந்த பிற்பாடு பிளாசிஸின் ஆட்டத்தில் சிறிது தொய்வு ஏற்பட்டது. மத்திய வரிசையில் களமிறக்கப்பட்ட பெரேராவால் முடிந்தது வெறும் ஒன்பது ஓட்டங்கள் மட்டுமே. பிளாசிஸுடன் நிலைத்து நின்றார் ஸ்ரீவ் சிமித். 42 பந்துகளில் அரைச்சதம் கடந்தார் பிளாசிஸ். அவர் இந்த அரைச்சதத்தை 30 தொடக்கம் 35 பந்துகளுக்குள் எட்டியிருந்தால் புனேக்கு இன்னும் சிறப்பாக இருந்திருக்கும். சிமித், பிளாசிஸ் இருவரையும் இருக்கைக்குத் திரும்பினார் மொகித் சர்மா. டோனியாலும் தாக்கத்தை ஏற்படுத்த முடியாது போக முடிவில் புனே 152-7.

பந்துவீச்சில் பஞ்சாப் சார்பாக மொகித் சர்மா 3 இலக்குகளையும், சன்டீப் சர்மா இரு இலக்குகளையும், அப்பொட் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கியது பஞ்சாப். அந்த அணியின் ஆரம்ப வீரர்களான முரளி விஜய், வோக்ரா இருவருமே பஞ்சாப்பின் வெற்றியை கிட்டத்தட்ட உறுதி செய்துவிட்டனர். இலக்குச் சரிவில்லாமல் 50 ஓட்டங்களை எட்டியது பஞ்சாப். 33 பந்துகளில் அரைச்சதம் கடந்தார் வோக்ரா. பஞ்சாப் 97 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 51 ஓட்டங்களுடன் வோக்ராவின் இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது. மார்ஷ், மில்லர் இருவரையும் அடுத்தடுத்து வெளியேற்றினார் எம்.அஸ்வின். 53 ஓட்டங்களுடன் முரளிவிஜயின் ஆட்டம் நிறைவுக்கு வந்தது. முரளி விஜய் அரைச்சதம் கடந்திருந்தாலும் இவரது இன்னிங்ஸ் புனேக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. ஏனெனில் அவர் இந்த ஓட்டங்களைப் பெறுவதற்காக 49 பந்துகளை எதிர்கொண்டிருந்தார். இறுதி மூன்று பந்துப்பரிமாற்றங்களில் 32 ஓட்டங்கள் பெறப்பட வேண்டும் என்ற நிலைமை. புனேயின் கைகளுக்குள்ளும் ஆட்டம் இருந்தது. ஆனால் அடுத்தடுத்து சிக்சரையும், பவுண்டரியையும் விளாசி வெற்றியுடன் முடித்தார் மக்ஸ்வெல். பந்துவீச்சில் புனே யின் சார்பாக எம்.அஸ்வின் 3 இலக்குகளையும், அன்கிட் சர்மா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ம)

# விடைபெறுகிறார் ஹேரத்

சர்வதேச ஒருநாள் மற்றும் ரி-20 ஆட்டங்களில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார் இலங்கையின் நட்சத்திர பந்துவீச்சாளரான ஹேரத்.

ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் இலங்கையைப் பிரதிநிதித்துவப் படுத்திய ஹேரத், குறித்த தொடர்தான் மட்டுப்படுத்தப்பட்ட பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட ஆட்டத்தில் தனது கடைசி தொடராக இருக்கலாம் என்று முன்னறிவித்திருந்தார். இருப்பினும் இலங்கைக் கிரிக்கெட் சபையுடன் கலந்தாலோசித்த பின்னர் இறுதி முடிவை அறிவிப்பதாகவும் தெரிவித்திருந்தார். இந்த நிலையில் அவர் தனது ஓய்வு அறிவிப்பை நேற்று வெளியிட்டுள்ளார். இருப்பினும் டெஸ்ட் ஆட்டங்களில் அவர் தொடர்ந்தும் இலங்கையை பிரதிநிதித்துவம் செய்யவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். (ம)



# வொலிகிங்ஸ், பாரதி அணிகளுக்கு வெற்றி

யாழ்ப்பாணம், ஏப். 18

மூளாய் விக்ரோறி விளையாட்டுக்கழகம் அமரர் ராகவன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் மின்னொளியிலான கரப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் வொலிகிங்ஸ், பாரதி அணிகள் வெற்றிபெற்றன.

ஆட்டங்கள் மூளாய் விக்ரோறி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் கச்சாய் வொலி கிங்ஸ் அணியை எதிர்த்து நீர்வேலி காமாட்சி அணி மோதிக் கொண்டது. இதில் கச்சாய் வொலி கிங்ஸ் அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் நாயன் மார்கட்டு பாரதி அணியை எதிர்த்து கச்சாய் வொலி கிங்ஸ் அணி மோதிக் கொண்டது. இதில் நாயன்மார்கட்டு பாரதி அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## ஐக்கியம், ஜோசப் அணிகள் வென்றன

மன்னார் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் ஐக்கியம், சென். ஜோசப் அணிகள் வெற்றிபெற்றுள்ளன.

இரவு 7மணிக்கு இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் தோட்ட வெளி ஐக்கிய அணி தேவன்பிட்டி சென். சேவியர் அணியை 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து இரவு 8.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் அடம்பன் ஐக்கிய அணியை எதிர்த்து சென்.ஜோசப் அணி மோதிக் கொண்டது. இதில் சென்.ஜோசப் அணி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)



# தெல்லிப்பழை இறுதிக்குத் தகுதி

கரணவாய், ஏப். 18

யாழ். பிரதேச செயலகங்களுக்கு இடையில் நடத்தப்பட்டுவரும் கபடித் தொடரில் பெண்கள் பிரிவில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி இறுதிக்குத் தகுதி பெற்றுள்ளது.

நெல்லியடி மத்திய கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்ற இந்த அரையிறுதியாட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியும் பருத்தித்துறை பிரதேச செயலக அணியும் பலப்பரீட்சை நடத்தின. முதல் பாதியில் 15:13 என்ற புள்ளிகளின் அடிப்படையில் பருத்தித்துறை பிரதேச செயலகம் முன்னிலையில் இருந்தாலும் இரண்டாம் பாதியில் ஆதிக்கம் செலுத்தியது தெல்லிப்பழை. இதனால் அந்த அணி முடிவில் 34:32 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத்தகுதி பெற்றது. (ம-108)

# ஐ.பி.எல். கிண்ணம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்ஸ்வெல்லுக்கு கண்டனம்

ஐ.பி.எல். தொடரில் பஞ்சாப்–டெல்லி அணிகள் மோதிய ஆட்டத்தில் நடுவரின் தீர்ப்புக்கு மறுப்பு தெரிவித்த பஞ்சாப் அணியின் அதிரடி வீரர் மக்ஸ்வெல்லுக்கு, குறித்த ஆட்டத்தின் நடுவர் ரொஷான் மகாநாம கண்டனம் தெரிவித்துள்ளார்.

குறித்த ஆட்டத்தில் 3 பந்துகளை மட்டுமே சந்தித்த நிலையில், மக்ஸ்வெல் பிராத்வெய்டிடம் பிடிகொடுத்து ஓட்டமெதனையும் பெறாமல் வெளியேறினார். நடுவரின் தீர்ப்புக்கு மறுப்பு தெரிவிக்கும் விதமாக அவர் நடந்து கொண்டதால்,மகாநாம அவருக்குக் கண்டனம் தெரிவித்துள்ளார். (ம)

# ஜடேயா திருமணத்தில் துப்பாக்கி வேட்டு



இந்திய கிரிக்கெட் அணியின் சகல துறை வீரரான ஜடேயாவின் திருமணம் நேற்று நடைபெற்றது. இந்தக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக துப்பாக்கிவேட்டு நடத்தப்பட்டமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.ரவீந்திர ஜடேயாவுக்கும், ராஜ்கோட்டையைச் சேர்ந்த பொறியாளர் ரீவா சோலங்கிக்கும் நேற்று ராஜ்கோட்டில் திருமணம் நடைபெற்றது. இந்தத் திருமணக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, அவரது உறவினர்களால் துப்பாக்கிவேட்டு நடத்தப்பட்டது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இதுகுறித்து பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து,இச்சம்பவம்பற் றி ராஜ்கோட் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். உரிமம் பெற்ற துப்பாக்கியாக இருந்தாலும், தற்காப்புக்காக மட்டுமே சுட வேண்டும் என்பது சட்ட நடைமுறை என்றும், இந்த நடைமுறைகளை மீறும் போது 3 ஆண்டுகள் வரை தண்டனை கிடைக்கச்சட்டத்தில் வழிவகை உள்ளதாகக் கூறப்படுகிறது. (ம)

காணி தேவை
யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இடங்களில் 35முதல் 75 ஏக்கர் காணி தேவை.
தொடர்புகளுக்கு: 071 454 6960

FLC FRENCH LANGUAGE CENTRE FOR BETTER FRENCH
பிரெஞ்சு மொழி வகுப்பு
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French·
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் எம்மிடமே கற்கின்றனர்.
விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)
DELF A1, A2 Exam இல் 100 % சித்தி.. 1079 மாணவர்கள் French கற்றுள்ளனர்....
DELF A1,A2,B1 வகுப்புக்கள் ஆரம்பம் உடன் பதியுங்கள்...
No. 40, பலாலி வீதி, இலுப்பையடி.
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம் : 23.04.16 சனி 08 am.
பிரதான வீதி, நெல்லியடி
TP: 021 3202973
ஆரம்பம்: 25.04.16 Mon@ 4pm.
ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → அப்பலோ Hospital → FLC

திறப்புவிழா அழைப்பு
நிகழும் துர்முகி வருட ஆரம்பத்தில் இன்று (18.04.2016) திங்கட்கிழமை
காலை 9.05 மணிக்கு 10.35 மணிக்கும் இடையில் உள்ள
சுபவேளையில் எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற
"சண்ஜெயா"
உணவகத்தின் முதற்கிளையை கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியில்
"AKR" கட்டடத்தில் ஆரம்பித்துவைக்க உள்ளோம்என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
முக்கிய குறிப்பு: இவ் அழைப்பை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
"Sunjeya Foodland"
"AKR" Building, Karadippokku Junction,Kilinochchi
T.P.: 021 390 0110 / 077 7474 111



# பெங்களூரில் கொடியேற்றியது டெல்லி
## ஹொக்கின் அபார சதம் கைகொடுக்க

ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற பெங்களூர்–டெல்லி அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் 7 இலக்குகளால் வெற்றிபெற்றது டெல்லி.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற டெல்லி முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. ஆரம்ப வீரர்களாக கெயில் மற்றும் கோக்லி. கெயிலால் ஓர் ஓட்டத்தைத் தானும் பெறமுடியவில்லை. அணியின் ஓட்டங்கள் ஆரம்பிக்கப்பட முன்னர் இலக்குச் சரிவு ஆரம்பித்து விட்டது. கோக்லியுடன் இணைந்தார் வில்லியர்ஸ். இருவரும் இணைந்து டெல்லிக்கு வில்லனானார்கள். வழக்கம் போல் அடித்தாடினார் வில்லியர்ஸ். இலக்குச் சரிவு ஏற்படாது காத்து நின்றார் கோக்லி. ஐந்தே பந்துப்பரிமாற்றங்களில் 50 ஓட்டங்களை எட்டியது பெங்களூர். அடிக்கொரு தடவை பதிவுசெய்யப்பட்ட பவுண்டரிகளுடன் 25 பந்துகளில் வில்லியர்ஸின் அரைச்சதம் பதிவானது. 55 ஓட்டங்களுடன் வில்லியர்ஸை வெளியேற்றினார் பிரீத்வைட். வில்லியர்ஸை விட அச்சுறுத்தினார் கோக்லி. சகீர்கானின் பந்துவீச்சும் மிச்சமில்லை. அத்தனை பேரினதும் பந்துப்பரிமாற்றங்களைப் பிரித்து மேய்ந்தார். 19 பந்துகளில் 3 சிக்சர்கள் அடங்கலாக 33 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார் வற்சன். சர்பிரஸ்கான் பெரிதாக இல்லை. 79 ஓட்டங்களுடன் கோக்லியின் இன்னிங்ஸை நிறைவுசெய்தார் மொகமட் சமி. ஆரம்பத்துடன் ஒப்பிடுகையில் பெங்களூர் 200 ஓட்டங்களை எட்டியிருக்க வேண்டும். ஆனால் இறுதி இரு பந்துப்பரிமாற்றங்களில் 13 ஓட்டங்களே பெறப்பட்டன. இதனால் பெங்களூரின் இன்னிங்ஸ் 191-5 என்றவாறாக முடிவுகண்டது.

பந்துவீச்சில் டெல்லி சார்பாக மொகமட் சமி 2 இலக்குகளையும், சகீர்கான், பிரீத்வைட் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு களமிறங்கியது டெல்லி. அரவிந் வீசிய முதல் பந்துப்பரிமாற்றத்தின் முதல் பந்தையே பவுண்டரிக்கு அனுப்பி தனது மிரட்டலை ஆரம்பித்தார் குயின்டன் டி ஹொக். ஆனால் மறுமுனையில் ஓட்டமெதனையும் பெறாது ஆட்டமிழந்தார் ஐயர். 14 பந்துகளில் 9 ஓட்டங்களை எடுத்து பவிலியன் திரும்பினார் சாம்சன். சாம்சனின் இன்னிங்ஸால் டெல்லிக்கு நெருக்கடி அதிகமானதே மிச்சம். தனியொரு நபராக சவாலை சமாளித்துக் கொண்டிருந்த ஹொக்கிற்கு கைகொடுத்தார் நாயர். ஹொக், நாயர் இணைய மூன்றாவது இலக்கை இழக்காமல் நூறு ஓட்டங்களை எட்டியது டெல்லி. வெறுமனே 22 பந்துகளை எதிர்கொண்டு அரைச்சதத்தைப் பதிவு செய்தார் குயின்டன் டி ஹொக். நாயரின் ஆட்டத்தில் பெரிதான விளாசல்கள் இல்லாவிடினும் இலக்குச் சரிவை ஏற்படாமல் காத்து நின்றதே பெரிய விடயம். இறுதி ஐந்து பந்துப்பரிமாற்றங்களில் 45 ஓட்டங்கள் பெறப்பட வேண்டும் என்ற நிலைமை. இணைப்பாட்டமாக 100 ஓட்டங்கள் பெறப்பட்டன. ஹொக்கின் சதமும் டெல்லியின் வெற்றியும் நெருங்கிக் கொண்டிருந்தன. அரைச்சதம் கடந்தார் நாயர். நடப்பு வருட ஐ.பி.எல். தொடரின் முதலாவது சதம் ஹொக்கின் பெயரில் எழுதப்பட்டது. இதற்காக அவர் 48 பந்துகளை மட்டுமே எடுத்துக்கொண்டார். ஹொக் 108 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தாலும் ஆட்டத்தை வெற்றியுடன் முடித்தார் நாயர்.

பந்துவீச்சில் பெங்களூர் சார்பாக வற்சன் 2 இலக்குகளையும் அரவிந் ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ம)

# வெளியேறியது பார்சிலோனா அணி; சம்பியன்ஸ் லீக் தொடரில் திருப்பம்



சம்பியன்ஸ் லீக் கால்பந்துத் தொடரின் காலிறுதியில் அத்லெட்டிகோ மட்ரிட் அணியிடம் தோல்வியடைந்து தொடரில் இருந்து வெளியேறியது பார்சிலோனா அணி.

ஐரோப்பாவில் சம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடர் நடைபெற்று வருகிறது. இதில் ஸ்பெயினின் மட்ரிட் நகரில் நடந்த காலிறுதி ஆட்டத்தில்,அத்லெட்டிகோ மட்ரிட் – பார்சிலோனா அணிகள் மோதின. இதில் அபாரமாக ஆடிய அத்லெட்டிகோ மட்ரிட் 2:0 என்ற கோல் கணக்கில் பார்சிலோனாவை வீழ்த்தியது.

அத்லெட்டிகோ மட்ரிட் அணியைத் தவிர பேயர்ன் முனிச் (ஜேர்மனி), ரியல் மட்ரிட் (ஸ்பெயின்), மன்செஸ்டர் சிட்டி (இங்கிலாந்து) ஆகிய அணிகள் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.04.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.